கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–14, இதழ் – 10 Volume - 14, Issue - 10	புரட்டாசித் திங்கள் September 2023	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

"Delivered by India Post"

www.indiapost.gov.in

PARVATHY
MULTISPECIALITY HOSPITAL
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்
காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு
மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு
திருமதி கீதா தனது தினசரி வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.
உங்களுக்கும் அதையே நாங்கள் உறுதியளிக்கிறோம்.
12 மணி
நேரத்தில் வீடு திரும்பலாம்
டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை
குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஓரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஓரகடம் - 602 105
Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248

வாழ்த்துகிறோம்

மயிலாடுதுறை அண்ணாநகர் திரு. எஸ். சிவப்பிரகாசம் - திருமதி. எஸ். சுந்தரி மற்றும் கன்னியாகுடி திரு. எஸ். தமிழரசன் - திருமதி. த. கிருபாநிதி இவர்களின் பெயரனும் சென்னை மடிப்பாக்கம் திரு. எஸ். சுகுமார் - திருமதி. எஸ். பூங்குழலி ஆகியோரின் மகனும் செல்வி. எஸ். ஹன்சினி யின் பாசமிகு அண்ணனும் ஆன செல்வன். **எஸ். ஸ்ரீநிஷ்** சென்னை - மாம்பலம் **"சாய் அகடாமி"** 2022 - 2023 - ஆம் ஆண்டு நடத்திய **"Wiz National Spell Bee"** போட்டியில் சென்னை பள்ளிக்கரணை **"San Academy" C.B.S.E.** பள்ளி சார்பாக கலந்து கொண்டு மாநில அளவில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை "சாய் அகடாமி" அகில இந்திய அளவில் நடக்கும் போட்டியில் கலந்து கொள்ளும் செல்வன் **எஸ். ஸ்ரீநிஷ்** மேலும் பல விருதுகள் பெறவும் நம் கார்குல சொந்தங்கள் அனைவரின் ஆசிகளையும் வேண்டுகிறோம்.

எஸ். சிவப்பிரகாசம் **எஸ். சுகுமார்** **எஸ். தமிழரசன்**
எஸ். சுந்தரி **எஸ். பூங்குழலி** **த. கிருபாநிதி**
மயிலாடுதுறை. **எஸ். ஹன்சினி** கன்னியாகுடி.
மடிப்பாக்கம்.

தமிழ்நாடு மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு
காட்டுமன்னார் கோயில் ஒன்றியம்
41-ம் ஆண்டு விழா மற்றும் பாராட்டு, பரிசளிப்பு விழா.

15–8–2023 அன்று காலை, 77–வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு பொறுப்பாளர்கள் முன்னிலையில் தலைவர் திரு. R. பத்மநாபன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. மாலை 5 மணி அளவில் லலித மஹால் மண்டபத்தில் விழா துவங்கியது. ஆண்களுக்கு "உறவினர் எண்ணிக்கை" என்ற போட்டியும், பெண்களுக்கு கோலப் போட்டியும், சிறுவர் சிறுமிகளுக்கு இசை நாற்காலி போட்டியும் நடத்தப்பெற்றது. திருமதியர். வசந்தகுமாரி ஜெயசீலன், திரிபுரசுந்தரி பத்மநாபன், உமாமகேஸ்வரி, விஜயலெட்சுமி ஞானம், கமலா கண்ணன், ஆகியோர் விளக்கேற்றி விழாவை துவக்கினர். திருமதி. விஜயலெட்சுமி ஞானம் அனைவரையும் வரவேற்றார். விண்ணுலகம் சென்ற நம் இன மக்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலர். திரு. V.R. ஞானம் அவர்களின் ஆண்டறிக்கைக்குப் பின், பொருளாளர். திரு. V. ராமகிருஷ்ணன் அவர்களின் வரவு செலவு அறிக்கை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிறப்பு விருந்தினர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

தலைவர் தனது உரையில் உறுப்பினர்களின் ஒற்றுமையைப் பாராட்டினார். நல்லாசிரியர், திரு. செல்வகுமார் மாநில துணைத்தலைவர். திரு. சிவராஜன், திரு. கலியமூர்த்தி, திருமதி. திரிபுரசுந்தரி, திரு. T.S. பாலசுந்தரம், "அன்பு ஆசிரியர்" விருது பெற்ற திரு. K. மதிவாணன், திரு. S. ஜெயசீலன், திருமதி. சித்ரா இளங்கோவன், ஆகியோர் சிறப்புரையாற்றினர். கொடைவள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்களும், திருச்சி சங்க பொன் விழாவிற்கு வந்து ஆசி வழங்கிய தருமபுரம் சன்னிதானம் அவர்களும் பாராட்டப்பட்டனர். நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோர்க்கு பரிசுகள் வழங்கப்பட்டது. 10, 11 மற்றும் 12–ம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசளிக்கப்பட்டது. திருமதி. V. உமாமகேஸ்வரி CUB மேலாளர் அவர்கள் விளக்கேற்றி மகளிர் அணியினைத் துவக்கி உரையாற்றினார். மகளிர் அணி தலைவியாக திருமதி. திரிபுரசுந்தரி அவர்களும், செயலராக திருமதி. விஜயலெட்சுமி அவர்களும் பொருளாளராக திருமதி. சிவசங்கரி அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. மோகன்குமார் தலைவராகவும், திரு. ராஜா செயலராகவும் – திரு. ஜெயக்குமார் பொருளாளராகவும் கொண்டு இளைஞர் அணி, மாநில துணைத்தலைவர் திரு. B. சிவராஜன் அவர்களால் துவக்கப்பட்டது. திருமதி. அ. சிவசங்கரி அவர்களும், திரு. ம. ஞானசபாபதி அவர்களும் தங்களின் இனிமையான குரலில் நிகழ்ச்சிகளை தொகுத்தளித்தனர். திரு. பஞ்சாட்சரம் அவர்களின் நன்றியுரைக்குப் பின் இரவு உணவுடன் உறவினர் அனைவரும் மகிழ்வுடன் இல்லம் திரும்பினர்.

- V.R. ஞானம், செயலர்.
Cell No. 9444876164

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞரணி, மகளிரணி நிர்வாகிகளுடன் விழாக்குழுவினர்

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கம்

ஒன்றுபடுவோம் *உயர்வடைவோம்*

முப்பெரு விழா அழைப்பிதழ்

வணக்கம்,

அன்புடையீர் வருகிற **24-09-2023 ஞாயிற்றுக்கிழமை** காலை 9-00 மணியளவில் சிதம்பரம் அம்மாபேட்டை அருகில் செல்வராஜ் நகரில் அமைந்துள்ள குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்க அரங்கத்தை கார்குல கர்ணன் சென்னை ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனர் மற்றும் தலைவர் திரு. **S. வெங்கடேசம் பிள்ளை** அவர்களின் ஆசியுடன் அவரது நிர்வாக இயக்குனர் திரு. **V.R. செந்தில்குமார் பிள்ளை** அவர்களால் திறக்கப்பட உள்ளது.

அத்திறப்பு விழாவுடன் **சங்கத்தின் 43-வது ஆண்டு விழாவும், நமது நன்கொடையாளர்களுக்கு நன்றி அறிவிப்பு விழாவுமாக முப்பெரு விழா** நடைபெற உள்ளது.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் முனைவர் திரு. **K.K.R. சுரேஷ் (எ) ராஜசுந்தரம் பிள்ளை** மற்றும் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களும் இதர சங்கங்களின் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டு சிறப்பபுரை ஆற்றுவார்கள்.

இவ்விழாவிற்கு தாங்கள் குடும்பத்தார்களுடன் வருகை தந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

A.G. சிவராமன் பிள்ளை
தலைவர்.
9787068062

S. இராமச்சந்திரம் பிள்ளை,
செயலாளர்.
9486455841

R. திலகம்,
பொருளாளர்.
9789412635

G. இராஜேந்திரன் பிள்ளை,
ஒன்றிய பிரதிநிதி.
9894926796

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM

தில்லை நடராஜர் திருவருளால், தில்லை நடராஜர் பெருமானை தரிசிக்க வருகை தரும் யாத்திரிகர்களுக்கும், ஆன்மீக சுற்றுலா பயணிகள் மற்றும் சஷ்டியப்த பூர்த்தி, பீமரதசாந்தி, சதாபிஷேகம் போன்ற சுப நிகழ்ச்சிகளுக்கும் வரும் உறவினர்கள், சிதம்பரம் கனகசபை நகரில் 40 நபர் வரை தங்க ஏதுவாக A/c. வசதியுடன் கூடிய ரூம்கள் உள்ளன. மேலும் குழுவாக தங்குவதற்கு A/c. வசதி இல்லாத கூடமும் உள்ளது. எங்கள் விடுதி பொதுமக்களின் ஏகோபித்த பாராட்டுகளையும் பெற்று வருகிறது. தாங்கள் வந்து தங்கி எங்களது உபசரிப்பினை ஏற்று மகிழுங்கள்.

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கும் "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

FLAT FOR SALE

1. KOTTURPURAM

POSH LIVING AREA

DHANDAYUTHAPANI NAGAR, 1st STREET

1510 Sqft - 3BHK

ONE FLAT IN EACH FLOOR

Aesthetic Interior Wood Work, Modular Kitchen, Power Bakcup

2. VELACHERY

Close to VELACHERY MRTS STATION

860 Sqft - 2 BHK & 1300 - 3 BHK

3. ANAKAPUTHUR

Opp to RAGHAVENDRA TEMPLE - 980 Sqft - 2 BHK

4. KOLAPAKKAM

NEAR VANDALORE ZOO - 800 Sqft - 2 BHK

WE UNDERTAKE

Joint Venture of your property

Construction of Individual House on Total Turn-Key Basis

MALAR HOMES

94440 70108

94443 80012

இதழின் உள்ளே....

கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா – புதுச்சேரி.... 11

ஏடிஎம் தெரியாத விஷயங்கள்..... 13

உடல் தானம்..... 15

மணமகன் / மணமகள் தேவை..... 21–25

சிறுவர் பகுதி..... 27–32

சைபர் குற்றங்கள்.....53

சங்க நிகழ்வுகள்.....57

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு ''கார்காத்தார் ஒப்புரவு'' நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

விவசாயத்தைக் காப்பாற்றுங்கள்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் என்று திருக்குறள் சொல்கிறது

இன்று நமது ஊரில் இருந்து அமெரிக்கா சென்று அங்கு டாலர் கணக்கில் சம்பாதிக்கும் நம்மவர்கள் எல்லாம் அங்குள்ள் இந்தியன் ஸ்டோரில் போய் நம் நாட்டு அரிசிக்காக அலைவது அதை நிரூபிக்கிறது ஆனால் இன்றுஅந்த அரிசியை உற்பத்தி செய்யும் நம் நாட்டு விவ்சாயிகள் துண்டு போட்ட அரசியல் வாதிகள் மற்றும் டை கட்டிய தொழில் அதிபர்கள் பின்னால் தங்கள் மகனுக்கு வேலை வாங்க அலைகின்றனர்

ஒரு அரசியல் வாதி தன் மகனைத் தான் சார்ந்த அரசியல் கட்சியில் சேர்த்து பிற்காலத்தில் அவனும் தன்னைப் போல் ஒரு எம் எல் ஏ அல்லது எம்.பி ஆகி முடிந்தால் அமைச்சராக வேண்டும் என்று நினைக்கிறார் அதே போல் ஒரு டாக்டர் தன் மகனை டாக்டராக்கி தன் ஆஸ் பத்திரியைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார். ஒரு எஞ்சினீயர் வக்கீல் மற்றும் ஆடிட்டர் போன்றவர்களும் தங்கள் பிள்ளைகள் தம் படிப்பையே படித்து தங்களுக்குத் தொழில் வாரிசாகவும் வர வேண்டும் என்று நினைக்கிறார்கள். பெரிய நகைக் கடை முதல் சிறிய மளிகைக் கடை வரை வைத்துள்ள வணிகர்களும் தங்கள் வாரிசுகளை தங்கள் கடைக்காகத் தயார் செய்து விடுகிறார்கள். அரசுத்துறையில் பணியாற்றுபவர்களும் தங்கள் மகனை பிற்காலத்தில் தன்னைப் போல் ஒரு அரசு ஊழியனாக்கி ஓய்வு ஊதியம் உள்ளீட்ட அனைத்து அரசு சலுகைகளையும் பெறுபவனாக்க வேண்டும் என்று முனைகிறார். இதே போல் ஐ டி துறை வருமான வரித்துறை கல்லூரி ஆசிரியர்கள் போன்ற பல் வேறு துறைகளிலும் பணியாற்றுபவர்களும் தங்கள் வாரிசுகளைத் தங்களைப் போல் வரத் தயார் செய்கிறார்கள். இதில் சினிமா நடிகர்களும் விதி விலக்கல்ல

இவற்றுக் கெல்லாம் விதி விலக்காக ஒரு விகூசாயி மட்டும் தன் மகனும் தன்னைப் போல் விவசாயியாக வேண்டும் என்று நினைப்பதில்லை பெரும் பாலான விவசாயிகள் " என்னோடு இந்த

விவசாயத் தொழில் முடியட்டும் என் வாரிசுகள் இந்தத் தொழிலில் ஈடு படக் கூடாது " என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. விவசாயிகளின் வாரிசுகளும் விவசாயப் பணியை விரும்புவதில்லை அரசுப் பணி தொழிற்சாலைப் பணிகளில் சேரவே விரும்புகின்றனர் கிராமங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் பெரும்பாலானோர் இந்தத் தலை முறையுடன் விவசாயத் தொழிலை விட்டு விடும் நோக்கத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது

இதைப் பற்றி இன்னும் விவசாயம் செய்து கொண்டிருக்கும் நம் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சிலரை விசாரித்த போது ஆமாம் அது உண்மைதான் இப்போ தே விவசாயத்துக்கு ஆட்கள் கிடைப்பதில்லை இருக்கும் சில வாரிசுகளுக்கும் முள் வெட்டுதல் வேலி கட்டுதல் தென்னை மரம் ஏறுதல் போன்ற வேலைகள் தெரிவதில்லை ஆசிரியராக வேல பார்த்து ஓய்வு பெற்று பென்ஷன் வாங்குவதாலும் ஊரில் வீடு இருப்பதாலும் நாங்கள் இன்னும் விவசாயத்தில் ஈடு படுகிறோம் இதர வருமானம் இல்லாமல் விவ்சாயத்தை மட்டும் நம்பி கிராமத்துக்கு வர முடியாது என்றனர் அதற்கு அவர்கள் கூறும் காரணங்களில் சில ;–

1 விவசாயத்துக்குப் போதிய நீர் வசதி வடிகால் வசதியும் இல்லாமை
2 அதிக உற்பத்தி செலவு
3 விளந்த பொருட்களுக்கு உரிய விலை இல்லாமை
4 அரசாங்க உதவி இல்லாமை
5 விதை உற்பத்தி மற்றும் விநியோகம் தனியார் கையில் உள்ளதால் அதிக விலை கொடுத்து வாங்கும் நிலை போன்றவை
6 இயற்கைச் சீற்றங்கள்

இவை போல் மேலும் பல சங்கடங்கள் அவற்றுக்கு உரிய நிவாரணம் கிடைக்காவிட்டால பிற் காலத்தில் தனி விவசாயிகளுக்குப் பதில் தனியார் நிறுவனங்கள் தான் விவசாயம் செய்யும் நிலை ஏற்படலாம் அப்படி ஏற்பட்டால் தக்காளியைப் போல் அனைத்து விவசாய உணவுப் பொருட்களின் விலையும் வானுயுர உயரும் வாய்ப்புகள் ஏற்படலாம் இந்த நிலை ஏற்படாமல் தடுக்க விவசாயிகளுக்கு உரிய அங்கீகாரமும் வங்கிக் கடன் மற்றும் அரசு உதவிகளும் வழங்கப்பட வேண்டும் அவற்றை எல்லாம் அளித்து விவசாயத்தைக் காப்பாற்றுங்கள் என்று அரசாங்கத்தையும் விவசாயிகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.
– கார்காத்தார் ஒப்புரவு

கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா - புதுச்சேரி.

புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் கார்குல சொந்தங்கள் 13–08–2023 ஞாயிறன்று சந்திப்பு மற்றும் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவினை மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து அனைவரும் போற்றும் வண்ணம் வெற்றிகரமாக நடத்திய புதுச்சேரி கார்காத்தார் சங்க நிர்வாகிகளுக்கும், தன்னார்வலர்களுக்கும் மற்றும் எனது அருமை கார்குல சொந்தங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கத்தையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் மாநில துணைத்தலைவர் திரு. MAJ. இராஜேந்திரன், மண்டல செயலாளர் திரு. கா. முத்துக்குமாரசாமி, தலைவர். திரு. J. இராஜன்பாபு, செயலாளர் திரு. J. வெங்கடேசன், பொருளாளர் திரு. K. இராஜேந்திரன், துணைத்தலைவர் திரு. ஜி. பத்மநாபன், திரு. சிவமாதவன், மற்றைய உபதலைவர்கள், துணைத்தலைவர்கள், மகளிர் அணி மற்றும் இளைஞர் அணி, சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சென்னை கார்காத்தார் சங்கத்தின் சார்பாக அன்பான வணக்கத்தையும், நெஞ்சார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விழாவில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் சிறப்பாக திட்டமிட்டு எல்லோரும் போற்றும் வண்ணம் செயல்படுத்தப்பட்டுள்ளதுபாராட்டுக்குரியது.எங்களது நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றும் வண்ணம் இந்த இனிய விழா செம்மையுடன் நடைபெற்றது. அதற்கு எங்களது மனமார்ந்த பாராட்டுகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்திய வரலாற்றில் முக்கியத்துவம், வாய்ந்த பல்வேறு சாதனைகளை படைத்த புதுச்சேரி மாநிலம் பாரதியாரும்பாரதிதாசனும்சுதந்திரம்வேண்டிபாடுபட்ட பூமியாகும். இது போன்று பல்வேறு சாதனைகளை படைத்த புதுச்சேரியில் நமது கார்காத்தார் சங்கத்தின் விழாவை முன்னெடுத்து சிறப்பு செய்த இந்த நாள் மிகவும் போற்றுதலுக்குரியது.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பாக இதே புதுச்சேரியில் அன்றைய ஒப்புரவு (இன்றைய கார்காத்தார் ஒப்புரவு) பத்திரிகையை கொண்டாடும் வகையில் விழா எடுத்து சிறப்பித்தவர்கள் இதே புதுச்சேரி கார்காத்தார் சங்க நிர்வாகிகள்தான். அன்றைக்கு புதுச்சேரி கார்காத்தார் சங்க தலைவராக இருந்த நெடுங்காடு முத்தையா பிள்ளையின் தவப்புதல்வர் டாக்டர் மு. ஆறுமுகம் பிள்ளை தலைமையில், செயலாளராக பணியாற்றிய குரும்பரகம் முத்தையா பிள்ளையின் இளவல் நமது பாசத்திற்குரிய இன்றைய கௌரவத் தலைவர் கேப்டன் மு. பிரதாபன் முன்னின்றுநடத்தியமாபெரும்விழாஹோட்டல்மாஸில் உள்ள குளிர்சாதன வசதி கொண்ட அரங்கத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது, இன்றும் எங்களது நெஞ்சில் நிழலாடுகிறது என்றால் மிகையாகாது. மிக சிறப்பான விழா, அருமையான விருந்தோம்பல், இன்றைக்கும் மறக்க முடியாத கார்குலம் போற்றுகின்ற நிகழ்வு. 13–08–2023 ஞாயிறு, கார்குல செம்மல் கேப்டன் எம். பிரதாபன் கௌரவ தலைவராக இருந்து சங்க நிர்வாகிகளை ஒருங்கிணைத்து வெகு சிறப்புடன் நேர்த்தியாக இவ்வளவு பெரிய அரங்கில் சகல வசதிகளுடன் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவை நடத்தியமைக்கு உள்ளம் கனிந்த நன்றியினை காணிக்கையாக்குகிறோம்.

இந்த இனிய கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவிற்கு வருகை புரிந்து எங்களை போர்படை தலைவராக வழிநடத்தும் எங்களது பாசமிகு தலைவர் சுபா. சிவக்குமார் அவர்களுக்கும் முன்னிலை வகித்த பாசத்திற்குரிய கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியர் ச. அன்பழகன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று பெருமை சேர்த்த மாநிலத்தலைவர் பாசமிகு கே.கே.ஆர். சுரேஷ் அவர்களுக்கும், பொருளாளர் பாசமிகு ஜி. இராமநாதன் பிள்ளை அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய சென்னை சங்க துணைத்தலைவர் பாசமிகு கனகசுப்ரமணியன் அவர்களுக்கும், பொருளாளர் பாசமிகு எஸ். ஞானசேகரன் அவர்களுக்கும், கார்காத்தார் ஒப்புரவு நிர்வாக குழு உறுப்பினர் திருமதி. வனஜா அவர்களுக்கும், வருகை புரிந்து சிறப்பித்த மாநில சங்க துணைத்தலைவர்கள், மண்டல செயலாளர்கள், மகளிர் அணியினர், இளைஞர் அணியினர், தொழில் முனைவோர் அணியினர், கார்குல தன்னார்வலர்கள், இணைப்புச் சங்க நிர்வாகிகள், கார்குல சொந்தங்கள், தாய்மார்கள், குழந்தைகள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவை நடத்த வேண்டும் என்று கேட்டவுடன் மறுகணமே ஏற்றுக்கொண்டு விழா சிறப்புடன் நடைபெற தனது முக்கியமான

அலுவல்களுக்கிடையே நேரம் பாராது பல ஆலோசனைகளை வழங்கியும், கூட்டங்களை தனது அலுவலகத்திலேயே நடத்தி எல்லோரையும் ஒருங்கிணைத்து வெகு சிறப்பாக விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்த பாசமிகு அண்ணன் விழா சிறப்புரை ஆற்றிய திரு. கேப்டன் எம். பிரதாபன் அவர்களுக்கும், கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவிற்குவருகைபுரிந்துநமதுகுலஇளைஞர்களுக்கு எதிர்காலத்தை உணர்த்திடவும், தொழில் தொடங்கும் ஆர்வத்தை ஏற்படுத்திடவும் சிறப்பான எழுச்சியுரை ஆற்ற வேண்டும் என்று கேட்டவுடன் மனப்பூர்வமான சம்மதம் தெரிவித்து வருகை தந்து சிறப்பித்த சாரதாராம் குழும இயக்குநர் மரியாதைக்குரிய திரு. எம். சுவேதகுமார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

விழாவின் இறுதியில் நன்றியுரை ஆற்றிய கார்காத்தார் ஒப்புரவு இணையாசிரியர் பாசமிகு சகோதரர் நங்கநல்லூர் கோ. தியாகராஜன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

மற்றும் இந்த பெருமைமிகு கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவை, மாபெரும் எழுச்சி விழாவாக நடத்திய புதுச்சேரி கார்காத்தார் சங்கத்திற்கும் மற்றும் உதவி புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை காணிக்கையாக்குகிறோம்.

கைலை. சண்முகம்,
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

கோலங்கள்

ஆரம்பம் என்றும்
புள்ளியில் தான்;
அஸ்தமனம் என்றும்
விஸ்வரூபமாய் !!!

காவித் தரையாக
இருந்த என்னை
காவியத் தரையாக
மாற்றி விட்டாய் !!!

வாசலில்
தினந்தோறும் எழுதும்
புதுக்கவிதை !!!

தண்ணீர்
என்னை சிந்தி
உன்னை அழிக்கையில்
விடும் கண்ணீர் !!!

தரையில்
தெரியும்
வண்ணத்திரை!

தெளிவாக
புரிந்த
சிக்கல் !!!

விஷயம்
இருக்கும்
விருட்ஷம் !!!

அழகான
விரல்கள் தொட்ட
பேரழகு !!!

பி. மரகதம்
மாடம்பாக்கம்.
செல் : 9894208913

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர்,
10வது தெரு, சூளைமேடு,
சென்னை–600094.

சென்னை கார்காத்தார் சங்கம் மற்றும் புதுச்சேரி கார்காத்தார் சங்கம் இணைந்து புதுச்சேரியில் 13–08–2023 ஞாயிறன்று கார்காத்தார் ஒப்புரவு விழாவை மிக சிறப்பாக நடத்தினோம். இதன் தொடர்ச்சியாக வருகின்ற டிசம்பர் மாதம் 17–12–2023 ஞாயிற்றுக்கிழமையன்று சிதம்பரம் நகர கார்காத்தார் சங்கம் கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழாவை சீரும் சிறப்புமாக நடத்த முடிவு செய்து அதற்கான ஆயத்த பணிகளை செய்து வருகிறார்கள். விழா சிறப்புடன் நடைபெற கார்குல சொந்தங்கள் விளம்பரங்கள், கட்டுரைகள் மற்றும் சிதம்பரம் பகுதியில் வாழ்ந்த நமது குல சான்றோர்கள் பற்றிய செய்திகளை தந்து டிசம்பர் மாத கார்காத்தார் ஒப்புரவு இதழில் வெளியிட்டு சிறப்பிக்க அனுப்பி வைக்க அன்புடன் வேண்டுகிறோம். மேலும் விபரங்களுக்கு சிதம்பரம் நகர கார்காத்தார் சங்கத்தின் தலைவர் திரு. N. முருகன் பிள்ளை அவர்களை 9842197489 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள பணிவன்புடன் வேண்டுகிறோம்.

கைலை. சண்முகம்,
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

ஏடிஎம் தெரியாத விஷயங்கள்.
ஏ.டி.எம். எப்படிச் செயல்படுகிறது?
Automatic Teller Machine (ATM).

கட்டுக்கட்டாக பணத்தை பாக்கெட்டில் வைத்துக் கொண்டு இப்போதெல்லாம் பஸ்சில் பதட்டப்பட்டுக் கொண்டே யாரும் பயணிப்பதில்லை. காரணம் ஏ.டி.எம். அட்டைகள்.

வங்கியில் கணக்கை ஆரம்பித்த அனைவருக்குமே ஒரு அட்டை கிடைக்க தற்போது எல்லா வங்கிகளும் வசதி செய்துள்ளன. எப்போது தேவையோ அப்போது எடுத்துக் கொள்ளலாம் எனும் நிலையும், எல்லா தெருக்களுக்குள்ளும் நுழைந்து விட்ட தானியங்கி இயந்திரங்களும் பணத்தை தூக்கிச் சுமக்கும் பணியை குறைத்திருக்கின்றன.

நாம் பணம் தேவைப்படும் போது ஏ.டி.எம். முன்னால் சென்று நிற்கிறோம், நமது அட்டையை உள்ளே நுழைக்கிறோம். சங்கேத எண்ணை அமுக்குகிறோம். நம்முடைய கட்டளைக்கு ஏற்ப பணம் கிடைக்கிறது. திருப்திப்பட்டு விடுகிறோம்.

Automatic Teller Machine என்பதன் சுருக்கம் தான் ATM. நம்முடைய அட்டையில் 16 எண்கள் கொண்ட ஒரு எண் இருக்கும். இது நம்மைப் பொறுத்தவரையில் ஒரு சாதாரண எண். ஆனால் இதன் ஒவ்வொரு எண்ணிற்கும் தனித்தனி அர்த்தங்கள் உண்டு.

முதல் ஆறு எண்கள் அட்டை எந்த வங்கியிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கும். அதற்கடுத்த ஒன்பது எண்களும் சேவை வழங்கு நிறுவனங்களின் விருப்பத்தைப் பொறுத்த எல்லைக்குள் இருக்கும். கடைசி எண் ஒரு ரகசிய எண். அதுதான் உங்கள் அட்டை பயன்படுத்தக் கூடியதா இல்லையா என்பதைச் சொல்லும்.

மாஸ்டர்கார்ட் எண்கள் ஐந்து எனும் எண்ணில் ஆரம்பிக்கும், விசா எண்கள் நான்கு எனும் எண்ணில் ஆரம்பிக்கும் என்பது ஒரு சிறு சுவாரஸ்யத் தகவல்.

அட்டைகளை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று கிரடிட் கார்ட் எனப்படும் கடனட்டைகள். இன்னொன்று டெபிட் கார்ட் அல்லது செக் கார்ட். கடனட்டையில் நாம் செலவழிக்கும் பணத்தை மாதம் ஒரு முறை செலுத்தினால் போதும், செக் கார்ட் மூலம் செலவழிக்கும் பணம் நம்முடைய வங்கிக்கணக்கிலிருந்து உடனே கழிக்கப்பட்டு விடும்.

ஏடிஎம் முன்னால் சென்று அட்டையை உள்ளே செலுத்தி நம்முடைய சங்கேத எண்ணைக் குறிப்பிட்ட பின் நமக்கு எவ்வளவு பணம் தேவை என்பதைக் குறிப்பிட்டு பொத்தானை அமுக்குகிறோம். நம்முடைய அட்டையின் பின்னால் இருக்கும் மேக்னட்டிக் ஸ்ட்ரைப் நம்முடைய அட்டையின் எண்ணை மென்குறியீடாக்கி உள்ளே அனுப்பும். அதற்குப் பயன்படும் இடம்தான் கார்ட்ரீடர் எனப்படும் நாம் அட்டையை உள்ளே நுழைக்கும் இடம். அப்போது கட்டளை ஏடிஎம் முனையிலிருந்து சுவிட்ச் என அழைக்கப்படும் கணினி மென்பொருளுக்குள் நுழைகிறது. இங்கே இரண்டு விதமான சோதனை வளையங்கள் இருக்கின்றன. முதலில் நாம் பயன்படுத்தும் அட்டை சரியானது தானா? அதற்கு நாம் கொடுத்த சங்கேத எண் சரியானது தானா என்பதைச் சரிபார்க்கும் சோதனை.

இந்தச் சோதனை தோல்வியடைந்தால் நாம் ஏதோ தவறு செய்திருக்கிறோம் என்று பொருள். ஒரு வேளை சங்கேத எண்ணைத் தவறாகச் சொல்லியிருக்கலாம்.

இரண்டாவது சோதனை நம்முடைய வங்கிக் கணக்கில் நாம் கேட்கும் பணம் இருக்கிறதா? நாம் பணம் எடுப்பதில் இன்றைய தினத்தின் உச்ச வரம்பை எட்டியிருக்கிறோமா? என்பது குறித்த சோதனைகள். முதல் சோதனை முடிந்தபின், இரண்டாவது சோதனைக்குள் நுழைந்து இரண்டும் சரியாய் இருந்தால் பணம் கொடுக்கலாம் எனும் பதில் தானியங்கி முனைக்கு வரும், இந்த இரண்டு சோதனைகளையும் கடக்க பல இலட்சம் தகவல்கள் அடங்கியிருக்கும் மென் கோப்புகளில் தேடுதல் நடக்கும்.

இந்த தேடுதல் முடிந்து தானியங்கி முனைக்கு வரும் தாமதம் சில வினாடிகளே. இந்த வினாடிகள் அதிகரிக்கும் போது தான் நாம் சலித்துக் கொள்கிறோம்.

பணத்தை எண்ணித் தரும் பணம் பட்டுவாடா இயந்திரமும் நுட்பமான சென்சார்களால் ஆனது. இது தவறு இழைப்பதில்லை. இரண்டு நோட்டுகள் ஒட்டி வரும் எனும் ஆசை நப்பாசையாய் போய்விடும் என்பது திண்ணம்.

இன்னொரு சுவாரஸ்யமான விஷயமும் அடங்கியிருக்கிறது. நாம் நம்மிடம் ஒரு வங்கியின் அட்டை இருந்தாலும் வேறு வங்கியின் தானியங்கி நிலையமும் நமக்குப் பணம் கொடுக்கும் எப்படி?

இதை செட்டில்மண்ட் என்பார்கள். அதாவது வங்கிகள் எந்தெந்த வங்கி அட்டைகளுக்குப் பணம் கொடுக்கிறதோ அந்தந்த வங்கிகளின் கணக்கில் அந்தப் பணத்தைச் சேர்த்துக் கொள்ளும். அன்றைய தினத்தின் இறுதியில் வங்கிகள் மற்ற வங்கிகளுக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை கணக்கிட்டு உடன்பாடு செய்து கொள்கின்றன.

மின் பண பரிமாற்றம் எனப்படும் இந்த தொழில் நுட்பம் மிகவும் சிக்கலானதும், பணம் ஈட்டக் கூடியதுமாகும். பல முன்னணி மென்பொருள் நிறுவனங்கள் இதை நடத்துகின்றன.

சரி, மென்பொருள் நிறுவனங்களுக்கு இதனால் எப்படி காசு கிடைக்கிறது? இந்த தானியங்கி நிலையத்திலிருந்து செல்லும் கட்டளைகள் மென்பொருளோடு இணையாவிடில் ஒன்றுக்கும் உதவாது. இதன் பின்னால் இருக்கும் மென்பொருள் தான் வரும் தகவல்களைச் சரிபார்த்தல், பணம் பட்டுவாடா செய்ய உத்தரவிடுதல், மீதம் கணக்கிடுதல் என ஒட்டு மொத்தப் பணியையும் செய்கிறது. அனைத்து விவரங்களையும் மென் கோப்புகளில் சேமித்தும் வைக்கிறது. இந்த சுவிட்ச் எனப்படும் இந்த மென்பொருளுக்குள் வரும் தகவல்கள், அல்லது விண்ணப்பங்களுக்கு ஏற்ப மென்பொருள் நிறுவனம் வங்கிகளிடம் பணம் பெற்றுக் கொள்கின்றன.

அதாவது நீங்கள் பத்துமுறை பணம் எடுக்கிறீர்கள் என்றால் மென்பொருளுக்குக் கிடைப்பது பத்து தகவல்கள். ஒவ்வொரு தகவலுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை மென்பொருள் நிறுவனத்துக்குச் செல்லும். தினமும் பல ஆயிரக்கணக்கான தானியங்கிகளில் நிகழும் இந்த பரிவர்த்தனை மூலம் பல கோடிக்கணக்கான பணம் மென்பொருள் நிறுவனங்களுக்குப் போய் சேர்கிறது. இதற்காகத் தான் ஆயிரக்கணக்கான மென்பொறியாளர்கள் பணியாற்றுகின்றனர். அதிலும் ஒவ்வொரு வங்கிக்கும் உரிய பிரத்தேக சட்டங்களின் அடிப்படையில் மென்பொருள் இயங்குவது தான் முக்கியம். குறிப்பாக சில வங்கிகள் ஒரு நாள் பத்தாயிரம் ரூபாய் மட்டுமே ஏடிஎம் வழியாக எடுக்க அனுமதிக்கும். சில வங்கிகள் ஐம்பதாயிரம் ரூபாய் வரை அனுமதிக்கும். இதற்குத் தக்கபடி மென்பொருள் தயாராக்கப்பட வேண்டும்.

அமெரிக்காவில் இருபத்து ஐந்திற்கும் முப்பத்து நான்கிற்கும் இடைப்பட்ட வயதுடையவர்களில் அறுபது சதவீதம் பேர் மாதம் எட்டு முறை ஏடிஎம் இயந்திரத்தைப் பணம் எடுக்க நாடுகிறார்களாம். பெரும்பாலான ஏடிஎம் நிலையங்களில் வெள்ளிக்கிழமைகளில் தான் அதிக பரிவர்த்தனை நடக்கிறதாம். ஏடிஎம் அட்டையைப் பயன்படுத்துபவர்கள் மற்றவர்களை விட இருபது முதல் இருபத்து ஐந்து சதவீதம் வரை அதிகமாகச் செலவழிக்கிறார்களாம். ஏடிஎம் அட்டைக்கு மிக முக்கியமானது பின் எனப்படும் சங்கேத எண். இது தானியங்கியில் அளிக்கப்பட்டவுடன் குறியீடுகளாக மாறிவிடும். அதன் பின் யாரும் அதை திருட முடியாது.

ஆனால் அது நம்மிடம் இருக்கும் வரை அதை நாம் தான் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் இழப்பு நமக்கு தான். அட்டையும் எண்ணும் கிடைத்து விட்டால் யார் வேண்டுமானல் நம் வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்க முடியும். இணையத்திலும் பொருட்கள் வாங்க முடியும். சங்கேத எண்ணை பத்திரமாய் வைத்திருக்க சில விஷயங்களைக் கவனத்தில் கொண்டால் போதும். சங்கேத எண்ணை எழுதி வைக்கக்கூடாது. மறந்து விடுவோம் எழுதியே ஆக வேண்டும் என விரும்பினால் அதை வீட்டில் எங்காவது பத்திரமாய் எழுதி வைக்க வேண்டும். பர்சிலோ, ஏடிஎம் அட்டை இருக்கும் இடங்களிலோ வைக்கவே கூடாது.

சங்கேத எண் உங்களோடு தொடர்பற்றவையாக ஆனால் உங்களால் மறக்க முடியாததாக இருக்க வேண்டும். குறிப்பாக உங்கள் பிறந்தநாள், தொலைபேசி எண் போன்றவை இல்லாமல் இருத்தல் நலம்.

சங்கேத எண்ணை எழுதி வைக்கும் போது கூட அதை உங்களுக்கு மட்டுமே புரியும் சங்கேத மொழியிலேயே எழுதி வைக்கலாம்.

சங்கேத எண்ணை பயன்படுத்தும் போது தானியங்கிக்கு மிகவும் அருகாக குனிந்து மற்றவர்கள் பார்க்காதபடி எண்களை பயன்படுத்த வேண்டும். குனிந்தபடி எண்ணை பயன்படுத்துவது ரகசியக் காமராக்களிடமிருந்து பெரும்பாலும் தப்ப வைக்கும்.

பணம் எடுத்ததும் உடனே பாக்கெட்டில் பாதுகாப்பாக வைத்துவிட்டு சென்றுவிடுங்கள். வீட்டில் சென்று எண்ணிப் பாருங்கள். எப்படியானாலும் தவறு நிகழ்ந்தால் அதை சம்பந்தப்பட்ட வங்கிக்குத் தான் தெரியப்படுத்த வேண்டும். எனவே, தானியங்கி முன்னால் நின்று எண்ணிக் கொண்டிருப்பது தேவையற்றது.

யாராவது உங்களைத் தாக்கக் கூடும் எனும் பயம் தோன்றினால் ''கேன்சல்'' பட்டனை அமுக்கி விட்டு பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று கிளம்புங்கள்.

இரவு நேரங்களில் ஏடிஎம் பயன்படுத்த வேண்டியிருந்தால் ஆள்நடமாட்டம் அதிகமாக இருக்கும் இடங்களிலுள்ள ஏடிஎம்களைப் பயன்படுத்துங்கள். முக்கியமாக அட்டையின் பின்னால் இருக்கும் தொலைபேசி எண்ணை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அட்டை தொலைந்ததை அறிந்தால் உடனே அந்த எண்ணுக்குத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவியுங்கள். உடனே உங்கள் அட்டையின் எண் ''ஏமாற்று'' வரிசையில் சேர்க்கப்படும். அதன் பின் அந்த அட்டையை யாராவது பயன்படுத்தினாலும் அது ''ஏமாற்று வேலை'' என்னும் முத்திரை இருப்பதால் நிராகரிக்கப்படும்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை–90, செல்: 9943702054

உடல் தானம் - பகுதி 2
BODY DONATION - Part 1

உடல் தானத்தின் முதல் கட்டத்தின் இறப்பதற்கு முன்பு இரண்டாம் நிலையான ஐயப்பாடுகளைத் தெளிவு பெறுதல் வரை உடல் தானம் கட்டுரையின் முதல் பகுதி யில் பார்த்தோம். மூன்றாம் நிலையான மருத்துவ மனையில் பதிவு செய்வதில் இருந்து இப் பகுதியில் பார்ப்போம்

நிலை 3 – மருத்துவ மனையில் பதிவு செய்தல்

உடல் தானம் பற்றிய நடை முறைகளைப் புரிந்து கொண்ட பிறகு உடல் தானம் செய்ய விரும்புபவர் அந்த மருத்துவ மனையில் தன்னிச்சையாக உடல் தானம் செய்யும் திட்டத்தில் பதிவு செய்து கொள்வதைப் பார்க்க வேண்டும் உடல் தானம் கொடுப்பதற்கு அவ்வாறு முன்பே மருத்துவ மனையில் பதிவு செய்து கொள்ள வேண்டியது கட்டாயம் அல்ல ஆனால் பதிவு செய்து கொண்டால் அவர் இறந்த பிறகு அவரது உறவினர்கள் அவரது உடலைத் தானம் கொடுக்கும் நடை முறை யை எளிதாக்கும். அவ்வாறு பதிவு செய்வதற்கு மருத்துவ மனைக்குச் சென்றுதான் ஆக வேண்டும் என்று அவசியமில்லை அந்த மருத்துவ மனையின் வலை தளத் திலிருந்து பதிவு செய்வதற்கான படிவத்தை பதிவிறக்கம் செய்து நிரப்பி இணைய தளத்தின் மூலம் கூட அனுப்பலாம் அப் படிவங்களை நிரப்புவதும் எளிதுதான் உடல் தானம் கொடுக்க இருப்பவரின் 2 அல்லது 3 பாஸ்போர்ட் அளவு அல்லது ஸ்டாம்ப் அளவு புகைப் படம் தேவைப் படும்

ஒப்புதல் படிவம் எனப்படும் பதிவு செய்யும் படிவத்தில் இரண்டு சட்ட பூர்வ சாட்சிகள் முன்பாக உடல் தானம் கொடுக்க விரும்புபவர் கையெ ழுத் திட வேண்டியது கட்டாயமாகும் பெரும்பாலான மருத்துவ மனைகள் அந்த படிவத்தில் சாட்சிக் கையெழுத்திடும் இருவரில் ஒருவராவது தானம் கொடுப் பவரின் நெருங்கிய உறவினராக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவதுண்டு அப்படிவத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்து விட்டால் மருத்துவ மனை கீழ்க் கண்ட ஆவணங்களை பதிவு செய்தவருக்கு வழங்குவார்கள்

ஒப்புதல் கடிதம்

" சமுதாயத்துக்கு அவர் செய்துள்ள சேவையை உடல் தானம் கொடுப்பதை பாராட்டி சான்றிதழ்.

" உடல் தானம் கொடுத்தவருக்கான நன்கொடையாளர் அடையாள அட்டை. அதில் அவர் தானம் கொடுத்த பதிவு எண் இருக்கும்

" உடல் தானம் கொடுத்தவர் இறந்த பிறகு அவரது நெருங்கிய உறவினர் மருத் துவ மனையைத் தொடர்பு கொள்வதற்கான தொடர்பு தொலை பேசி எண். பல மருத்துவ மனைகள் வேலை நாட்களில் தொடர்பு கொள்ள ஒரு எண்ணும் விடு முறை நாட்களிலும் இரவு நேரங்களிலும் தொடர்பு கொள்ள ஒரு எண்ணும் என இரண்டு எண்களைக் கொடுப்பதுண்டு

மருத்துவ மனை தரும் வசதிகள்

முழு உடலையும் தானம் தரும் திட்டத்தில் பதிவு செய்பவர்களுக்கு பல மருத்துவ மனைகள் பல வித வசதிகளைச் செய்து கொடுப்பார்கள். உதாரண மாக தானம் கொடுத்தவர் இறந்த பிறகு அவரது உடலை இலவச மாக மருத்துவ மனைக்கு எடுத்து வருதல், இயலவச உடல் பரிசோதனை போன்றவை

நிலை 4 – உடல் தான விருப்பத்தை நெருங்கிய உறவினர்களிடம் விவாதித்தல்

ஒருவர் இறந்த பிறகு தனது உடலை தானம் செய்ய விரும்பி அதனைப் பதிவு செய்தாலும் அவரது ஆசையை நிறை வேற்ற வேண்டியவர்கள் அவ ரது குடும்பத்தாரும் நெருங்கிய உறவினர்களும் தான் எனவே உடல் தானம் கொடுக்கத் தான் விரும்புவது பற்றி குடும்பத்தாரிடமும் நெருங்கிய உறவினர் களிடமும் பேசி அவர்கள் சம்மதத்தைப் பெற வேண்டியது மிக முக்கிய மாகும் உடல் தானம் கொடுக்கப்பதிவு செய்தவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் எந்த மருத்துவ மனையில் அவர் பதிவு செய்துள்ளார் என்ற விபரம் தெரிவதுடன் அந்த மருத்துவ மனையின் தொடர்பு தொலை பேசி எண்களும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் அதே போல் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள நன் கொடையாளர் அட்டை எங்கே வைக்கப்பட்டுள்ளது என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் அவர் இறந்து விட்டால் அவர்கள் மருத்துவ மனையுடன் தொடர்பு கொள்ள அவை எல்லாம் அவர் களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்

உடலை தானம் கொடுக்க விரும்புபவர் முதல் கட்டத்தில் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்து முடித்த பிறகு எல்லா விபரங்களையும் அவரது குடும்பத்தாரிடமும் நெருங்கிய உறவினர்களிடமும் சொல்லி அவர்களுடையசம்மதத்தையும்பெற்றுஇறந்த பிறகு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதையும் விளக்கி விட வேண்டும் அதே போல் அவர் தனது குடும்ப மருத்துவரிடமும் உடல் தானம் கொடுக்க விழையும் அவரது விருப்பத்தைச் சொல்லி வைப்பது நல்லதாகும் இவை தான் உடல் தானம் கொடுக்க விரும்பும் ஒருவர் செய்ய வேண்டியவைகளாகும்

உடல் தானம் பற்றிய மீதி செயல்பாடுகள் அவர் இறந்த பிறகு அவரது குடும்பத்தார் / உறவினர்களால் செய்யப்படும்

இரண்டாம் கட்டம் –

நெருங்கிய உறவினர்கள் செய்ய வேண்டியது

நிலை I – மருத்துவ சான்றிதழ் பெறுதல்

உடல் தானம் கொடுப்பவர் ஏதேனும் மருத்துவ மனையில் இறந்திருந்தால் அவருக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் அவரின் மருத்துவச் சான்றிதழைக் கொடுப்பார். ஆனால் அவர் வீட்டிலேயோ அல்லது வெளியில் வேறு எங்கே யோ இறந் திருந் தால் அவரது குடும்ப மருத்துவரிடமிருந்தோ அல்லது அவருக்குத் தெரிந்த வேறு மருத்துவரிடமிருந்தோ மரணச் சான்றிதழ் பெற லாம். இறந்து 6 மணி நேரத்துக்குள் உடல் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதாலவர் இறந்தவுடன் விரைந்து செயல் பட்டு மரண சான்றிதழ் பெற ஒரு மருத்துவரைக் கண்டு பிடிக்க வேண்டும்

அந்த சான்றிதழில் அந்த மருத்துவர். இறந்தவர் பெயர் அவரது சுமாரான வயது அவரது முகவரி மற்றும் அவரை அடையாளம் காட்டக்கூடிய தழும்பு மச்சம் போன்ற அடையாளங்கள் அவர் இறந்த நேரம் மற்றும் தேதி என்ன காரணத்தினால் இறந்திருக்கலாம் போன்ற விபரங்களை அத்தகைய சான்றிதழின் படிவம் மருத்துவர்களுக்குத் தெரிந்திருக்கும் கொடுப்பார். அத்துடன் அந்த சான்றிதழில் அந்த மருத்துவர் கையெழுத் திடுவதுடன் அவர பற்றிய மருத்துவ கவுன்சிலில் அவர் பதிவு செய்த எண் போன்ற விபரங்களையும் கொடுப்பார்

மருத்துவரின் மரண சான்றிதழின் முக்கியத்துவம்

ஒருவர் இறந்தவுடன் மருத்துவரிடமிருந்து பெறும் மருத்துவரின் மரண சான்றிதழ் மிக மிக முக்கியமான ஆவணமாகும் இறந்தவர் பற்றிய அனைத்து செயல்களுக்கும், உடலை ஓரிடத்திலிருந்து வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லுதல், சவக் கிடங்குக்கு எடுத்துச் செல்ல, இறுதிச் சடங்குகள் செய்ய, புதைக்க அல்லது உடல் தானம் கொடுக்க பின்னர் அவரது வங்கிக் கணக்குகளை மாற்ற சொத்துரிமையை மாற்ற போன்ற அவர் சம்பந்தப்பட்ட அனைத்து காரியங்களுக்கும் மருத்துவரால் கொடுக்கப்பட்ட மரண சான்றிதழின் நகல்கள் தேவைப் படும் எனவே மருத்துவர் கொடுத்த மரண சான்றிதழின் அசல் சான்றிதழை பத்திரமாக வைத்திருக்க வேண்டும்

மருத்துவரின் சான்றிதழும் நகராட்சி சான்றிதழும்

ஒருவர் மரணம் அடைந்த உடன் மருத்துவர் கொடுக்கும் மரண சான்றி தழில் அவர் என்ன காரணத்தால் எந்த நேரம் தேதியில் இறந்தார் என்ற விபரம் இருக்கும் அந்த சான்றிதழின் நகலுடன் இறந்தவர் வசித்த பகுதி நகராட்சி அலுவலகத்தில் சென்று அவர் மரணமடைந்ததைப் பதிவு செய்து விட்டால் அவ்வாறு பதிவு செய்யப்பட வேண்டியது சட்ட பூர்வ தேவை யாகும் அதன் பிற்கு குறிப்பிட்ட நாளில் நகராட்சி மருத்துவர் கொடுத்த மரண சான்றிதழின் அடிப்படையில் அவரது மரண சான்றிதழை அளிக்கும் அதைக் கொண்டுதான் சொத்துரிமை மாற்றம் வங்கிக் கணக்கு மாற்றம் போன்ற அலுவல் ரீதியான காரணங்களைச் செய்ய முடியும். நகராட்சி அளிக் கும் அந்த மரண சான்றிதழையும் இறந்தவுடன் மருத்துவர் கொடுக் கும் மரண சான்றிதழையும் இறந்ததை உறுதி செய்தும் இறந்த காரணத்தைக் குறிப்பிட்டும் குழப்பிக் கொள்ளக் கூடாது

இறந்தவுடன் மருத்துவர் கொடுக்கும் மரண சான்றிதழைத் தான் உடல் தானம் கொடுக்கும் போது கொடுக்க வேண்டும்

ஏற்கனவே சொன்னமாதிரி நகராட்சி கொடுக்கும் மரண சான்றிதழ் சொத் துரிமை மாற்றம் போன்ற காரியங்களுக்குப் பயன்படும். உடலை தானம் செய்தவர் மரணத்தை நகராட்சியில் பதிவு செய்யும்போது மருத்துவர் கொடுத்த மரண சான்றிதழ் நகலையும் மருத்துவ மனையில் உடலை தானமாகப் பெற்றுக் கொண்டதற்குக் கொடுக்கும் ஒப்புதல் கடிதத்தின் நகலையும் இணைத்து மரணத்தை நகராட்சி பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும்

பிரேதப் பரிசோதனை

இறப்பில் ஏதேனும் தவறு நடந்திருக்கும் என்ற ஐயம் இருந்தாலும் அல்லது இயற்கையான மரணமாக இல்லாவிட்டாலும் பிரேதப் பரிசோதனைக்கு மருத்துவர் சிபாரிசு செய்வார். சில நேரங்களில் இறந்தவரின் குடும்பத்தாரே பிரேதப் பரிசோதனை செய்யச் சொல்லி அதற்கான பணத்தையும் செலுத்தி விடுவர் . அந்த மாதிரி இனங்களில் உடல் தானத்துக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள மருத்துவ மனை பிரேதப் பரிசோதனை செய்யாது. பிரேதப் பரிசோதனை செய்யப்பட்ட உடலை மருத்துவ மனை தானமாகப் பெறாது அதே போல் தற் கொலை செய்து கொண்டவர்கள் உடலையும் தானமாகப் பெற மாட்டார்கள்

மருத்துவ சான்றிதழ் பற்றிய முக்கிய அம்சம்

ஒருவர் இறந்தவுடன் ஒரு மருத்துவர் பார்த்து மரண சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரியும் ஆனார் சிலர் உடலை தானம் கொடுக்கும் மருத்துவ மனையே மரண சான்றிதழும் கொடுத்து விடும் என நினைக் கிறார்கள் . அது தவறு

இறந்தவர் உடலைத் தானம் பெறும் மருத்துவ மனை மரண சான்றிதழ் வழங்காது

ஒரு மருத்துவரிடமிருந்து மரண சான்றிதழ் பெறாமல் உடலை தானம் கொடுக்கும் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றால் அவர்கள் அந்த உடலை " அந்த உடலை வரும்போதே இறந்திருந்தார் " / பிணமாகக் கொண்டு வரப்பட்டார் என்று தான் சான்று செய்வார்கள் அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் போலீஸுக்குத் தகவல் தெரிவிப்பார்கள் பிறகு அது போலீஸ் கேஸாக மாறும் பிரேதப் பரிசோதனை செய்தாக வேண்டி இருக்கும் ஏற்கனவே சொன்ன மாதிரி பிரேதப் பரி சோதனை செய்த உடலை தானமாகப் பெற மாட்டார்கள்

எனவே இறந்தவர் உடலை தானம் கொடுப்பதற்கு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் முன்பாக தகுதி வாய்ந்த மருத்துவரிடமிருந்து ; M.B.B.S Qualified மரண சான்றிதழ் பெற வேண்டியது மிக மிக அவசியமாகும்

நிலை 2 – உடலை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று ஒப்படைத்தல்

பொதுவாக் இறந்தவர் உடல் தானம் கொடுக்கப்படும் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவ மனைக்கு இறந்து 6 மணி நேரத்துக்குள் வந்து சேர வேண்டும். இருந்த போதிலும் தானம் கொடுப்பவர் இறந்தவுடன் அந்த மருத்துவ மனையைத் தொடர்பு கொண்டு உடலை எப்படி எப்போது கொண்டு வரப்பட வேண்டும் என்பதைப் பேசித் தெளிவு படுத்திக் கொள்வது நல்லது . உதாரணமாக இறந்தவர் உடலை உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல இயலாத சூழ் நிலையாக இருந்தால், அந்த உடலை அருகில் உள்ள மருத்துவ மனை சவக் கிடங்கிலோ அல்லது ஃப்ரீஸர் என்னும் குளிர்ந்த இடத்திலோ வைக்கச் சொல்லி அவர்கள் ஆலோசனை கூறக் கூடும்

ஏதேனும் ஐயப்பாடு இருந்தால் உடலை தானமாகக் கொடுக்க பதிவு செய் துள்ள நபர் இறந்தவுடன் அந்த மருத்துவ மனையைத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு அவர் இறந்த நேறத்தைக் கூறி உடலைத் தானமாகப் பெறுவார்களா என்று கேட்டு அவர்கள் கூறுவது போல் செய்யலாம்

மருத்துவ மனையில் இறந்தவர் உடலை ஒப்படைக்கும் போது இறந்தவரின் ரத்த சம்பந்த உறவினர் உடன் வர வேண்டும்

உடலைப் பெற்றுக் கொண்ட ஒப்புதல்

இறந்தவர் உடலை மருத்துவ மனையில் ஒப்படைப்பதற்கான எல்லா சடங்குகளும் முடிந்து உரிய ஆவணங்கள் ஒப்படைக் கப் பட்டவுடன் அந்த உடலை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைக் கடிதத்தை மருத்துவ மனை வழங்கும் அந்த கடிதத்தின் நகலை நகராட்சி அலுவலக்த்தில் கொடுத்து அவர்களிடமிருந்து நகராட்சி வழங்கும் மரண சான்றிதழைப் பெற வேண்டும்.

மருத்துவ மனையில் உடலைத் தானமாகக் கொடுத்த பிறகு

இறந்தவர் உடலை தானமாக மருத்துவ மனையில் கொடுத்த பிறகு அந்த உடலை எம்பாம் என்று சொல்லப்படும் நறு மணம் மூட்டி பதனப் படுத்துவார்கள் பிறகு அதனை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவும் ஆராய்ச்சி செய்வதற்கும் பயன் படுத்துவார்கள் பொதுவாக அந்த உடல் நீண்ட நாட்கள் பயன்பாட்டில் இருக்கும் இறுதியில் அதனை எரிக்கவோ அல்லது புதைக்கவோ செய்வார்கள் புதைத்திருந்தால் போதிய கால அவகாசத்துக்குப்பிறகு அந்த எலும்புகளை சேகரித்து எலும்புக் கூடாக்கி அதனையும் சொல்லிக் கொடுக்கவும் ஆராய்ச்சிக்கும் பயன் படுத்துவார்கள்.

உடல் தானம் பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற்காக எழுதப் பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் அல்லது மருத்துவ மனையின் உதவியை நாடுவது பயனுள்ளதாக இருக்கும்

சம்பந்தப்பட்ட சட்டம், மற்றும் விக்கீபீடியா.காம், க்ராஸ் ரோடுஷாஸ்பைஸ்.காம், மோஹன் ஃபௌண்டேஷன்.ஓஆர்ஜி, ஆர்கன் இந்தியா.ஓஆர்ஜி மற்றும் டொனேட் யுவர் பாடி.இன் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184

வருந்துகிறோம்

சீர்காழி தாலுக்கா, தென்பாதி திரு. K.V. ஜோதி பிள்ளை அவர்கள் (TNSTC ஓய்வு) 17–8–23 காலை இயற்கை எய்தினார்கள். சீர்காழி சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

நட்சத்திரங்களும் மரங்களும்

அக்ரி. கு. சேதுசுப்ரமணியன்–சிதம்பரம்.

அலைபேசி : 9443665642

17. அனுஷம்

சோதிடத்தில் இராசிச் சக்கரத்தின், 17–வது நட்சத்திரமான அனுஷம், விருச்சிக இராசியில் நான்கு பாதங்களுடன் இடம் பெறுகிறது. இந்தியப் பஞ்சாங்க முறைப்படி சந்திரன் புவியைச் சுற்றி வரும்போது அனுஷ நட்சத்திரக் கோணப் பிரிவுக்குள் இருக்கும் காலம் அனுஷ நட்சத்திரக் காலமாகும். இந்தக் காலப்பகுதியில் பிறந்தவர்களுக்கு உரிய நட்சத்திரம் அனுஷம் ஆகும். இந்த நட்சத்திரம் 213.20° க்கு மேல் 226.40° க்கும் இடையில் அமைந்துள்ளது. வடமொழியில் அனுராதா எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் பொருள் ''தெய்வீக ஒளியின் சீடர்'' என்பதாகும். இதன் அடையாளக் குறியீடு 'தாமரை' ஆகும்.

அனுஷ நட்சத்திரத்தின் கிரகாதிபதி சனியாகும். அதிதேவதை மித்திரன், மிருகம் பெண் மான் கணம் தேவகணம், பறவை வானம்பாடி, விருட்சம் மகிழ மரம் என்பவையாகும். மகாலட்சுமிக்கு உரிய நட்சத்திரம் அனுஷமேயாகும். இந்த நட்சத்திரத்தைப் போர் கிரகமான செவ்வாயும், அமைதி கிரகமான சனியும் ஆள்கின்றன. மகாலட்சுமியின் அம்சமாக இந்த நட்சத்திரம் விளங்குவதால், இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தொட்டது துலங்கும்.

அனுஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தாய், தந்தையருக்கு ஆதரவாக இருப்பார்கள், உறவுகளை நேசிப்பவர்கள். நல்ல பதவிகளை உடையவர்களாக இருப்பார்கள். சங்கீதப் பிரியம் கொண்டவர்கள். நீதி நேர்மைக்கு அடி பணிவார்க். எப்போதும் சுதந்திர உணர்வு கொண்டவர்கள். சமயத்தில் பொய் பேசக் கூடியவர்கள். அழகும் சாதுர்யமும் உடையவர்கள். பசி பொறுக்கமாட்டாதவர்கள்.

அனுஷ நட்சத்திரத்துக்குரிய விருட்சம் மகிழ மரமாகும். மகிழ மரத்தைத் தல விருட்சமாகக் கொண்ட திருத்தலங்களான திருவண்ணாமலை, திருவொற்றியூர், திருக்காளத்தி, திருநீடூர், திருப்புனவாயில் ஆகியவை அனுஷ நட்சத்திரக்காரர்களுக்கு பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன. வைணவத் தலங்களான திருக்கண்ணங்குடி, நாச்சியார் கோயில் ஆகியவையும் பரிகாரத் தலங்களே.

தல வரலாறு.

சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவொற்றியூரில் இறைவனுக்கு மலர் மாலை தொடுத்துக் கொடுத்து வந்த சங்கிலி நாச்சியார் என்பவரைக் கண்டு அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். தம்முடைய விருப்பத்தை திருவொற்றியூர் இறைவனிடம் முறையிட்டு வேண்டினார். இறைவன் சங்கிலி நாச்சியார் கனவில் தோன்றி சுந்தரரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கூற, சங்கிலியார் சுந்தரர் திருவாரூரில் உறைபவராதலின், அவர் தன்னை விட்டுப் பிரியாமல் திருவொற்றியூரிலேயே இருக்க அருள் செய்ய வேண்டும் என வேண்டிக்கொண்டார். இறைவன் சுந்தரரிடம் சென்று நாச்சியார் விருப்பத்தைக் கூறவும், தாம் சங்கிலியாரை மணக்க திருவொற்றியூரிலேயே இறைவன் முன்பு பிரிவதில்லை என சபதம் செய்து கொடுப்பதாகவும், அது சமயம் இறைவன் மகிழ மரத்தடியில் எழுந்தருள வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டார். இறைவன் மீண்டும் சங்கிலியாரிடம் சென்று சபதம் செய்து கொடுக்க சுந்தரரை மகிழ மரத்துக்கு அழைத்து வந்து அதன் கீழ் பெற்றுக்கொள்ளவும் அருளிச் செய்தார். அவ்வாறே சபதம் பெற்றுக்கொண்டு சங்கிலியார் சுந்தரரைத் திருமணம் செய்து கொண்டார்.

சில நாட்கள் சென்ற பின்பு சுந்தரர் திருவாரூர் இறைவனைக் காண விழைந்து சபதத்தை மீறி திருவொற்றியூரை விட்டு அகலும் போது இரண்டு கண்களையும் இழந்து பார்வையின்றி தவித்தார். திருவெண்பாக்கம் இறைவனிடம் முறையிட இறைவனும் ''யாம் உளோம் போகீர்'' என்றார். பல தலங்களுக்குச் சென்று தரிசித்து காஞ்சி வந்தடைந்து இறைவனிடம் முறையிட்டு இடக்கண்ணைப் பெற்றார். இவ்வரலாறிலிருந்து இறைவன் மகிழ மரத்தடியில் எழுந்தருளியமை பெறப்படுகிறது.

மகிழ மரம்.

இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியிலும், அந்தமான், பர்மா ஆகிய இடங்களிலும் மகிழ மரம் காணப்படுகிறது. மகிழ மரம் பசுமை மாறாதது. இதன் தாவரவியல் பெயர், Mimusops elessgi Linn என்பதாகும். Sapotaceae என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது.

மகிழ மரம் வலுவான அடிப்பாகத்துடன் கருமைச் சாம்பல் நிறம் கொண்ட பட்டை கொண்டு 20 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. பால்வடியும் மரம். இலைகள் பளபளப்பானவை; தனியானவை. மலர்கள் இலைக் கோணத்தில் பூக்கின்றன. மங்கலான வெண்மை நிறத்துடன் காணப்படும். மலர்ந்தவுடன் உதிரும் தன்மையவை, வாடிய நிலையிலும் மணம் வீசக்கூடியவை, ஏப்ரல் முதல் டிசம்பர் வரை பூக்கின்றன.

கனிகள் மே முதல் தோன்றுகின்றன. மஞ்சள் வண்ணத்துடன் கூடிய கனிகளின் சதைகயில் ஒரு விதை பொதிந்திருக்கும். கனிச்சதை இனிப்பானது. விதையில் நறுமண எண்ணெய் இருக்கும்.

பயன்கள். மகிழம் பூக்களை உலர வைத்துப் பொடியாக்கி மூக்குப்பொடி போல் பயன்படுத்த அதிக அளவு நீர் வெளியேறி தலைபாரம் மற்றும் தலைவலி குறையும். மலர்களைக் குடிநீரில் இட்டுக்குடிக்க வெப்பம் தனியும்.

மகிழ விதையிலுள்ள பருப்பை அரைத்து ஒரு வராகன் எடை பாலில் கலக்கிச் சாப்பிட்டு வரத் தாது விருத்தி உண்டாகும். தேக வெப்பு, விஷம், மலக்கட்டு நீங்கும். பட்டை, சத்து மருந்தாகவும் (TONIC) காய்ச்சல் தனிக்கும் மருந்தாகவும் பயன்படும். பெண்களுக்கு கருத்தரித்தலை ஊக்குவிக்கும்.

மரத்தின் பூக்களிலிருந்து மௌல்சாரி அத்தர் எனினும் அத்தர் தயாரிக்கலாம்.

அனுஷ நட்சத்திரக்காரர்கள் மேலே குறிப்பிட்ட தலங்களுக்குச் சென்று இறைவன், இறைவிக்கு அபிஷேகங்கள் செய்தும், வஸ்திரம் சாத்தியும் வழிபட அனைத்து இடர்களுக்கும் பரிகாரம் அமையப்பெறும். மகாலட்சுமி தலங்களையும் முறையாக வணங்கலாம். மகிழ மரக்கன்றுகளை வாய்ப்புள்ள இடங்களில் நடுவதும், மகிழ மரத்தை வணங்கி வருவதும் நீர் ஊற்றுவதும் மிகச்சிறந்த பரிகாரமாகும்.

(பயணிப்போம்)

ஓர் வேண்டுகோள்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம் சாத்துகுடல் மேல்பாதி கிராமம், வேளா குளத்தின் வடகரையில் எழுந்தருளி, நம் குலத்தை காத்து, நலமும் வளமும் நல்கி, குறை தீர்த்து நிறை தந்து, அருள்பாலிக்கின்ற ஸ்ரீவீரனார் கோவிலின் திருப்பணி தொடங்கி, கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகிறது.

இதை கண்ணுறும், குலதெய்வ அன்பர்கள் அனைவரும் கோவிலுக்கு வருகைதந்து, திருப்பணி விரைவில் முழுமையடைய உறுதுணையாயிருந்து இயன்ற பொருளுதவி தந்து, குலதெய்வத்தை கொண்டாட வேண்டுகிறோம்.

தொடர்புக்கு : 9865424084

சோம. இராமேசன், B.A.B.L.,

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRA, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

CS TEXTILE PROCESS

Office : NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **KVR Nagar, Mangalam Road (Unit - II)**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. TATA ZUDIO (INDIA)

"QUALITY IS OUR LIFE"

தம்பி வா! தமிழ் பாட வா!

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்
துணை இயக்குநர் பைந்தமிழாக்கம்.

சூரியனையும் பூமியையும்
தொட்டுக் கொண்டு பாடினானே
கணியன் பூங்குன்றன்
“யாதும் ஊரே
யாவரும் கேளீரென்று!

தமிழ்தானே
அவன் சொற்களுக்குள் புகுந்து
திசைகளை விரிவு படுத்தியது !

கவிதை எழுத
கருத்தோ சொல்லோ
புவியில்
எங்கு புகுந்து தேடினும்
தமிழில்
கிடைத்திடும் தன்மைபோல்
தரணி மொழிகள் தருவதில்லை!

அந்தப் பெருமையோடு
காவிரியின் ஓரத்தில்
குடி புகுந்து
கல்லணையின் ஈரத்தில்
உயிர் குளிர்ந்து

கன்னித் தமிழ் நிலத்தினில்
தலை நிமிர்ந்து
‘கரிகாலன்’ கொடி பிடிக்கும்
கவிஞர்களில் ஒருவன் நான்!

என்னை
இந்தக் கல்லூரியின்
வாசலுக்கு அழைத்து வந்து
கவிதைக் கோலமிடப் பணித்த
அனைத்து உள்ளங்களுக்கும்
எனது பணிவான வணக்கம்!

“குயில்கள் மட்டுமே
பாடலாம் என்றிருந்தால்
காடு நிசப்தமாகிவிடும்.
புதிய பறவையே!
நீயும் பாடு!

என்ன கவிதையில்
மழலை மொழி மாறாத
மாணவச் செல்வங்களை
மன்றமேறி கவிதை பாட
அழைக்கின்றேன்!

மொழிப் போர் களங்கண்டு
முத்தமிழை வென்றெடுத்த
வீர மறவர்களைத் தந்திட
வெற்றிக் கலைக் கூடம் இது!

இத்தகைய பெருமை படைத்த
இக் கல்லூரி எனக்கும்
எனது கவிதை நூலுக்கும்
பெருமை சேர்த்துள்ளது!

தமிழ்த் துறைத் தலைவர்
இங்கே குறிப்பிட்டது போல
எனது ‘தெருவோரப்பூக்கள்’
கவிதைத் தொகுப்பினை

எனக்கு முன்பின் அறிமுகமில்லாத
இக் கல்லூரிப் பேராசிரியர்
‘முனைவர்’ பட்ட ஆய்விற்குத்
தேர்வு செய்து சிறப்பித்துள்ளது!

‘ஆடி வெள்ளம்’ பெருக்கெடுத்து
ஓடிவரும் இந்தக் காவிரி நகரில்
தமிழ் வெள்ளம்
இக் கல்லூரி மண்டபத்தில்
கவியரங்கமாய், கருத்தரங்கமாய்
கரை புரண்டோடிகின்றது!

மேலும் தமிழுக்கு
புது ரத்தம் பாய்ச்சும் முகந்தான்
மாணவர்கள் இங்கே
கவியரங்க மேடையேறி
கண்ணித் தமிழை
அலங்கரிக்க வருகிறார்கள்!

உள்ளத்தின் உணர்வே பாட்டு!
உணர்ச்சியின் கருவே பாட்டு என்று
கவிதை பாட வரும் மாணவர்களை
இதோ எனது அன்பான
அழைப்புக் கவிதையோடு வரவேற்கின்றேன்!

“தம்பி வா!
தமிழ் பாட வா”!

“இரண்டாம் தலைநகர்”
காத்திருக்கிறது!
உனக்காய் பூத்திருக்கிறது!

இன்னும் ஒரு தமிழ்ச்சங்கம்
நீ தானே நிறுவப் போகிறாய்!
மன்றமேறி கவிதை பாடு!
மணக்கட்டும் தமிழா நாடு!

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/9 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சென்னையில் வேலையில் உள்ள சமடிப்பு வரன்.	16.09.95 154 cm	B.E. (Computer Science) M.Sc., (Cyber Forensics and Information Security	Reputed Pvt. Company	திரு. N.Gowrishankar 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044–2363 8284
B 2/9 செல்வி **S. சிந்து** விசாகம் மருவுட பூர்வீகம் : சிதம்பரம்	28.06.96	B.E. (ECE) .	Sri Navasakthi Vinayagar Transport Accountant	திரு. K. சுப்பையா, 20, நித்யானந்தா கார்டன், உசுப்பூர், சிதம்பரம் Cell : 99943 59278, 96775 04442, 94437 42459
B 3/9 செல்வி **R. ஸ்ரீரச்சனா** ரேவதி நாரணகுடை பூர்வீகம் : மூவலூர் விருப்பம் : படித்து வேலையில் உள்ள, வெளிநாடு செல்ல விருப்பமுள்ள வரன்.	11.08.90 173 cm	B.Tech., M.Sc. IT / Computer .	Quality Assurance Engineer, Intutive Surgical, Sunnyvale, California USA	திரு. A. ராஜசேகரன், B3, Aadarsh Apts., Old No. 567, New No. 918, Poonamallee High Road, Arumbakkam, Chennai - 600 106. Cell : 94425 44989
B 4/9 செல்வி **M. தாரணி** அவிட்டம் 4ம் பாதம் முள்ளுட பூர்வீகம் : வரிச்சிக்குடி	03.07.99 5' - 04"	B.Tech (CSE) .	Sutherland Global Services, Chennai Rs. 30,000/PM	திரு. C. முருகன், 5, பங்களா தெரு, வரிச்சிக்குடி, காரைக்கால் – 609 609. Cell : 94439 21231
B 5/9 செல்வி **மு. திவ்யபிரியா** கேட்டை 2ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt.) விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன்	02.06.96 5' - 4"	B.A. (English)		திரு. ச. முருகேசன் பிள்ளை, 1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO), செந்துறை (Tk.) அரியலூர் (Dt.) - 621 714. Cell : 96263 97559, 85319 86109
B 7/9 செல்வி **R. ஆர்த்தி** ரோகிணி கொங்குராயன் பூர்வீகம் : முளப்பாக்கம் விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன்	27.01.99 160 cm	B.Com., MBA	Work from Hone TNQ Technologies Pvt. Ltd., Chennai	திரு. N. இராமச்சந்திரன், 22/2 பி, காத்தாயியம்மன் கோவில் தெரு, மூங்கில் தோட்டம் மயிலாடுதுறை - 609 305. Cell : 94865 90299, 73736 54154
B 8/9 செல்வி **R. சுகன்யா** ரேவதி முதனுட பூர்வீகம் : பெரியகோட்டகம் – காட்டுமன்னார்கோவில் விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன்	04.09.93 5' - 4"	B.E. (CSE)		திரு. K. இராஜேந்திரன், பெரிய கோட்டகம், செட்டித்தாங்கள் (அஞ்சல்), கடலூர் மாவட்டம் – 608 304. Cell : 90944 14719, 99521 55584

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 9/9 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் பழுவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS) .	Software Professional EPSILON Bangalore	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : 94447 11045, 99416 20355
B 10/9 செல்வி **வ. ராஜலஷ்மி (எ) உஷா** மூலம் – 2ம் பாதம் குவாவுடை பூர்வீகம் : திருவில்லிப்புத்தூர் விருப்பம் : பட்டம் பயின்று நல்ல பணியில் உள்ள வரன்	09.04.96	B.E. (Electrical & Electronics Engineering)	சீனியர் பிராடாக்ட் என்ஜினியர் Rs. 70,000/PM	திரு. தி. வடமலையப்பன், "ஷண்முகப்ரியா" 4–3/29, மூன்றாவது தெரு ரயிலார் நகர், மதுரை – 625 018. Cell : 96007 49161, 99400 37402 Email : vadamalaiappan@gmail.com
B 11/9 செல்வி **சி. சௌந்தர்யா** திருவோணம் எரவுட பூர்வீகம் : மணவாளநல்லூர் – விருத்தாசலம்	11.10.97 163 cm	B.E. (EEE)	Capgemini Consultant Rs. 8.5 Lakhs/PA	திரு. N. சிவக்குமார், 74/1, தெற்கு தெரு, கிளிமங்கலம் & PO. திட்டக்குடி Tk. கடலூர் Dt. Cell : 91592 35153, 76398 98894

தினம் ஒரு வாஸ்து
தீர்க்காயுஷ் மான்பவ

"வாசல் தெளித்து கோலம் போடுவது பூமி பூஜையே"

ஒருமுறை ஒரு கோடீஸ்வரர் குடும்பத்தோடு வந்து காஞ்சியில் மஹா பெரியவா சுவாமியை வணங்கிவிட்டு தங்கள் குறைகள் நீங்க வழி கூறுமாறு வேண்டினர். சில நிமிட மௌனத்திற்க்குப் பின் ஆச்சாரியார் ?

"அன்றாடம் அதிகாலையில் நீர் தெளித்து வாசலில் கோலமிடுவது உண்டா என்று கேட்டார்.

பணக்கார குடும்பத்தினர்க்கு ஒரு நொடி 'சப்' என்று போய்விட்டது. தங்களின் செல்வத்தை மதிப்பளித்து ஒரு கோயிலுக்கு குடமுழக்கு செய் ஆயிரக்கணக்கானவர்க்கு அன்னதானம் செய்' என்று பெரிய அளவில் தான் ஏதாவது கூறுவார் என நினைத்திருந்தனர். இருந்தாலும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு செய்யப்படுகிறது என்றனர்.

ஆச்சரியத்தோடு அதோடு விடுவதாக இல்லை, யாரால் செய்யபடுகிறது என வினவினார் ?

இது கூட தெரிவில்லையா ? என்ற தொனியில் "வேலைக்காரிதான் என்றாள் தனவானின் மனைவி.

மஹா ஸ்வாமிகள் பொறுமை இழக்கவில்லை நிதானமாக "பூமிபூஜை செய்த புண்ணியம் வேலைக்காரியை அடைந்து விட்டது" என்றார். அவ்வளவுதான் அடுத்த நொடி குடும்பமே சாஷ்டாங்கமாக பணிந்துவிட்டது.

தாய்குலம் குழந்தைகளை மட்டுமே அதுவும் பத்து மாதம் மட்டுமே சுமக்கிறது. ஆனால் பூமித்தாயோ எல்லாவற்றையும் எப்போதும் தாங்கி கொண்டிருக்கிறாள் எனவே நாம் அனைவரும் பூமி பூஜையை தினமும் நாமே செய்ய வேண்டும் என ஆசீர்வாதம் செய்தார்.

"அப்பனே அருணாச்சலா உன் பொற் கடில் பின் பற்றி"

சிவமே ஜெயம், சிவமே தவம், சிவனே சரணாகதி.

– விசலூர். ராமசெல்வம்.

9750806991

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/9 செல்வன் **V. நந்தகுமார்** ரேவதி மருங்குட பூர்வீகம் : ஹரிஹரன் கூடல் (அரசலங்குடி) விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன்	12.02.97 177 cm	B.Tech. (M)	Ford Global Technologies Sholinganallur Rs. 8.8 Lakhs/PA	திரு. B. விவேகாநந்தன், F2, ராம் சரோவர், No. 88, வீராத்தமன் கோவில் தெரு, மேடவாக்கம், சென்னை Cell : 99420 73694, 98420 86926
G 2/9 செல்வன் **S. விக்னேஷ்** பரணி பங்களதரிய பூர்வீகம் : கீழ்நத்தம், சிதம்பரம் விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன்.	23.06.95 5' - 7"	M.Sc., (CS)	System Administrator NLGIC Support Service Pvt. Ltd., Nungambakkam Rs. 35,000/PM	திரு. S. சுந்தரம், பிளாட் எண். 34, வேலன் நகர், கண்ணங்குடி மெயின் ரோடு, சிதம்பரம் – 608 001. Cell : 99428 57747 / 73055 81424 E-mail:sundaramnirmala.90@gmail.com
G 3/9 செல்வன் **S. ஜெகநாதன்** சுவாதி 4ம் பாதம் யெனுகுடையார் விருப்பம் : சமபடிப்பு	24.07.96 180 cm	B.E., MBA.,	Software Engineer HCL Chennai	திரு. L. சரவணன், 27-1/6A, வடக்கு ரத வீதி, செங்கோட்டை – 627 809, தென்காசி மாவட்டம். Cell : 94872 46698
G 4/9 செல்வன் **G. Sivakumar** Bharani Kozhundhuda பூர்வீகம் : மேலப்பெரும்பள்ளம்	17.01.97 178 cm	DCE	Sri KGS Arts College Srivaikumdam, Thoothukudi State Govt. Job	திரு. A. Gunasekar, Plot No. 16, Annai Nagar, 1st Street, Dhanalakshmi Nagar Extn, Reddypalayam Road, Thanjavur - 613 009. Cell : 75984 21372, 73975 67303
G 5/9 செல்வன் **K.B. சுகந்த்** உத்திராடம் (மகரம்) பஞ்சதரிய பூர்வீகம் : விசலூர் விருப்பம் : பணிக்கு செல்லும் வரன் குறிப்பு : TWINS	11.04.96 5' - 10"	B.E (Mech)	Asst. Engineer (Flow Serve) Bangalore	திரு. K. Balamurugan (NLC India), S/o. R. Kanagasabai (Retd. Prof. SVC College) 41, VKA Nagar, Ammapettai, Chidambaram - 608 401. Cell : 94897 08585, 94430 46094
G 6/9 செல்வன் **K.B. சுமந்த்** உத்திராடம் (மகரம்) பஞ்சதரிய பூர்வீகம் : விசலூர் விருப்பம் : பணிக்கு செல்லும் வரன் குறிப்பு : TWINS	11.04.96 5' - 10"	B.E (Mech)	Asst. Engineer (Flow Serve) Bangalore	திரு. K. Balamurugan (NLC India), S/o. R. Kanagasabai (Retd. Prof. SVC College) 41, VKA Nagar, Ammapettai, Chidambaram - 608 401. Cell : 94897 08585, 94430 46094
G 7/9 செல்வன் **R. அருண்பரத்ராம்** பூரட்டாதி கொங்கராய திருச்சிற்றம்பலம் விருப்பம் : பணியில் உள்ள / இல்லாத வரன்	17.07.95 180 cm	B.Tech., (Computer Science)	BNP Pariban Rs. 9 Lakhs / PA	திரு. கு. ரெத்தினகுமார், 28, தில்லை நகர், பூம்புகார் ரோடு, மயிலாடுதுறை – 609 001. Cell : 94897 77444, 94425 26674
G 8/9 செல்வன் **R. பாஸ்கரன்** பூராடம் களப்பாள செந்துறை	07.09.92 167 cm	B.E., (E.C.E.)	SIRI TEL System Rs. 40,000/PM	திரு. A. இராமசாமிப் பிள்ளை 1/163, கொடிக்கால் தெரு, R.C. பள்ளி அருகில், சோமரசன்பேட்டை, திருச்சி – 612 102. Cell : 99434 06831

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/9 செல்வன் **S. குமரகணேஷ்** அவிட்டம் செம்புதரிய பூர்வீகம் : சிதம்பரம் விருப்பம் : சமமான தகுதி	23.12.98 175 cm	DEEE.,	Private Company Rs.3,75,000/PA	திரு. K. சுவாமிநாதன், 254, 11வது தெரு, சண்முகா நகர், மண்ணிவாக்கம், சென்னை – 600 048. Cell : 98419 98551, 88254 00352
G 10/9 செல்வன் **சு. ருத்திரேசன்** சுவாதி காருட பூர்வீகம் : சிதம்பரம்	07.12.96 160 cm		DCS Technologies Chennai Rs. 3 Lakhs/PA	திரு. S. சுப்ரமணியன், 2/685, பாரதி நகர், கெருகம்பாக்கம், சென்னை – 600 122. Cell : 98848 25568, 98849 12414
G 11/9 செல்வன் **சு. சந்தோஷ்குமார்** திருவோணம் மாத்துட பூர்வீகம் : தாழநல்லூர்	14.07.95 5' - 4"	B.E (Mech)	Dubai Rs. 12 Lakhs/PA	திரு. T. சுப்பிரமணியன், 131/1, நடுத் தெரு, தாழநல்லூர், திட்டக்குடி TK, கடலூர் DT, Cell : 80151 26632, 77081 30495
G 12/9 செல்வன் **J. ஜவகர் பிரகாஷ்** பூராடம் 2ம் பாதம் மங்கலமுட பூர்வீகம் : மறையூர் (மயிலாடுதுறை தாலுகா) விருப்பம் : நன்கு படித்த பணியில் உள்ள / பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன்	18.05.95 183 cm	M.Tech. (NIT Trichy) Ph.D., (IIT Chennai)	Stipend Rs. 35,000/PM	திரு. R. ஜெயபிரகாஷ் ராமச்சந்திரன், E45, ஜாகீர் உசேன் சாலை, வட்டம் – 16, நெய்வேலி டவுன் ஷிப் Cell : 94421 68706, 94877 68706
G 13/9 செல்வன் **R. தீபன்** பூரட்டாதி 3ம் பாதம் விஸ்வராய பூர்வீகம் : கார்குடல் விருப்பம் : பொருத்தமான வரன்	23.08.94	BCA MLIS	Asst. Librariyan Vel University Pallavaram, Chennai	திரு. க. ரவி, 159, பெருமாள் கோவில் தெரு, கார்குடல் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம், Cell : 79042 98829, 99425 31474
G 14/9 செல்வன் **M. கார்த்திகேயன்** உத்ரம் சேதுவராயர் பூர்வீகம் : திருநாறையூர் காட்டுமன்னார்கோயில் தாலுகா	17.12.92	B.E., Civil	Quality Analyst Amtex Soft, Solution Pvt.	திரு. K. முருகேசன், 65/1, ஸ்ரீ ராகவேந்திரா நகர், மாடம்பாக்கம், கூடுவாஞ்சேரி Cell : 82485 77571, 97907 26306, 97107 28308 E-mail : mkarthik3014@gmail.com
G 15/9 செல்வன் **R. பாலாஜி** உத்திராடம் வடிவுட பூர்வீகம் : கொற்கை, கும்பகோணம்	07.06.93 178 cm	B.E., M.Tech.,	DBS Bank Ltd., Software Engineer, Singapore Rs. 45-50 Lakhs/PA	திரு. N. ராஜன், 14/58, பானாதுரை வடக்கு வீதி, கும்பகோணம் – 612 001. Cell : 63802 09059, 90951 19878
G 16/9 செல்வன் **க. ஸ்ரீராம்** சதயம் தென்னவராய பூர்வீகம் : சாத்தநத்தம், பென்னாடம் விருப்பம் : நல்ல குணமுள்ள வரன்	12.11.94	B.E., (Mech.)	Desk Engineer, Seagreen Shievdoring & Logistics Pvt. Ltd.	திரு. S. கணபதி பிள்ளை, 30/11A, வள்ளலார் தெரு, பென்னாடம் – 606 105. Cell : 99623 74624, 97865 42401

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 17/9 செல்வன் **ப. ஸ்ரீராம்** ஆயில்யம் சாத்தனுட பூர்வீகம் : வயலூர், பெரம்பலூர் மாவட்டம் விருப்பம் : தகுந்த வரன்	28.10.94 165 cm	B.E. (CSC)	IT Analyst TCS, Chennai Rs. 40,000/PM	திருமதி. P. உமா, செந்துறை இராமச்சந்திரன் (VAO ஓய்வு) 5-A/84C, ரோஸ் நகர், பெரம்பலூர் – 612 212. Cell : 97874 84028, 97505 29615 (W)
G 18/9 செல்வன் **S. ஜெகநாதன்** சுவாதி 4ம் பாதம் யெனுகுடையார் விருப்பம் : சமபடிப்பு	24.07.96 180 cm	B.E. MBA	Software Engineer HCL Chennai	திரு. L. சரவணன், 27–1/6 A, வடக்கு ரத வீதி, செங்கோட்டை – 627 809 தென்காசி மாவட்டம் Cell : 94872 46698

துணிவே துணை

தி. கபீர்தாஸ், சிதம்பரம். 9445473386

நாம் ஒரு செயலை செய்து முடிக்க வேண்டுமானால் அதற்கு துணை நிற்பது துணிவு தான். அந்தத் துணிவை சாதனை என்றும் சொல்லாம். பயம் என்பது மனிதர்களிடம் தொன்று தொட்டு தொடர்புடையது. அந்தப் பயத்தை துணிவோடு எதிர்கொள்ள வேண்டும். அதனால் பிரச்சனைகள் வந்துவிடுமே என்று அச்சப்பட்டால் அது மனித முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட்டுவிடும். துணிவு வந்தால் பயம் ஓடிவிடும்.

வாழ்க்கையில் பிரச்சனைகள் வந்துகொண்டே தான் இருக்கும். அது நமக்கு தெரிந்தும் தெரியாமலும் வரலாம். அதை எதிர்த்து நின்று போராடுவேன் என்று திடத்துடன் நின்றால் வெற்றி நமக்கே.

பயமில்லாமல் வாழ்வதற்கு சில பயிற்சிகளை கடைபிடிக்க வேண்டும். துணிச்சலான செயல்களை கொண்டாட வேண்டும். அச்சத்தை கடந்து முன்னேற்றம் அடைந்தால் நீங்கள் உங்களை பாராட்டிக்கொள்ளுங்கள். அதனால் எதிர்மறை எண்ணங்களும் அச்ச உணர்வும் விலகி துணிச்சலாக செயல்படும் உணர்வை பெறுவீர்கள்.

தோல்விகளைக் கண்டு பயப்படாமல் அதை எதிர்கொள்ளுங்கள். அதனால் நீங்கள் புதிய அனுபவம் பெற்று வாழ்வில் உயர்வீர்கள். பய உணர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால் பாதுகாப்பு உணர்வு ஏற்படுகிறது. அந்த பயத்திலிருந்து மீண்டு வருவதற்கு வழியை மனம் தேடுகிறது. பயத்தை ஏற்காமல் துணிச்சலை வளர்க்க முடியாது. பலத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அதனால் தன்னம்பிக்கையை நாம் பெறலாம். மன அழுத்தத்தைப் போக்கபலருடன்பழகிமனதைலேசாக்கிபுத்துணர்ச்சிப் பெற வேண்டும். அச்சத்தை ஏற்றுக்கொண்டு அதை உணர்வுகளாலும், செயல்களாலும் யார் துரத்த செய்கிறார்களோ அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைவார்கள். ஒரு பிரச்சனை ஏற்பட்டால் அதை நினைத்து மன சஞ்சலமடையாமல் என்ன செய்தால் தீர்வு கிடைக்கும் என யோசிக்க வேண்டும். வாழ்வில் தோல்விகள் ஏற்பட்டாலும் அச்சமின்றி முயற்சிகளை தொடர வேண்டும்.

துணிவுகளில் பல வகைகள் உண்டு. உடல் துணிவு, சமூகத் துணிவு, அறத்துணிவு, உணர்வுத் துணிவு, அறிவுத் துணிவு, ஆன்மத் துணிவு என்பனவே அவைகள். துணிவுடன் நேர்முகத் தேர்வில் அச்சமுடன் பங்கேற்க வேண்டும். அங்கு அறிவு மட்டுமின்றி பன்பையும் சோதிப்பார்கள். இதில் தேர்வாகாவிடில் எதிர்காலம் இல்லையே என ஏங்காதீர்கள். இந்த மடம் இல்லை என்றால் சந்தை மடம் உங்களுக்காக காத்திருக்கிறது என முழு மனதுடன் நம்புங்கள்.

மன அழுத்தம் நம் உடலை மட்டும் பாதிப்பதோடு தலைவலி, உயர் ரத்த அழுத்தம், அஜீரணம், மனக்குழப்பம் போன்ற துன்பங்களை உண்டுபண்ணுகிறது. அதையும் நம்மால் தவிர்க்க முடியும். காலையில் எழுதல், தியானம், உடற்பயிற்சி, திட்டமிட்டு வேலைகளை செய்தல், அவசரப்படாமல் நிதானமாக யோசித்தல், பிறர் பிரச்சனைகளில் தலையிடாமை, குறை கூறுவதை தவிர்த்தல், நெருக்கடிகளை எதிர்கொள்ளுதல், அனுபவப்பட்டவர்களிடம் ஆலோசனை பெறுதல் இவைகளைத் துணிவுடன் கடைபிடித்தால் நம் வாழ்க்கை மிக மிக சிறந்து விளங்கும் என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்

16–ம் ஆண்டு மங்கல சந்திப்பு

நாள் : **01-10-2023**

இடம் : **ஸ்ரீ கணபதி ஹால்,** Dr. ராஜேந்திரபிரசாத் ரோடு, குரோம்பேட்டை.

Website : http://karkathar.in/marriage **Whatapp : 9444630833**

E-mail : Chrompetkarkatharsangam@gmail.com

விண்ணப்ப படிவம்

செல்வன் / செல்வி பெயர்	
பிறந்த தேதி	கோத்திரம்
நக்ஷத்திரம்	ராசி
கல்வி	பணி
இடம்	மாத வருமானம்
குடும்பம்	
தந்தை பெயர்	தாய் பெயர்
பணி	பணி
பூர்வீகம்	பூர்வீகம்
உடன் பிறந்தோர்	
முகவரி	
தொலைபேசி	ஈமெயில்

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

கையொப்பம்

நிபந்தனைகள் :

* இணையத்தளத்தில் பூர்த்தி செய்வது பிழையின்றி பூர்த்தி செய்ய உதவும்.

* விண்ணப்பிக்க கடைசி நாள் 20–09–2023

* பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப எண் மற்றும் பதிவு கட்டணம் செலுத்திய விவரம் ஆகியவற்றை வாட்ஸாப் மூலம் 9444630833 என்ற எண்ணில் மட்டும் தெரிவிக்கவும்.

தொடர்புக்கு :

பா. தியாகராஜன், செயலாளர். **9944463333**

பதிவு கட்டணம் : Rs. 500/– இந்தியன் வங்கி கணக்கு எண் 935934700, சிட்லபாக்கம் கிளை.

சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
தொ.பேசி: 044–26532182
Email: thiagu1943@gmail.com

செய்யத்தெரிந்தவன் சாதிக்கிறான். செய்யத்தெரியாதவன் போதிக்கிறான்.

கடிகாரத்தின் மீது கவனம் வையுங்கள்!

கடிகாரத்தின் மீது கவனம் வைத்து காலம் தவறாமையைக் கடைப்பிடித்த தலைவர்களில் தலைமையானவர் மகாத்மா காந்தி.தாம் மிக மதிக்கும் லோகமான்ய பாலகங்காதர திலகர் ஒரு கூட்டத்திற்குத் தாமதமாக வந்தபோது ...நமக்குக் கிடைக்கப்போகும் சுதந்திரம் அரைமணிநேரம் தாமதமானாலும் அதற்கு நீங்கள்தான் பொறுப்பேற்கவேண்டும் ...என்று கறாராகச் சொன்னார் காந்தி பிரார்த்தனைக் கூட்டங்களுக்குக்கூட அவர் தாமதமாக வருவதில்லை. ஒரே ஒரு முறை 1948 ஜனவரி30 அன்று பிர்லா மாளிகையில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் சிறிது தாமதமாகக் கலந்துகொள்ள நேர்ந்தது.சர்தார் பட்டேலுடன் முக்கிய விவாதத்தில் ஈடுபட்டதால் கடிகாரம் பார்க்கத் தவறிவிட்டார் காந்தி.அவரது உதவியாளர் அபா,பாபுஜி...இன்று உங்கள் கடிகாரத்தை நீங்கள் பார்க்காதது குறித்து கடிகாரம் வருத்தப் படபோகிறீர்கள் ....என்றார்.அது நிரந்தரமாக உண்மையாகிவிட்டது.காலம் என்பது மனிதன் வகுத்ததுதான் .ஆனால் அதன் அழுத்தம் மிக மிக வலிமையானது.உலகியல் வெற்றிக்கு மிக மிக முக்கியமானது.

அண்டப்பொய், ஆகாசப்பொய் :

இது என்ன அண்டப்பொய், ஆகாசப்பொய்? பொய்யில் வல்லவர்கள் மூன்றுபேர் சந்தித்தனர். அவர்களுக்குள் ஓர் போட்டி.அவர்கள் மூவரில் யார் அண்டத்தில் இல்லாத மிகப்பெரிய ஆகாசப்பொய் சொல்பவர் எனப் போட்டி.மிகச்சுருக்கமான வார்த்தைகள் கொண்டு மிகப்பெரிய பொய்யினைச் சொல்லவேண்டும் என்பதுதான்.

முதல் பொய்யன்: நான் காட்டின் வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். ஓர் அவரைக்கொடி தொங்கிக்கொண்டிருந்தது. அதனைப் பற்றிக்கொண்டு மேலே மேலே ஏறிச்சென்றேன். என்ன ஆச்சரியம்! சொர்க்கம் தெரிந்தது. தேவர்களையெல்லாம் சந்தித்துவிட்டு கொடி வழியாகவே கீழே இறங்கி வந்துவிட்டேன். என்றான்.

இரண்டாவது பொய்யன்: நானும் காட்டின் வழியாகத்தான் போய்க்கொண்டிருந்தேன். ஓர் சிங்கம் வாயைத்திறந்து என்னை விழுங்கிவிட்டது. அதன்வாயினுள் சென்ற நான் என் கத்தியால் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வந்துவிட்டேன். என்றான்.

மூன்றாவது பொய்யன்: மிகச்சுருக்கமாக இரண்டு பேர் கூறியதும் உண்மை. நான் நேரில் பார்த்தேன் என்று முடித்தான்.

1.கணிதப்புதிர்: ஒரு கோடு மட்டும் போட்டு கீழுள்ள சமன்பாட்டை சரி செய்க.

$$5 + 5 + 5 = 550$$

2.கணிதப்புதிர்: ரகுராமன் பிறந்தது பிப்ரவரி 29ம் தேதி 2001ம் வருடம்.அவர் பிறந்த தேதி எந்தக் கிழமையில் வரும்?

3. மூளைக்கு வேலை: உங்களிடம் ஒரு கேக் உள்ளது. இதனை 8 சம துண்டுகளாக போடவேண்டும்.நிபந்தனை 3 முறைதான் கட் செய்யவேண்டும்.

குறள் 127: **யாகாவார் ஆயினும் நாகாக்க ;காவாக்கால்**
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு .

ஒருவர் எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கு ஒன்றையாவது தீய சொற்களைப் பயிலாமல் அடக்கியாள வேண்டும். அங்ஙனம் அடக்கியாளா விட்டால் பேசும்போது சொற் குற்றத்திற்கு ஆளாகிப் பெரிதும் துன்பப் படுவர்.

ஆசிரியர் தினம்

இந்தியாவில் ஆசிரியர் தினம் செப்டம்பர் 5 ம் தேதி கொண்டாடப்படுகிறது.

பூடான் நாட்டில மே.2

பொலிவியா நாட்டில்சூன் .6

பிரேசில் நாட்டில்அக்டோபர்.15

பல்கேரியா நாட்டில்அக்டோபர்.5

சிலி நாட்டில்அக்டோபர்.16

கொலம்பியா நாட்டில்மே.15

சிறந்த ஆசிரியர்கள் யார்?

நடந்ததைச் சொல்பவர் சரித்திர ஆசிரியர்.

நடக்கப்போவதைச்சொல்பவர் பத்திரிக்கை ஆசிரியர்.

நடக்கப்போவதை கணிப்பவர் ஜோதிடர்.

நடக்கக் கூடியதை ஆராய்பவர் விஞ்ஞானி.

நடக்கச் சாத்தியமற்றதை நடத்தி முடிப்பதாக க் காதில் பூச்சுற்றுபவர் அரசியல் தலைவர்.

விடுமுறையில் குழந்தைகளுக்கு....

1. ஊரில் இருக்கும் தாத்தா,பாட்டி வீட்டிற்கு அழைத்துச்சென்று அவர்களின் எளிய வாழ்க்கையைக்காண வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள்.
2. சமையல் அறையில் அம்மாவுக்கு உதவியாக காய்கறி நறுக்குதல்,சமைத்தல் போன்றவற்றில் உதவி செய்ய பழக்குங்கள்.
3. தோட்டத்தில் அல்லது தொட்டியில் செடிகளை வளர்க்கச்செய்து தினசரி தண்ணீர்விட்டு பராமரிக்க ஊக்குவிக்கலாம்.
4. கை யெழுத்தை மேம்படுத்த தினமும் அரைமணி நேரம் பயிற்சி கொடுக்கலாம்.
5. வங்கிக்கு அழைத்துச் சென்று வங்கியில் பணம் போடுதல்,எடுத்தல் ஆகியவற்றைக் கற்றுத்தரலாம்.
6. வீட்டு மளிகை சாமான்கள் பட்ஜெட் போடக் கற்றுக்கொடுக்கலாம்.
7. முதலுதவி பயிற்சி கொடுப்பது குழுந்தைகளுக்கு வாழ்நாள் முழுமைக்கும் பயனுள்ளதாக இருக்கும்.
8. ரத்த தானம் செய்யுமிடத்திற்கு அழைத்துச்சென்று ரத்ததானம் செய்யும் அவசியத்தை எடுத்துக்கூறுங்கள்.அவர்கள் முன்பாக இரத்ததானம் செய்து முன்னுதாரணமாகவும் இருக்கலாம்.
9. அருகிலுள்ள கோவில்களுக்கு அழைத்துச்சென்று எல்லா மதமும் போதிப்பது அன்பு ஒன்றைத்தான். என்பதை புரியவையுங்கள்.

விடுகதைகள்.

1. பாயில் படுக்காமல் நோயில்லாமல் இளைக்கிறது.இது என்ன ?
2. இரவும் பகலும் ஓய்வு இல்லை.அவன்படுத்தால் எழுப்ப ஆளில்லை.அவன் யார்
3. வாலில் ஊசியுடன் திரியும் வம்பு டாக்டர்..அவர்யார் ?
4. சிறகில்லாத பறவை ஊரெல்லாம் சுற்றும்.அது என்ன ?
5. ஓடையில் ஓடாத நீர்,ஒருவரும் குடிக்காத நீர் ?என்ன நீர் ?
6. ஓட்டை வாய் உள்ளவனுக்கு விழுந்த பல் முளைக்கவே இல்லை.இது என்ன ?
7. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு.இது என்ன ?
8. குழந்தைக்கு எந்தக் கை பலமான கை ?
9. ஊரைச் சுமந்தபடி உயரத்தில் பறப்பான்.அவன் யார் ?
10. கடித்தால் துவர்ப்பு ,தண்ணீர்குடித்தால் இனிப்பு.இது என்ன ?
11. தலைக்குக் கவசம். உயிருக்குப் பாதுகாப்பு.அது என்ன ?
12. ஓசையிடுவான்,உணவு சமைப்பான்.அவன் யார் ?
13. பள்ளம் பார்த்தால் பாய்ந்து செல்வான்.அவன் யார் ?
14. சடக்கென்று வருவான்,சத்தமிட்டுப் போவான்.அவன் யார் ?

பெற்றோரிடம் சிறிய கோரிக்கை!

பெற்றோரிடம் சிறிய கோரிக்கையை வைக்கின்றேன். உங்கள் குழந்தைகள் இயல்பாகப் படிப்பதற்கு வாய்ப்பை உருவாக்கித் தாருங்கள். எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைகளை மற்றவர் களுடன் ஒப்பிட்டு குழந்தையை பதற்றமடையச் செய்யாதீர்கள். பதற்ற மடையும் குழந்தை நடுக்கத்திலும் பதற்றத்தினாலும் பாடத்தை நினைவில் வைத்துக்கொள்ள இயலாது படிக்கும் எண்ணம் தடை பட்டு விடுகிறது.அவர்களை இளைப்பாறச்செய்யுங்கள். அவர்களின் அச்சத்தை நீங்கள்தான் போக்கவேண்டும். உங்களின் அச்சத்தை அவர்கள் மீது திணிக்காதீர்கள். உங்கள் குழந்தைகள் உங்களைவிட திறமையானவர்கள் என்பதை முதலில் உணருங்கள். ஒருவேளை உங்கள் குழந்தை உங்களை வேறு குழந்தையின் பெற்றோர்களோடு ஒப்பிட்டால் அதை உங்களால் ஏற்றுக்கொள்ளமுடிகிறதா ? என்பதை மட்டும் சிந்தித்துப் பாருங்கள்.வாழ்க்கை என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக வேறு படுகிறது. உங்கள் குழந்தையின் ஆர்வத்தை, ஆற்றல் திசையை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இரண்டாவதாக நான்வைக்கும் கோரிக்கை, தயவு செய்து உங்கள் குழந்தைகளின் இறந்த காலத்தை மறந்துவிடுங்கள். அதனை நினைவு படுத்துவதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. நேற்று அவன் படிக்காமல் இருந்திருக்கலாம். அதனால் நீ படித்து என்ன கிழிக்கப் போகிறாய் என்று பேசவேண்டியதில்லை.

நேற்று அவன் கணக்கில் கவனம் செலுத்தாமல் இருந்திருந்தால், உனக்கு கணக்கே வராது என்று சொல்ல வேண்டியதில்லை. பூகோளத்தில் பற்று இல்லாமல் இருந்தால் , அதற்காக நீ பூகோளத்தில் மக்கு என்று பேசவேண்டியதில்லை.

இன்றிலிருந்து ஒரு புதிய மனிதனாய் அவன் புறப்படமுடியும் வாசிக்கின்ற புத்தகங்களை எல்லாம் நேசிக்கமுடியும். ஓர் ஓவியன் ஓவியத்தைத்தீட்டுவது போல அவன்கல்வியை கிரகித்துக் கொள்ளமுடியும். அது சாத்தியம்தான்.

அவனை உற்சாகப்படுத்துங்கள். அவனுக்கு நம்பிக்கைத்தாருங்கள். நம்பிக்கை தரமுடியாதவர்கள் தயவுசெய்து அவர்களைத் தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளாதீர்கள். அவர்கள் படிப்பதற்கு உதவியாக இருங்கள். அவர்கள் படிக்கின்றபோது நீங்கள் அமைதியாக இருந்து படிப்பதற்கு உதவியாக இருங்கள். படிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தாருங்கள். அவன் படித்து முடித்து , சற்று மனதை இலகுவாக்கிக் கொள்ள தொலைக்காட்சியின் முன்பு அமர்ந்தால் , அல்லது வேறொரு புத்தகத்தை வாசித்தால் , அந்த நேரத்தில் அவர்களைப் படிக்கச் சொல்லி கட்டாயப் படுத்தாதீர்கள். கல்வி என்பது நாம் திணிக்கத் திணிக்கத் திசை மாறிப் போவது. வற்புறுத்த வற்புறுத்த வழி நழுவிச் செல்வது. அதனை இயல்பாக்க நம் குழந்தைகளை ஊக்கப் படுத்தவேண்டும்.

ஒவ்வொரு குழந்தையிடமும் இருக்கின்ற அற்புத ஆற்றலை வெளிக்கொண்டு வருவதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் முக்கியம். அதைச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கி அக்குழந்தைகளுக்கு நாம் உதவவேண்டும்.அதன் மூலம் அக் குழந்தைக்கே ஒரு பொறுப்புணர்வு உருவாக வேண்டும்.

...நீ நல்ல மதிப்பெண் வாங்க வேண்டும். அதுதான் என்விருப்பம். உன்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது... என்று சொன்னால் அந்தக்குழந்தைக்கே பொறுப்புணர்வு வந்துவிடும். அது படிக்கின்றபோது மிகுந்த கவனத்துடன் ஆழ்ந்து வாசிக்கும். ஒவ்வொரு வரியும அதன் மனதில் உடன் பதிந்துவிடும். புரிந்து படிக்கும். வெற்றிக்கனிகள் அதன் மடியில் வந்து விழும்.

வெ. இறையன்பு, I.A.S

மனம்:

மனதை பொத்தல் குடிசையாக வைத்திராமல் எந்தப்புயலையும் தாங்கும் இரும்புக் கோட்டையாக வைத்திருக்க கற்றுக் கொள்ளுங்கள்.

உடல் நோயற்று இருப்பது முதல் இன்பம்!

மனம் கவலையற்று இருப்பது இரண்டாவது இன்பம்!

பிறருக்கு உதவியாக இருப்பது மூன்றாவது இன்பம்!

நாம் இந்தியரென பெருமை கொள்வோம்!

உலகிலேயே முதன் முதலில் மருத்துவசிகிச்சை என்ற அறிவியல் தோன்றியது இந்தியாவில்தான். உலகின் முதல் மருத்துவ நூல் எழுதப்பட்டதும் இந்தியாவில்தான்.அது வெறுமனே சிகிச்சை முறைகளை மட்டும் சொல்லவில்லை.மனித உடலின் உட்பாகங்களை அலசி ஆராய்ந்தது.கருவில் குழந்தை எப்படி வளர்கிறது என்பதைத் துல்லியமாக கணித்துச்சொன்னது.அறுவை சிகிச்சை செய்வது எப்படி என்று சொன்னது.இப்போது பிரபலமாக இருக்கும் பிளாஸ்டிக் சர்ஜரி எனப்படும் அழகு சிகிச்சையேகூட இந்தியாவின் பாரம்பரிய சிகிச்சை முறை இந்த உலகுக்குத் தந்த நன்கொடைதான்.



1769 முதல் 1799 வரையிலான அந்த முப்பதாண்டுகளில் நான்கு மைசூர் போர்கள் நடந்தன. ஹைதர் அலியும் அவரது மகன் திப்பு சுல்தானும் பிரிட்டிஷ் படைகளோடு மோதிய தீவிர போரின் போதுதான் பிரிட்டிஷ்காரர்கள் இரண்டு பாடங்களைக் கற்றனர்.

1.ராக்கெட் தொழில் நுட்பம்: திப்பு சுல்தானின் படை,லோக்கல் விஞ்ஞானிகள் தயார் செய்த ராக்கெட்டுகளை ஏவிவிட,அவர்கள் மிரண்டு ஓடினார்கள்.அந்த ராக்கெட்டுகளை லண்டனுக்கு எடுத்துப்போய் அவர்கள் தொடர்ந்து செய்த ஆராய்ச்சி ஐரோப்பிய நாடுகள் முழுமைக்கும் பரவி ராக்கெட் மற்றும் ஏவுகணை தொழில் நுட்பம் பரவ வழிவகுத்தது.எத்தனையோ நாடுகள் இதனால் வல்லரசாக உருவெடுத்தாலும் ,நிலவின்தென் துருவத்தில் நம் சந்திராயன் கால் பதித்து விட்டது. இதை முதலில் உலகுக்குக் கொடுத்தது இந்தியாதான் !

2.பிளாஸ்டிக் சர்ஜரி: அழகியல் அறுவை சிகிச்சை என்றுஇப்போது உலகம் முழுவதும் பிரபலமாகி,மைக்கேல் ஜாக்சனில் ஆரம்பித்து ஸ்ரீதேவி வரை பலர் தங்களை அழகாக்கி கொள்ளச் செய்து கொள்ளும் இந்த சிகிச்சை முறையின் பூர்வீகம் இந்தியாதான்.இதனை பிரிட்டிஷ்காரர்கள கற்றுக்கொண்டதே ஒரு சுவாரஸ்யமான கதை. பிரிட்டிஷ் படையில் பணிபுரிந்த காவாஸாஜி என்ற ஒரு மராத்தியரும் மேலும் நான்கு இந்திய சிப்பாய்களும் ஒரு நாள் திப்புசுல்தான்படைகளிடம் சிக்கிக்கொண்டனர்.அவர்களைப் பார்த்து கர்ஜித்த திப்பு தாய்நாட்டுக்கு துரோகம் செய்துவிட்டு எதிரிப்படையிடம் ஊழியம் செய்கிறீர்களா ?எனஅவர்களது மூக்கையும் வலது கையையும் வெட்டிவிட்டு துரத்தும்படி உத்தரவிட்டார்.மறுநாள் மார்க்கெட்டுக்குப்போன கமாண்டர் வித்தியாசமான முகத்தோடு ஒரு வியாபாரியைப் பார்த்தார்.அவரது மூக்கு ஒட்டுபோட்ட மாதிரி இருந்தது. நெற்றியிலும் பெரிய தழும்பு

கலப்படப்பொருட்கள் விற்றதாகக் குற்றம்சாட்டி சுல்தானின் ராணுவம் தண்டனையாக என் மூக்கை வெட்டிவிட்டது.எனக்குத்தெரிந்த நாட்டு வைத்தியர் ஒருவர் ,நெற்றியிலிருந்து தோலை அறுத்தெடுத்து மூக்கில் ஒட்டவைத்து இப்படிச்செய்தார் !என்றார் அந்த வியாபாரி.அந்த நாட்டு வைத்தியரை உடனே பிரிட்டிஷ் படைகள் தேடிப்பிடித்து கூட்டிவந்தது.பானை செய்வதை முழு நேரத் தொழிலாகக்கொண்ட ஒரு மராத்தியக் குயவர் ராணுவமருத்துவ மனயில் இரண்டு பிரிட்டிஷ் டாக்டர்கள்முன்னிலையில் காவாஸாஜிக்கும் மற்ற நான்கு பேருக்கும் புதிய மூக்கைப்பொருத்தும் ஆப்பரேஷனைச்செய்தார் அந்த வைத்தியர்! கண்டு கொண்டிருந்த பிரிட்டிஷ் டாக்டர்கள் மலைத்தே போயினர்.இந்த அதிசய சிகிச்சை குறித்து லண்டனிலிருந்து வெளிவந்த ..... என்ற பத்திரிக்கை செய்தி வெளியிட.ஐரோப்பாவே பரபரப்பாகிவிட்டது! இத்தகைய அறுவை சிகிச்சை முறையை பற்றி 1670ல் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்துவந்த இத்தாலி யாத்ரீகர் தன் நிக்கோலோ மானுஸி விவரித்திருக்கிறார்.மூன்றாயிரத்து ஐந்நூறு வருடப்பாரம்பரியம் மிக்க ஒரு மருத்துவ முறை இருந்துவந்துள்ளது தெரியவருகிறது.

உலகில் முதன் முதலாக நதிக்கரையில் குடியமர்ந்து ,

விவசாயத்தைக் கற்றுக்கொண்டு , நாகரிக சமுதாய வாழ்க்கையை தொடங்கி வைத்தது இந்தியர்கள்தான்.பருத்தி ஆடைகளை நெய்து முதலில் அணியத்தொடங்கியதும் இந்தியர்தான்.ஆயுர்வேத முறைப்படியான அறுவை சிகிச்சைக்குத் தந்தையாகக் கருதப்படுபவர் சுஸ்ருதர். காசி எனப்படும் வாரணாசியில் கி.மு. 600ம் ஆண்டு (அதாவது இரண்டாயிரத்துஅறுநூறு ஆண்டுகளுக்கு முன்னால்) சுஸ்ருதர் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. பிளாஸ்டிக் சர்ஜரியின் பிதாமகர் என்று இப்போது உலகம் முழுக்கக் கொண்டாடப்படும் சுஸ்ருதர் ,சிறந்த அறுவை சிகிச்சை நிபுணரும்கூட !இவரது சஸ்ருத சம்ஹிதை எனும் நூலில் கண்புரை நோய் எனப்படும் காட்டராக்ட் ஆப்ரேஷன், மூட்டு மாற்று ஆப்ரேஷன்,பிளந்த உதடுகளை சரிசெய்யும் ஆப்ரேஷன்,சிசேரியன் ஆப்ரேஷன் ஆகியன பற்றியும் வியக்கத்தக்க செய்திகளை அறியமுடிகிறது.

எடக்கு மடக்கு கேள்விகளுக்கு பதிலை காரணத்துடன் கூறுக:

1. சிறிய கார்தான் .ஆறுபேர் சேர்ந்துகூட பின்னால் தள்ள முடியவில்லை.ஏன் ?
2. சிறிய குடை என்றாலும் ஆறு குழந்தைகள் சென்றனர்.ஒருவரும் நனையவில்லை.எப்படி ?
3. அழகாக ஆடிக்கொண்டிருந்த மயில் பக்கத்துவீட்டில் முட்டையிட்டது.முட்டை யாருடையது ?
4. தாமரை இலை மீது தண்ணீர் நிற்காது.ஏன் ?
5. பக்கத்து வீட்டிலிருந்துவந்த வௌவால் என் வீட்டில் முட்டையிட்டால்.முட்டை யாருடையது ?
6. மெட்ரோ ரெயில் கிழக்கிருந்து மேற்கு நோக்கிச் சென்றால் புகை எந்தப்பக்கம் போகும் ?
7. ஊமை என்றாலும் நன்றாகப் பாட்டை ரசிக்கிறான்.எப்படி ?

பணம்:

வாழ்க்கையின் வசதிகளை வாங்குவதற்கான ஒரு கருவியே ஒழிய வாழ்க்கை முழுமைக்கும் மனிதனின் பணம் சம்பாதிக்கிற ஒரு கருவியாவது அசட்டுத்தனம். சம்பாதிக்கத் தெரிந்த மாதிரி செலவழிக்கவும் தெரிய வேண்டும். வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட வயதில் பணம் சம்பாதிக்க ஆரம்பித்த மாதிரியே ஒரு குறிப்பிட்ட வயதில் சம்பாதிப்பதை நிறுத்திக் கொள்ளவும் தெரிதல்வேண்டும். கல்லறைக்குப் போகும்போதும் சில்லறை பற்றிய கவலையோடு போகக்கூடாது.

அர்த்தமில்லாமல் பேசுவதற்கு வாரியார் சொன்ன கதை ஒன்று:

இரண்டு முட்டாள்கள் சந்தித்தபோது முதல் முட்டாள் கேட்டார் உங்க குடும்பத்தில் யாரோ சமீபத்தில் இறந்துபோனதா சேதி வந்ததே...அது நீங்களா ? உங்கள் அண்ணனா ?

எனக்குத்தெரியலியே ...நான் வேணா அண்ணனைக் கேட்டு சொல்லவா ?இது இரண்டாம் முட்டாளின் பதில் . இப்படி அர்த்தமில்லாமல் பேசுவது ஆபத்தானது. பின் விளைவு தெரியாமல் பேசுவது.

சேகரியுங்கள் :

குற்றங்களின் மூலம் நியாயங்களைச் சேகரியுங்கள்.
தவறுகளின் மூலம் அனுபவத்தைச் சேகரியுங்கள்.
கர்மத்தின் மூலம் ஞானத்தை சேகரியுங்கள்.
நண்பர்களின்மூலம் புத்தியைச்சேகரியுங்கள்.

செப்டம்பர் முக்கிய தினங்களில் சில

01	முதியோர் தினம்
05	ஆசிரியர் தினம்
07	உலக சுற்றுலா தினம்
08	உலக அறிவொளி தினம்
14	பொறியாளர்கள் தினம்
16	உலக ஓசோன் தினம்

இவர்கள் சொன்னார்கள்

1. கஷ்டத்தை அனுபவிக்காமல் எந்த ஒரு மனிதனும் அவரது இலட்சியத்தை அடையமுடியாது. – காமராஜர்
2. இந்த உலகமே உன்னைத் திரும்ப பார்க்கவேண்டுமென்றால் ,நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே. – ஹிட்லர்
3. முடியாது என்று நீ சொல்வதையெல்லாம் யாரோ ஒருவன் எங்கோ செய்துகொண்டிருக்கின்றான்.

– அப்துல்கலாம்

பதினாறு பேறுகள்

அபிராமி பட்டர் பாடிய அற்புதமான பாடல் ஒன்றில் கீழ்க்காணும் பதினாறு பேறுகள் யாவை என அறியப்பட்டுள்ளன. இவற்றை அவர் அபிராமி அம்மையிடம் வேண்டுவதாக உள்ளது.

1. கலையாத கல்வி : வாழ்க்கையின் வெற்றிக்கு நமக்கு வழி காட்டக்கூடிய கல்வி.
2. குறையாத வயது : நீண்ட ஆயுள்
3. கபட வராத நட்பு : நம்பிக்கைக்குரிய நல்ல நண்பர்கள்.
4. கன்றாத வளமை : நம்முடைய வளமான வாழ்க்கைக்குத் தேவையான பொருள்.
5. குன்றாத இளமை : உழைப்புக்குத் தளராத உடல் வலிமை.
6. கழுபிணியற்ற உடல் : நோயற்ற வாழ்க்கை.
7. சலியாத மனம் : எதற்கும் கலங்காத மனத்திண்மை.
8. அன்பகலா மனைவி : பெண்ணாக இருந்தால் அன்பகலாத கணவன்.
9. தவறாத சந்தானம் : அறிவு,ஆற்றல்,ஒழுக்கம்,ஆயுள் இவற்றில் தவறி விடாத குழந்தைகள்.
10. தாழாத கீர்த்தி : மென்மேலும் வளரக்கூடிய புகழ்.
11. மாறாத வார்த்தை : வாழ்வில் நேர்மை.
12. தடைவரா கொடை : நம் உழைப்புக்கான ஊதியம் தடங்கல் இல்லாமல் கிடைக்கும் வகை.
13. தொலையா நிதியம் : நம் உழைப்பால் ஈட்டிய பொருளை ஆடம்பரச் செலவுகளாலும் வீண் விரயங்களாலும் தொலைத்து விடாமல் விழிப்போடிருக்கும் சிக்கனம்,சேமிப்புப் பழக்கம்.
14. கோணாத கோல் : நேர்மையும் திறமையும் கொண்ட நல்லாட்சி.ஆட்சி நன்றாக அமையாவிட்டால் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போய்விடும்.
15. உதவிப் பெரிய தொண்டரோடு கூட்டு : நமக்குக் கை கொடுத்து வழிகாட்டி உதவக் கூடிய பெருமக்கள் தொடர்பு.
16. துய்ய நின் பாதத்தில் அன்பு : இறையருளில் நம்பிக்கை,இறைவனிடத்திலும் இவன் படைத்த உயிர்களிடத்திலும் அன்பு.

இந்தப் பதினாறு பேறுகளிலும் தலையாய பேறு கலையாத கல்வி என்பதை சிந்தித்தல் வேண்டும். நமக்கு இந்த உலக வாழ்க்கை செம்மையாக அமைய தேவையானவை எவை என்பதையும் , எவ்வாறு பெறுவது என்பதனையும் தெளிவாக்குவது கல்வியே ஆகும்.நம் வாழ்க்கையில் முயன்று பெறவேண்டிய முதலாவது கல்வி.இதன்வழி நடந்தோமானால் மற்றபேறுகள் தாமாகவே நம்மை வந்தடையும்.

ஒன்றுமுதல் பத்துவரை எண்களில் பெயர்கள்கொண்ட ஊர்கள்.

ஒண்ணுபுரம், இரண்டாம் கட்டளை, மூன்றடைப்பு, நாலு வேதபதி, அஞ்சு கிராமம், ஆறுபாதி, ஆறுகாட்டுத்துறை, ஏழுகிணறு, எட்டுகுடி, ஒன்பத்துவேலி, கோவில் பத்து.

கவலைகள் : வந்துகொண்டுதான் இருக்கும். அதை நிரந்தரமாக்குவதும். தற்காலிகமாக்குவதும் உங்களிடம்தான் உள்ளது. நிரந்தரமாக்கினால் நீ நோயாளி. தற்காலிகமாக்கினால் நீ புத்திசாலி.

எடக்கு மடக்கு கேள்விகளுக்கு பதில்கள்: 1.பின் வளைந்துவிட்டது 2.மழைபெய்யவில்லை 3.ஆண்மயில் முட்டையிடாது 4.தண்ணீருக்குக் கால்கள் இல்லை 5.வெளவால் முட்டையிடாது 6.மெட்ரோ ரெயிலில் புகை வராது 7.அவனுக்கு காதுகேட்குமே

விடுகதை விடைகள். 1.சந்திரன் 2.இதயம் 3.தேள் 4.தபால் 5.கண்ணீர் 6.சீப்பு 7.இரத்தம் 8.அழுகை 9.விமானம் 10.நெல்லிக்காய் 11.ஹெல்மெட் 12.குக்கர். 13.தண்ணீர் 14.தும்மல்

---

1. கணிதப்புதிர் : $5 + 5 + 5 = 550$

2.கணிதப்புதிர் :2001ம் வருடம் லீப் ஆண்டு இல்லை எனவே பிப்ரவரி 29ம் தேதி வராது.

3. மூளைக்கு வேலை: கேக்கினை முதலில் மேற்பக்கம் X வடிவத்தில் வெட்டிவிடவும். அடுத்து கேக்கினை குறுக்குவாட்டில் பக்கமிருந்து வெட்டினால் கேக் தற்போது 8 சம துண்டுகளாக இருக்கும்.

மணமகன் தேவை

NAME : **A B. ANU VARSHA**

DATE OF BIRTH : 12.10.1996

HEIGHT : 5’ 2”

QUALIFICATION : B.A., (English Literature)
Ethiraj College, Chennai
M B M (H R) Waikato
University, Newzealand

JOB DETAILS : Team Manager.,
HAYS Auckland,
NEWZEALAND
Resident Visa Holder

BIRTH STAR : CHITHIRAI

KOTHRAM : SAATHANUDA

FATHER’S NAME : **M. ARUL BABU** (BUSINESS)

MOTHER’S NAME : **LATHA ARUL BABU** (HOME MAKER)

ADDRESS : No. 30/1109, 74th STREET,
12th SECTOR, K K NAGAR,
CHENNAI - 600 078.

CONTACT Nos. : 98410 17425 / 98407 89325 W
87788 46958

NATIVE (FATHER) : PUTHAGARAM, MAYILADUTHURAI

NATIVE (MOTHER) : SITHAR KADU, MAYILADUTHURAI

GROOM EXPECTED : Working in **Newzealand / Australia / UK** or **Singapore**
Willing to relocate to Newzealand.

மணமகன் தேவை

பெயர்	செல்வி **A. சாந்தினி**
படிப்பு	B.Sc. Nursing
வேலை	தனியார் மருத்துவமனை, காரைக்கால்
	முயற்சி : அரசு பணி
பிறந்த தேதி	31.05.1997
உயரம்	5' - 2"
நட்சத்திரம்	உத்திரட்டாதி
கோத்திரம்	செம்பரியான்
தகப்பனார்	**N. ஆனந்தன்** (அரசு பணி ஓய்வு)
தாயார்	**A. மலர்விழி**
முகவரி	43, கீழ நெடுங்காடு,
	நெடுங்காடு – 609 603.
	காரைக்கால்
	Cell : 94863 10739 (Whatsapp)
விருப்பம்	பணியில் உள்ள வரன்

"கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

ஆண்டு சந்தா	ரூ. 300/-
ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்)	ரூ. 2000/-
கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ. 1500/-
கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ. 3000/-
கலர் முழு பக்கம்	ரூ. 6000/-
பின் அட்டை வெளியுறம்	ரூ. 7000/-
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ. 500/-
கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம்	ரூ. 750/-
கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம்	ரூ. 1500/-
கருப்பு வெள்ளை முழுப் பக்கம்	ரூ. 3000/-

பெயர்	செல்வி **NIVEDHITHA**
படிப்பு	MCA
வேலை	Software Engineer at
	Vuram Tech., Chennai
பிறந்த தேதி	06.04.1999
உயரம்	5' - 6"
நட்சத்திரம்	கேட்டை
கோத்திரம்	பகுவுட
பூர்வீகம்	மயிலாடுதுறை
தகப்பனார்	**Senthilvelan (Late) (Fruit Shop)**
தாயார்	**Lalitha** (Housewife)
முகவரி	2, South Street,
	Thiruindalur,
	Mayiladuthurai.
	Cell : 75981 79139, 98946 26139

மணமகள் / மணமகன் தேவை

பெயர் செல்வன் N. குருபிரசாத்
படிப்பு B.E., (Mechanical)
வேலை Senior Engineer at Renault Nissan Technology and Business Centre India, Mahindra World City, Chennai
பிறந்த தேதி 23.08.1995
உயரம் 5' - 8"
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் மருங்குட
பூர்வீகம் நாஞ்சலூர்
தகப்பனார் M. நடராஜன்
தாயார் N. புனிதா,
முகவரி 85, Sixth Cross Road,
Kanaga Sabai Nagar,
Chidambaram - 608 001.
Cell : 97893 30845, 97893 30846

பெயர் செல்வி SAHANA KUMAR
படிப்பு M.Sc. (Bio Chemistry)
வேலை Self Employed
பிறந்த தேதி 20.11.1998
உயரம் 165 cm
நட்சத்திரம் Anusham
கோத்திரம் Athakkunada
பூர்வீகம் Melaiyur (Karuvazhakkarai)
தகப்பனார் R. Kumar, M.E., Consultant
தாயார் G. Manimekalai, M.A., M.Com., (Varagadai)
Director of an ICSE Affiliated School
முகவரி 18/30, Sriram Nagar Main Road,
Thiruvanmiyur,
Chennai - 600 041.
Cell : 89392 69128
விருப்பம் Well educated and employed

மணமகள் தேவை

பெயர் செல்வன் **NAVEEN T.B**
படிப்பு B.Com., MBA., C.A.I.I.B.,
வேலை Asst. Manager, Canara Bank, (Govt. of India Undertaking) Working at Chennai Rs. 70,000/PM
பிறந்த தேதி 29-07-1986
உயரம் 5'-2"
நட்சத்திரம் Bharani
கோத்திரம் Meenavaraya
பூர்வீகம் Theralandur Near Kuthalam Mayiladuthurai Dist.
தகப்பனார் **R. Babuji,** BHEL Ranipet, Retd.,
தாயார் **R. Usharani,** B.T. Asst. (Govt. H School) Retd. Thuraiyur (Near Kudavasal)
முகவரி S7, II Floor, 45/69, Adarsh Apartments, Opp. KVB, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Cell : 94436 25846 (Whatsapp)
குறிப்பு Divorcee (Legally) (No Children)

பெயர் செல்வன் **K. கமல் ராஜ்**
படிப்பு B.E. (Computer Science)
வேலை Software Engineer, ADF Data Science Pvt. Ltd., Chennai Rs. 10.5 Lakhs/PA
பிறந்த தேதி 25.06.1996
உயரம் 5' - 8"
நட்சத்திரம் அஸ்தம்
கோத்திரம் சுராந்துட
பூர்வீகம் K. ஆடூர்
தகப்பனார் **C. குழந்தைவேல்**
தாயார் **K. கலைச்செல்வி** (வளையமாதேவி மேற்கு)
முகவரி Plot No. 8, Door No. 6, ராகவேந்திரா 3வது தெரு, புதுபெருங்களத்தூர், சென்னை – **600 063.** Cell : 94449 47644

பெயர் செல்வன் **T. RAJKUMAR**
படிப்பு Diploma - ECE, B.Sc.- CS
வேலை Team Leader, Network Security Engineer, Secure Network Solutions India Pvt. Ltd. Rs. 5.5 Lakhs/PA
பிறந்த தேதி 10.12.1995
நட்சத்திரம் Punarpoosam
கோத்திரம் Kankiya
பூர்வீகம் Veerasozhagan (Pallikuppam), Chidambaram
தகப்பனார் **S. Thirugnanasambandam** (Late)
தாயார் **T. Geetha**
முகவரி Plot No. 9, Murugan Nagar Extension, Kannangudi Main Road, Chidambaram - 608001. Cell : 9360171508 / 9444463183 / 9360597373

பெயர் செல்வன் **K. முத்துக்குமரன்**
படிப்பு B.E. (ECE)
வேலை Muthu Finance Rs. 40,000/PM
பிறந்த தேதி 17.10.1991
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் வங்காரமுட
பூர்வீகம் கோடாலிகருப்பூர்
தகப்பனார் **J. கல்யாணசுந்தரம்** (லேட்)
தாயார் **K. கல்யாணி** (சிதம்பரம்)
முகவரி **28,** தெற்கு வெள்ளாளர் தெரு, ஜெயங்கொண்டம் – **621 802.** Cell : 95008 93214, 99656 71981
விருப்பம் நல்ல குணமுள்ள பெண்.

மணமகள் தேவை

பெயர் செல்வன் சே. வெங்கடேஷ்
படிப்பு B.E. Harbour Engineering
AMET University,
DIPL Netherlands IHE DELFT
வேலை Coastal Engineer,
ATKINS, Bangalore
Rs. 13,60,000/PA
பிறந்த தேதி 01.05.1993
உயரம் 5' - 10"
நட்சத்திரம் பூரம்
கோத்திரம் பில்லாலுட
பூர்வீகம் தா.பழூர்
தகப்பனார் கே. சேகர்
Co.Op.Secretary (Rtd.) Farmer
தாயார் இராஜதிலகம் (பெருவரப்பூர்)
முகவரி No. 27A, திருநகர்,
வேலாயுத நகர்,
ஜெயங்கொண்டம் – 621 802.
Cell : 94422 28986
84385 64719 (Whatsapp)

பெயர் செல்வன் R. குறளரசன்
படிப்பு B.E. (Production Engg.)
MBA (HR & Finance)
வேலை HR (IT Field)
Kaar Tech, Chennai
Rs. 5 Lakhs / PA
பிறந்த தேதி 07.05.1999
உயரம் 168 cm
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் மருங்குட
பூர்வீகம் சிதம்பரம்
தகப்பனார் S. ரவி (ரியல் எஸ்டேட்)
தாயார் வை. தேன் மொழி
(அரசு பள்ளி ஆசிரியை)
முகவரி 141D, சண்முகா நகர்,
லால்புரம் / அஞ்சல் – 608 602.
சிதம்பரம் – கடலூர்
Cell : 94433 86906, 88258 52420

பெயர் செல்வன் S. ரவீன் குமார்
படிப்பு M.Tech. VLSI
வேலை Senior Engineer (VLSI)
Multicoreware inc / Uhnder inc.
Rs. 19.5 Lakhs / PA
பிறந்த தேதி 21.11.1993
உயரம் 175cm
நட்சத்திரம் சதயம் 1ம் பாதம்
கோத்திரம் கனகராய
பூர்வீகம் திருநெல்வேலி
தகப்பனார் A. சங்கர், Director of School Education (Retd.)
தாயார் P. வசந்தி, Headmistress, Govt. Hrs. Sec. School (Retd.)
முகவரி 28 & 29, VGN Highness,
Vikramaditya Street,
Iyyappanthangal, Chennai - 600 056.
Cell : 78459 14635, 86670 33721, 94447 48490
E-mail : spvrk1956@gmail.com
விருப்பம் பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள
பொருத்தமான வரன்

புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
கார்குல சொந்தங்களின் சந்திப்பு மற்றும்
"கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா

புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
கார்குல சொந்தங்களின் சந்திப்பு மற்றும்
“கார்காத்தார் ஒப்புரவு” எழுச்சி விழா

புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
கார்குல சொந்தங்களின் சந்திப்பு மற்றும்
"கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா

புதுச்சேரி கார்காத்தார் சங்கம்
கார்குல சொந்தங்களின் சந்திப்பு மற்றும்
"கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா

குடமுழுக்குப் பெருவிழா

குடமுழுக்குப் பெருவிழா

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், பூவிழுந்தநல்லூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள, **அருள்மிகு கற்பக விநாயகர், அருள்தரு விசாலாட்சி அம்மன் உடனாகிய அருள்மிகு விசுவநாதர் ஆலயம், அருள்தரு செல்லியம்மன், அருள்மிகு அய்யனார் ஆலயங்களின் குடமுழுக்குப் பெருவிழா 21.08.2023 திங்கட்கிழமை** அன்று சென்னை ராதா இன்ஜினியரிங் ஓர்க்ஸ் பி லிமிடெட் நிறுவனர் மற்றும் தலைவர் உயர்திரு. **S. வெங்கடேசன்,** திருமதி. **V. ஞானாம்பிகை வெங்கடேசன்** அவர்களின் பெருநிதி உதவியுடன் அவர்கள் குடும்பத்தார் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

18.08.2023 வெள்ளிக்கிழமை அன்று காலை விக்னேஸ்வர பூஜை, மஹா கணபதி ஹோமம், கோ பூஜை, அஷ்டலக்ஷ்மி ஹோமம் ஆகியவற்றுடன் பூர்ணாகுதி தீபாராதனையும் நடைபெற்றது. மாலையில் வாஸ்து சாந்தி தீபாராதனையும் நடந்தேறியது.

இரண்டாம் நாள் கணபதி பூஜை, முதல் கால யாகபூஜை, தீபாராதனைகள் நடைபெற்றது. அன்று மாலை திருக்கயிலாயப் பரம்பரைத் தருமை ஆதீனம் 27வது நட்சத்திர குருமணிகள் **ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்** மற்றும் திருப்பனந்தாள் காசித்திருமடம் **இளவரசு ஸ்ரீமத் சபாபதி தம்பிரான்** ஆகியோர் எழுந்தருளினர். அவர்களுக்கு நாதஸ்வர இன்னிசை முழங்க பூர்ணகும்ப மரியாதை ஊர்மக்களால் அளிக்கப்பட்டது. பின்னர் தருமை ஆதீனம் குருமகா சன்னிதானம் யாகசாலைக்கு எழுந்தருளி பூர்ணாகுதி முடித்து கிராம மக்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

பின்னர் தருமபுரம் மேனாள் தமிழ் துறைத் தலைவர் நடுவர் இலக்கியத் தென்றல் **Dr. இரா. மருதநாயகம்** அவர்கள் தலைமையில் "பக்தியிலும், பாசத்திலும் விஞ்சி நிற்பவர்கள்" ஆண்களா ! பெண்களா ! என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது.

மூன்றாம் நாள் காலை கணபதி பூஜையுடன் கோ பூஜை, கஜ பூஜை மற்றும் குதிரை ஒட்டகம் இவற்றிற்கான சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. அதன்பின் 2ம் கால யாகபூஜை நடைபெற்றது, பூர்ணாகுதி தீபாராதனையும் நடைபெற்றது. அன்று இரவு சுவாமிமலை ஓதுவார் குழுவினர் திருமுறை கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. பின்னர் தமிழக வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறை அமைச்சர் மாண்புமிகு **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள் மூன்றாம் கால யாகபூஜையில் கலந்துகொண்டு ஆலய தரிசனம் செய்தார்கள்.

நான்காம் நாள் காலை கணபதி பூஜையுடன் யாக வேள்விகள் நிறைவுற்று பூர்ணாகுதி முடிந்து யாகசாலையில் இருந்து புனித நீர் அடங்கிய கலசங்கள் உடன் யானை, குதிரை, ஒட்டகம் இவை முன்னே செல்ல, சென்னை CREW குடும்பத்தார் முன்னிலையில் முதலில் அருள்தரு பூர்ணா புஷ்கலா சமேத அய்யனார் ஆலயத்தில் விமான கலசங்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதன்பின்னர் அருள்தரு செல்லியம்மன் ஆலயத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. நிறைவாக காலை 9 மணியளவில் அருள்மிகு கற்பக விநாயகர், அருள்தரு விசாலாட்சி அம்பிகை உடனாகிய, அருள்மிகு விசுவநாத சுவாமி ஆலயத்தில் ரெட்டியூர் பாண்டியன் நாதஸ்வர இசை முழங்க, வாணவேடிக்கைகளுடன் விமான கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் மூலஸ்தான கும்பாபிஷேகம், தீபாராதனை மற்றும் பிரசாதம் வழங்குதல் நடைபெற்றது. இரவு திருக்கல்யாணம் விமரிசையாக நடைபெற்றது. இரவு ஆலயத்தில் மகா அபிஷேகம் முடிந்து சுவாமி வீதியுலா எழுந்தருளினார். கும்பாபிஷேகம் முடிந்தவுடன் பொதுமக்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. மூன்று நாட்களும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள வந்த பொதுமக்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வேளையும் தரமான உணவு அளிக்கப்பட்டது. பெரியவர்கள் அனைவருக்கும் ஆண்களுக்கு விலையில்லா வேஷ்டி துண்டும், பெண்களுக்கு சேலையும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

விழா சிறப்புற நடைபெற பெருநிதி உதவிய CREW நிறுவனத்தின் குடும்பத்தார், கும்பாபிஷேகம் சிறப்புறச் செய்த நடேச குருக்கள், மு.பரமசிவ குருக்கள், மு.கல்யாணசுந்தர குருக்கள், சிறந்த முறையில் மனநிறைவாக உணவு தயாரித்து வழங்கிய சமையல் குழுவினர், ஒலி ஒளி அமைப்புக்குழுவினர், கிராமவாசிகள், பொதுமக்கள், சென்னையிலிருந்து வந்து பணியாற்றிய CREW Volunteers மற்றும் காவல்துறை, தீயணைப்புத்துறை, மருத்துவத்துறை ஆகியோர் ஒத்துழைப்பு நல்கியது வரலாற்றில் இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

இப்படிக்கு,

திருப்பணிக்குழுவினர்.

திருச்சி சங்க பொன்விழா நிகழ்வுகள்

திருச்சி சங்க பொன்விழா நிகழ்வுகள்

திருச்சி கார்காத்தார் சங்கத்தின் பொன்விழா **30.07.2023 ஞாயிற்றுக்கிழமை,** திருச்சி மத்திய பேருந்துநிலையம், **அரிஸ்டோ ஹோட்டல், LKS மஹாலில்** சிறப்பாக நடைபெற்றது. விழா சிறப்பாக நடைபெற நன்கொடை வழங்கிய கார்குல சொந்தங்களுக்கும் மற்றும் வாழ்த்து செய்தி விளம்பரம் வழங்கிய மாநில சங்கம் மற்றும் கிளை சங்கங்களுக்கும் பெரிதளவில் விளம்பரம் அளித்து உதவிட்ட அனைத்து கார்குல வணிக பெருமக்களுக்கும், எங்களது அழைப்பினை ஏற்று தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் இருந்து வருகைதந்து விழாவினை சிறப்பித்து தந்த சங்க நிர்வாகிகள், மகளிரணி சங்க நிர்வாகிகள், சென்னை **KBF** நிர்வாகிகள் மற்றும் கார்குல சொந்தங்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் நம் கார்குல மக்களின் வசதிக்காக கார்காத்தார் ஒப்புரவு மாத இதழில் சந்தா செலுத்த வசதியாக பொன்விழா அரங்கில் தனி ஸ்டால் அமைக்கப்பட்டது. சந்தா செலுத்த வசதியாக இருந்தது. இதற்கு பதிப்பு ஆசிரியர் மற்றும் ஆசிரியருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி! நன்றி! நன்றி!

தலைவர் / நிர்வாகக்குழு / செயற்குழு உறுப்பினர்கள்

மகளிரணி / திருமண தகவல் மையம் / திருச்சி KBF நிர்வாகிகள்

மகளிரணி பொன்விழா நிகழ்வுகள்

மகளிரணி பொன்விழா நிகழ்வுகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்ந்தது
01–01–1937

உதிர்ந்தது
22–09–2022

தெய்வத்திரு. **S. ராஜலட்சுமி அம்மாள்** அவர்கள் (வயது 85)

(தெய்வத்திரு. **A.R. சாம்பசிவம் பிள்ளை** அவர்களின் மனைவி)
கீழத்தெரு, மணிக்கிராமம், சீர்காழி தாலுக்கா)

ஓராண்டு நகர்ந்தாலும்
எம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து தான் போகுகின்றேன் அம்மா
உங்களை நினைக்காத நொடிகளில்லை அம்மா
அன்னையின் ஆன்மா இறை பாதம் சரணடைய
பிரார்த்தனை செய்கிறோம்.

என்றும் நினைவுகளுடன் வாழும்.

மருமகள் : **S. கலாசுந்தரராஜன்**

மகன் : **S. மணி** (9444082626)
மருமகள் : **M. அருணா**
சென்னை– 33.

பேரன் மற்றும் **பேத்திகள்**

S. சுபா
கனடா.

R. ஜெனிதா
குவைத்.

M. பாலசுப்ரமணியன்
நெதர்லாந்து.

தெய்வத்திருவாளர்கள் : **S. சுந்தரராஜன்** (மகன்),
S. ரத்தினம் (மகன்), **R. மலர்விழிரத்தினம்** (மருமகள்)

நண்பர்கள் மற்றும் **உறவினர்கள்.**

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் :
17–05–1964

மறைவு :
05–10–2020

தெய்வத்திருமதி. K. விமலா கண்ணன்

சிதம்பரம் நகர முன்னாள் கவுன்சிலர், தி.மு.க.

பாசத்தின் பிரமாண்டமே! அன்பின் ஆளுமையே!
பண்பே பயனே! அன்பே அறனே! ஓய்ந்து விட்ட ஒளி விளக்கே
எங்களின் சேவைகள் மறுத்து, தேவைகள் தீர்த்த தேவதையே!
எங்களுக்கு எல்லாம் எது பிடிக்கும் என அறிந்து உடனளிப்பாய்
உணவாகினும், உடையாகினும், எதுவாகினும்....
மரணத்தின் வலியில் நீங்கள் துடித்ததை விட
எங்களை இனி யார் காக்க என கலங்கியதே அதிகம்.
எல்லாம் முடிந்து ஆண்டுகள் உருண்டது இன்னும்
வாழுகிறீர்கள் எங்கள் இதயங்களில் என்றும் மறையாமல் .....
மீளாதுயருடன் என்றும் உங்கள் பிரிவால் வாடும்.

கணவர் : R. கண்ணன், Foreman (Rtd) TANGEDCO

20/8A, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம்.

மகள்: K. கவிதா வெங்கடேஷ் B.E.
மருமகன் : N. வெங்கடேஷ், B.E.,
தாம்பரம், சென்னை.

மகன் : S. சுதாகர் B.E., MBA.,
மருமகள் : B. சந்தியா சுதாகர், BBA.,
பேத்தி: S. ஸ்ரீநிகா
கேளம்பாக்கம், சென்னை

மற்றும் **உறவினர்களும், நண்பர்களும்.**

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

தாயின் மடியில்
15.04.1967

இறைவன் திருவடியில்
19.08.2022

தெய்வத்திருமதி. **S.உஷா**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம்
ஜெயங்கொண்டம், நினைவில் வாழும் T.சுந்தரம்பிள்ளை-ஜெயம்
அவர்களின் பாசமிகு மருமகள் S.உஷா அர்களின்
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்

கணவர்: T.S.சிவசங்கர் பிள்ளை

மகன்கள்:
S.ஜயப்பன்
S.ஹரிகரன்

பேத்தி:
I.கிருத்திகா(எ)அதிதீ

மருமகள்கள்:
I.சத்தியா தேவி
H.செல்வபிரியா

T.S.குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும்
நண்பர்கள்-ஜெயங்கொண்டம்.

நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது
05–01–1960

உதிர்ந்தது
17–09–2019

தெய்வத்திரு. **N. தேன்மொழி** அவர்கள்

பிறந்தது : திருக்கடையூர்
வாழ்ந்தது : இலையமுதுகூடம்

ஊர் உறவு போற்றி
எப்போதும் சிரித்த முகத்துடன்
கணீர் குரலுடன்
வாழ்ந்து மறைந்த
எங்கள் குல விளக்கே!
பசியுடன் வந்தவர்க்கும்
தாகத்துடன் வந்தவர்க்கும்
தேநீரும் உணவும் அளித்து மகிழ்ந்த
எங்கள் உன்னத குலமகளே
என்றும் தெய்வமாய் இருந்து
எங்களை காத்தருள வேண்டுகின்றோம்.

தெய்வத்திரு. **A. தியாகராஜன்** கணவர் : **A. நடனம்** எம்.ஏ. எம். எட்
(சீனிவாசா மேல்நிலைப்பள்ளி, மேலையூர்)

குடும்பத்தினர்

A. உமாபதி குடும்பத்தினர்

மகன்கள் – மருமகள்கள் :
N. நீலகண்டன், B.E
N. தண்டபாணி B.A
திவ்யா நீலகண்டன்
பவித்ரா தண்டபாணி

பேரன்கள் : **நீதி, நிமலன்**
த. ஹரிஹர பவிதன்
இலையமுதுகூடம்.

மற்றும் **குடும்பத்தினர், திருக்கடையூர் விழுதுகள்**
Mob : 75984 56182 / 93440 78405

18–ம் ஆண்டு நினைவஞ்சலி

K.N.A.

B. நடராஜன் பிள்ளை

N. ஞானாம்பாள்

கீரமங்கலம் ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்

புலவர். கீ.ந. அருள்பிரகாசம், எம்.ஏ.பி.எட்.,

எங்களை விட்டு 13.09.2005 பிரிந்த அன்புத் தந்தையே உங்களின் நினைவாக இவ்வாண்டும் நெஞ்சுருக நினைத்து வழிபடுகின்றோம். என்றென்றும் உங்களின் ஆசீர்வாதம் எங்களுக்கு கிட்டிட வணங்குகிறோம். பிரிவால் வாடும்....

நினைவில் வாழும்....

இணைந்து வணங்கும்

திருமதி கிருட்டிணவேணி அருள்பிரகாசம்

"ஞானராசர் குடில்"

No. 8, திருவள்ளுவர் முதல் குறுக்குத் தெரு,

முகப்பில் ஸ்ரீ வல்லப கணபதி திருக்கோயில்,

பூதாமூர், விருத்தாசலம்

செல் : 97882 58389

அருள் இராமலிங்கம், B.E., M.I.S.T.E.,

திருமதி. உஷா இராமலிங்கம், M.Sc., B.Ed.,

செல்வி. R. சுஷ்மிதா விஷாலினி, B.Arch.,

8/40-B2, Kasthuribai Nagar 2nd Main Road,
Adyar, Chennai - 600 020.
Cell : 98418 13589, 80123 65908

"PENTAGONS" (ENGINEER & ARCHITECT)

சைபர் குற்றங்கள் (Cyber Crimes)

Dr. D. Kalyanakumar, Trichy-18.

ஆதிகாலம் முதல் அதிநவீனம் எனப்படும் ஸ்மார்ட் உலகம் வரை திருட்டு என்பது மட்டும் அழியாமல் தொடர்ந்து நடந்து வருகிறது ஏதாவது ஒரு குறுக்கு வழியில் பணம் சம்பாதித்து விடவேண்டும் என்ற நோக்கத்துடன் பலரும் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது பணப்புழக்கம் குறைந்து டிஜிட்டல் வழியிலேயே பணப்பரிமாற்றம் நடைபெறுவதால் திருடர்கள் தங்களை மேம்படுத்திக்கொண்டு டிஜிட்டல் வழியில் திருட்டு சம்பவங்களை அரகேற்றி வருகின்றனர். தொழில் நுட்ப காலத்திற்கு ஏற்ப தற்போது திருடர்களும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி திருடி வருகின்றனர். இதுபோன்று தினமும் புதுப்புது யுக்தியுடன் வலைவிரிக்கும் 'சைபர்' திருடர்களிடம் சிக்காமல் இருக்க, விழிப்புடன் இருக்க வேண்டும். வலைதளங்கள் மூலமாக செய்யப்படும். எல்லா குற்றங்களும் ஏமாற்று வேலைகளும் பணத் திருட்டுகளும் ஒருவர் வளைத்தள படத்தை எடுத்து மாற்றி அமைப்பது ஆபாச காட்சிகளை கலப்பது உருமாற்றம் செய்வது போன்ற பல இந்த வகை குற்றங்களை குறிக்கும் சிலர் தீங்கிழைக்கும் நச்சு நிரல்களை (virus) இணையத்தில் பரப்பி பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

சைபர் குற்றத்தால் தமிழகத்தில் தினமும் பறிபோகும் தொகை ரூ. 50 கோடி நகரத்தில் தான் ஏமாறுபவர்கள் எண்ணிக்கை அதிகம். நாடு முழுவதும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப சைபர் குற்றங்களும் அதிகரித்து வருகின்றன. இதில் ஈடுபடும் நபர்கள் பல்வேறு புதிய யுக்திகளை கையாண்டு வருவதால் அவர்களை பிடிப்பது போலீசாருக்கு பெரும் சவாலாக உள்ளது. டெபிட் கார்டு மோசடி. அமேசான் கூப்பன் மோசடி என ஆரம்பித்து அதன் பின் உயர் பதவியில் இருப்பவர்கள் பெயரை பயன்படுத்தி அவர்களுக்கு தெரிந்தவர்களை குறிவைத்து பணம் பறிப்பில் ஈடுபட்டனர். வங்கி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு ஆதார் கார்டு பான் கார்டு இணைக்க வேண்டும் என்று எஸ்எம்எஸ் அனுப்பி ஏமாற்றினர் பரிசு விழுந்ததாக கூறி லிங்க் அனுப்பியும் மோசடி நடந்தது. இப்போது திருமணம், மறுமணம், வேலைவாய்ப்பு ஆபாச வீடியோ, தொழில் முதலீடு, அதிக லாபம் என்று ஆசை வார்த்தை கூறி கவனத்தை திசை திருப்பி பணம் பறிப்பதும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இது குறித்து சைபர் கிரைம் போலீஸ் அதிகாரி ஒருவர் கூறியது. தமிழகத்தில் கடந்த 4 மாதங்களில் மட்டும் பண இழப்பு தொடர்பாக சைபர் கிரைம் போலீசில் 12,300 க்கும் அதிகமான புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் பொது மக்கள் இழந்த ரூ. 67 கோடியே 62 லட்சம் முடக்கப்பட்டுள்ளது. பணத்தை இழந்தவர்களுக்கு 2 ஆண்டுகளில் ரூ. 2 கோடியே 20 லட்சம் வரை திரும்ப வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மட்டும் 230 லோன் ஆப்கள், 50 போலி இணையதளங்கள் முடக்கப்பட்டுள்ளன. ஆண்டுக்கு 60,000 புகார்கள் வரை வருகிறது.

சைபர் குற்றங்களை செய்யும் கிரிமினல்களுக்கு பின்வரும் சில நோக்கங்கள் இருக்கும் :

தனிப்பட்ட நபர்களின் அந்தரங்க தகவல்களை அவரின் அனுமதி இல்லாமல் இணையம் வழியே திருடுதல், அந்த தகவல்களை கொண்டு அவர்களை மிரட்டுதல், பணிய வைத்தல். இன்டர்நெட் பேங்கிங் Login தகவல்களை, டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, தகவல்களை திருடி அதன் மூலம் வங்கிக்கணக்கில் இருக்கும் பணத்தை எடுத்தல், சில நபர்களின் புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து அதை இணையத்தில் பரப்புதல் கணினி அல்லது சாதனங்களை சேதப்படுத்துதல் அல்லது செயலிழக்க செய்தல். ஒருவரின் அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக ஆன்லைன் வழியாக அவரை கண்காணித்தல், சட்ட விரோதமாக லாபத்தை பெறும் நோக்கில் தகவல்களை மாற்றுவது, சேதப்படுத்துவது, அழிப்பது.

சைபர் குற்றங்களை தடுப்பது எப்படி?

சைபர் குற்றங்களை முழுமையாக ஒழிக்க முடியாது என்றாலும், சில தற்காப்பு முறைகளை பின்பற்றுவதன் மூலம் அதிலிருந்து நம்மை தற்காத்துக்கொள்ளலாம். அவை என்ன என்பதை காண்போம்:

மின்னஞ்சல், SMS, சமூக வலைத்தளங்கள் ஆகியவற்றில் வரும் தேவையற்ற இணைப்புகளை கிளிக் செய்யக்கூடாது. ஏனெனில் அவ்வாறு கிளிக் செய்வதால் நம்முடைய சாதனத்தை ஹேக் செய்ய வாய்ப்புள்ளது. அனைத்து பயன்பாடுகளிலும் Two-Factor Authentication (2FA) யை ஆன் செய்ய வேண்டும். உங்களின் வங்கிக்கணக்கு தகவல்கள், ATM Card தகவல்கள், Credit Card பற்றிய விவரங்கள் போன்றவற்றை யாரிடமும் சொல்லக்கூடாது. ஹோட்டல்கள், பெட்ரோல் பங்குகள் போன்ற பல்வேறு இடங்களில் டெபிட் கார்டு அல்லது

கிரெடிட் கார்டுகளை பயன்படுத்தி ஸ்வைப் செய்து பணத்தை செலுத்துவதை விட, QR Code, UPI அடிப்படையிலான செயலிகளின் மூலம் செலுத்தலாம். மொபைல் மற்றும் கணினிகள் அவ்வப்போது செயலிகள், சாப்ட்வேர்களை அப்டேட் செய்ய வேண்டும் உங்களின் சாதனத்தில் முக்கியமான தகவல்கள் இருந்தால், அதை Backup எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்களின் சாதனம் செயல் இழந்தாலும், தகவல்கள் பாதுகாப்பாக இருக்கும்.

மேலும் பொது இடங்களில் வைக்கப்பட்ட யு.எஸ்.பி. சார்ஜர்களில் சார்ஜ் போடுவதை தவிர்க்கவும். உங்களது தகவல்கள் திருட்டு போக வாய்ப்பு உள்ளது. பொது இடங்களில் உள்ள வைபையை பயன்படுத்தும் போது உங்கள் செல்போன் ஹேக் செய்யப்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே, பொது இடங்களில் உள்ள வைபையை பயன்படுத்தாதீர்கள். எந்த செயலிகளின் விவரங்களையும் முழுமையாக அறியாமல் பதிவிறக்கம் செய்ய வேண்டாம். ஆர்வத்தை தூண்டும் தலைப்புகளில் வரும் லிங்குக்கு பின்னால் தகவல், பணம் பறிக்கும் கும்பல் மறைந்து இருக்கிறார்கள் என்பதை மக்கள் உணர வேண்டும். கடைகளில் ஒட்டப்பட்டு உள்ள கியூ.ஆர் கோடுகளை பாதுகாப்பாக வைக்க வேண்டும். தவறான முறையில் பண இழப்பு ஏற்பட்டால் உடனடியாக தேசிய உதவி எண்ணான கட்டணமில்லா உதவி எண் 155260 தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். தினசரி பண பரிமாற்றத்துக்கு தனி வங்கி கணக்கை குறைந்த இருப்பில் வைத்து பத்திரமாக கையாள வேண்டும். தவறு நடந்தாலும் பெரும் நஷ்டம் ஏற்படாமல் தவிர்க்க உதவும்.

ஆன்லைன் மூலம் பணத்தை இழந்தவர்கள் பதற்றம் அடையக்கூடாது உடனே 1930 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும். www.cybercrime.gov.in என்ற முகவரியில் புகார் அளிக்கலாம். செல்போனுக்கு வருகிற குறுந்தகவல்கள், 'லிங்க்' ஆகியவற்றில் பணத்தாசை காட்டுவார்கள். அதில் உள்ளே செல்வதை தவிர்க்க வேண்டும். வேலை வாய்ப்பு தருவதாக கூறி, சங்கிலி தொடர் போல் பணத்தை சுருட்டி விடுவார்கள். இதேபோல் கடன் வழங்கும் செயலிகளையும் பதிவிறக்கம் செய்யக்கூடாது. முக்கியமாக வீடியோ அழைப்பு வந்தால் எடுக்க கூடாது. நம்மை அழைத்தவர்கள் மூலம் நமது செயல்பாடுகள் வீடியோ காட்சியாக பதிவு செய்து வைத்து மிரட்டுவார்கள். மேலும் பரிசு விழுந்திருப்பதாகவும், பரிசு பொருட்கள் அனுப்பி வைப்பதாகவும் அதை விமான நிலையத்தில் இருந்து வெளியே கொண்டு வருவதற்கான கட்டணத்தை செலுத்துவதற்கு மட்டும் பணம் அனுப்புமாறும் கேட்பார்கள் அதை நம்பி ஏமாந்து விடாதீர்கள்.

சைபர் கிரைம் போலீஸ் வழக்கு பதிவு செய்தால் என்ன தண்டனை கிடைக்கும்?

சட்டம் 2008–ன் படி மூன்று ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை சிறைவாசம் அதே போல் மேலும் ஒரு லட்சம் முதல் ஐந்து லட்சம் அபராதமும் விதிக்கப்படலாம்.

கீழ்கண்ட செக்ஷன்களில் கைதானால் – பெரும்பாலும் பெயில் கிடைக்காது என்பது குறிப்பிடத்தக்கது :

பிரிவு	குற்றம்
66 –	ஹேக்கிங்
66A -	ஆபாசமாக மெஸேஜ் அனுப்புவது
66B -	கம்ப்யூட்டர், இன்டர்நெட் வழியாக திருடப்படுவது
66C -	அடுத்தவர்களின் டிஜிட்டல் கையெழுத்து பாஸ்வேர்டுகளை திருடுவது
66D -	போலி ஐடி உருவாக்கி, தன்னை வேறு ஒருவர் போல் காட்டி மிரட்டுவது மோசடி செய்வது
66E -	ஆண், பெண் இருவரின் உடல் பாகங்களை சட்ட விரோதமான முறையில் வெளியிடுவது
66F -	சைபர் டெர்ரஸிஸம், இந்திய இறையாண்மைக்கு எதிரான செயல்களில் ஈடுபடுவது
67 -	ஆபாச போட்டோ வெளியிடுவது
67A -	ஆபாச வீடியோ காட்சிகளை வெளியிடுதல்
67B -	குழந்தைகள் தொடர்பான ஆபாச படங்களை வெளியிடுவது

இது தவிர்த்து, மான நஷ்ட ஈடு வழக்கும், அனுப்பும் மெஸேஜில் மிரட்டல் இருந்தால் கொலை மிரட்டல் வழக்கும் தனியாக தொடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ட்விட்டர், ஃபேஸ்புக், யூடியூப் போன்ற சமூக வலைதளங்களில், தமிழ்நாடு ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் குறித்து அவதூறு பரப்பும் வகையிலான போலி கணக்குகள், வன்முறையை தூண்டும் பதிவுகள் மற்றும் வீடியோக்கள் கண்காணிக்கப்பட்டு தடை செய்யப்பட்டு

வருகிறது. என தமிழ்நாடு சைபர் கிரைம் பிரிவு அறிவித்துள்ளது. மேலும் அவதூறு பரப்பும் வகையில் வெளியிடப்பட்ட 386 வீடியோக்களை தடை செய்ய யூடியூப்க்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளதாகவும் அதே போல் 221 சட்ட விரோத கடன் செயலிகள் முடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் சைபர் கிரைம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சைபர் குற்றங்களை களைய புதுமையான தொழில்நுட்ப கருவி ஒன்றை மத்திய அரசின் கீழ் இயங்கும் தொலைத்தொடர்பு துறை வடிவமைத்துள்ளது. செயற்கை நுண்ணறிவின் அடிப்படையில் முக அங்கீகார தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிம் கார்ட் பயன்படுத்துவோரை சரிபார்க்க இந்த கருவி உதவும். அதன்படி பொய்யான மொபைல் இணைப்புகளை பயன்படுத்தி சைபர் குற்றத்தில் ஈடுபடுவோரை கண்டுபிடிக்க முடியும். தமிழ்நாட்டில் 50,000 க்கும் மேற்பட்ட சட்ட விரோத மொபைல் இணைப்புகள் பயன்பாட்டில் இருப்பது தொலைத்தொடர்பு துறை வடிவமைத்த ASTR தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள அனைத்து இணைப்புகளையும் ஆய்வு செய்த தமிழ்நாடு தொலைத்தொடர்பு துறை, சட்ட விரோத மொபைல் இணைப்புகள் துண்டிக்கப்படுவதை உறுதி செய்துள்ளது.

தொலைந்த அல்லது திருட்டு போன மொபைல் போனை கண்டறிய உதவும் புதிய இணையதளத்தை மத்திய அரசு 17th May 2023 அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இணையதளம் வாயிலாக, மக்கள் தொலைந்த அல்லது திருட்டு போன மொபைல் போன் குறித்த விவரங்களை அளித்து, அதனை கண்டறிய உதவி பெற முடியும். Website: www.sancharsaathi.gov.in தமிழகத்தில் சைபர் கிரைம் பிரிவை நவீனப்படுத்த பயிற்சி கருவிகள், ஆயுதங்கள், நவீன ரக தொலை தொடர்பு கருவிகள், தடவியல் கருவிகள், டிஜிட்டல் தடவியல் மென்பொருள், அதிவேக தடவியல் இமேஜிங் சாதனம், ஆல் இன் ஒன் போர்ட்டபிள் ரைட் பிளாக்கர் ஆகிய உபகரணங்களை வாங்க அரவு ரூ.25 கோடி நிதி அளித்துள்ளது. குற்றவாளிகள் பிற மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருப்பதால் அவர்களை பிடிப்பதில் சிரமம் உள்ளது. அந்த மாநில போலீசார் ஒத்துழைப்பு வழங்க மறுக்கிறார்கள். இதனால் மீட்பு பணிகளில் தொய்வு ஏற்படுகிறது.

எம்.கே.யூ. மஹால் திறப்பு விழா வாழ்த்து

உலகெலாம் ஓங்கிவாழ
நிலமெலாம்நீடு செழிக்க வெள்ளமாய்ப் பொங்குதாய் வெள்ளாற்று
வடகரையில்
கொண்டல் மேவு துன்னார்
கடந்தை எனும் பெண்ணாகடத்தில்

உற்றம் சுற்றம் உறவாட
பற்றுப் பாசம் சதிராட
மங்கலம் யாவும் களித்தாட மகிழ்ச்சியூற்று இனிதாட

மும்மாட மாளிகையை
முகில் ஓய குளிரூட்டி
மின்தூக்கி ஏந்துடன்
மங்கலம் சுரக்கும் வளமனைஉருவாக்கி
முக்காலம் பயன்தரும்
எம்.கே.யூ. மஹால் வாழி

எம்.கே.யூ. மஹாலை ஆக்கிய
இனியர் மணக்குடையானில்
முகிழ்ந்த மணமலிமருக்கொழுந்து பழுவுடகோத்திரக்குலக்கொழுந்து
பெரு முளை முத்தையாவின்
அருள்மலி சிவக்கொழுந்து
கார்காத்த வேளாண் உயர்குல
மேஜர் குஞ்சித பாதம் வாழி

எம்.கே.யூ.வைக் கட்டமைத்த
செல்லப்பிள்ளை செந்தில்
தோளொடு தோள்நின்றசிதம்பரம் ஸ்ரீமுருகன் அணிவணிகச் செம்மல்
இராமலிங்க முத்துக் குமரேசன் உருத்திரம் செபித்த தில்லை வாழ்
அந்தணர்கள் எழுந்தருளி ஆசிவழங்கிய உருத்திர பாராயணவித்தகர்
சத்யோஜாத
சிவம் சிவப்பிரகாசுவாமிகள்
வந்துவாழ்த்தியநன்நெஞ்சங்கள்
அனைத்தும் வாழி

அருள்மிகு ஆமோதனம்பாள் அழகியகாதலி உடனுறை சுடர்க் கொழுந்தீசர்
திருவருளால் குஞ்சிதபாதம் உஷாராணிஇணையர் ஈன்ற ஆலம்
விழுதுகளாய் ஒளிர்குலவிளக்குகளாய் கார்த்திகேயன் – வித்யா இணையர்
முத்துநாதன் – சிவரஞ்சனி இணையர்
இவர் ஈன்ற ராகுல்ராஜா
சுபிக்ஷன் ரக்ஷா யாவரும் வாழி

அரணடிக்கே அன்பு செய்யும்
இவர்தம் கிளை கிளைக்கும்
கேடுபடாத் திறங் கொண்டு
எனவாழ்த்தி மகிழும்

அடியவன்
சிவகாமியின்செல்வன் டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்
நாள்: 28.08.2023

அபிஷேக தீர்த்தத்துடன் 1300 படிகளை கடக்கும் காளை.

கடல் மட்டத்திலிருந்து 1750 அடி உயரத்தில் உள்ளது சென்னி மலை வனப்பகுதி. இந்த மலை உச்சியில்தான் சென்னிமலை சுப்ரமணிய சுவாமி கோவில் இருக்கிறது. மலை உச்சியில் இருக்கும் ஆலயத்தை அடைய 1320 படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரம் ஆண்டுகள் பழமையான இவ்வாலயம் சோழர் காலத்தில் கட்டப்பட்டது.

இத்தல முருகப் பெருமானுக்கு தினமும் காலை 7 மணிக்கு விளா பூஜை, 8 மணிக்கு காலசந்தி பூஜை, பகல் 12 மணிக்கு உச்சிகால பூஜை, மாலை 5 மணிக்கு சாயரட்சை பூஜை, இரவு 7 மணிக்கு ராக்கால பூஜை, இரவு 8 மணிக்கு அர்த்தசாம பூஜை என தினமும் 6 கால பூஜைகள் நடைபெறுகிறது. இதில் காலை 8 மணிக்கு நடைபெறும் காலசந்தி பூஜைக்கு மட்டும் அடிவாரத்தில் உள்ள கோயிலுக்குச் சொந்தமான கிணற்றிலிருந்து தீர்த்தம் எடுத்துச் செல்லப்படுகிறது.

முருகனுக்கு அபிஷேகம் செய்வதற்கான இந்த தீர்த்தத்தை காளைகளின் மூலம் தினம் கொண்டு செல்லும் வழக்கம் உள்ளது. தன் முதுகில் இறைவனுக்கு பூஜை செய்யும் தீர்த்தங்களையும் பல்வேறு பூஜை பொருட்களையும் சுமந்தபடி உச்சிக்கு செல்லும் காளையை தினமும் காண முடியும். 150 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நிகழ்வு நடைபெற்று வருகிறது.

சென்னி மலை முருகன் கோவிலுக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்துள்ளனர். அப்போது மலை மேல் உள்ள முருகன் கோவிலில் தண்ணீர் வசதி இல்லை. எனவே அடிவாரத்திலிருந்து தினம் 2 காளைகள் மூலமாக தண்ணீரும், பூஜைப் பொருட்களும் கொண்டு செல்லப்பட்டன. காளை மாடுகள் ஒவ்வொன்றின் மீதும் 4 தண்ணீர் குடங்கள் வீதம் தினமும் காலை மற்றும் மாலை என இரண்டு முறை மொத்தம் 16 தண்ணீர் குடங்கள் மலை மீது கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. படிக்கட்டுகள் இல்லாத, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத அந்த காலத்தில் இப்படி கொண்டு வரப்படும் தண்ணீர்தான் அபிஷேகம் செய்வதற்கும், மலைக்கு வரும் பக்தர்களின் தாகம் தீர்க்கவும் பயன்படுத்தப்பட்டது. அதன் பிறகு சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்பு தான் சென்னிமலை முருகன் கோவிலுக்கு படிக்கட்டுகள் அமைக்கப்பட்டன. பக்தர்கள் தங்கள் நேர்த்தி கடனாக ஒரு பக்தர் 2 படிக்கட்டுகள், இன்னொருவர் 5 படிக்கட்டுகள், 10 படிக்கட்டுகள் என தங்கள் வசதிக்கேற்ப செய்தனர். இவ்வாறு அமைந்தது தான் தற்போதுள்ள 1320 படிக்கட்டுகளும்.

சென்னிமலை முருகன் கோயிலில் தற்போது அனைத்து வசதிகளும் செய்யப்பட்டிருந்தாலும் காளை 8 மணிக்கு மூலவருக்கு நடைபெறும் காலசந்தி பூஜைக்கான அபிஷேக தீர்த்தம் அடிவாரத்தில் உள்ள கிணற்றிலிருந்து தான் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த தண்ணீரோடு அபிஷேகத்திற்கு தேவையான சந்தனம், பன்னீர், விபூதி, தேங்காய், மாலை, பழம் உள்ளிட்ட பூஜை பொருட்களும் மலை உச்சிக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

இதற்காக சண்முகம், குமரன், அஜீத் குமார் என்று பெயரிடப்பட்ட மூன்று காளைகள் சுழற்சி முறையில் பயன்படுத்தப்படுகின்றன. பல வருடங்களாக இறைவனின் அபிஷேகத்திற்கு தீர்த்தங்களை சுமந்து வரும் மூன்று காளைகளும் வயது அதிகமானதால், தற்போது மேலும் காளைக்கு படிக்கட்டு வழியாக படியேறிச் செல்லும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தினமும் காலை 6.30 மணிக்கு அடிவாரத்திலுள்ள கோயிலுக்குச் சொந்தமான கிணற்றிலிருந்து 2 குடங்களில் தீர்த்தம் எடுத்து காளையின் முதுகில் கட்டப்பட்டிருக்கும் கூடையில் வைக்கப்படும். அத்துடன் பூஜைப் பொருட்களும் வைக்கப்பட்டு காளை புறப்படுகிறது. அவ்வாறு செல்லும் போது களைப்பு காரணமாக நின்று ஓய்வு எடுத்த பிறகு காளை மீண்டும் படியேற தொடங்கும். அது வரை காளையை ஓட்டிச் செல்பவர் பொறுமையுடன் காத்திருப்பார். ஓய்வு எடுத்து மலையின் உச்சியை அடைய அந்த காளைக்கு சுமார் 75 நிமிடங்கள் பிடிக்கிறது.

மூன்று காளைகளில் ஒன்று தினமும் காலை அடிவாரத்தில் இருந்து தீர்த்தம் எடுத்துக்கொண்டு மலை உச்சிக்கு வருவது வழக்கம். அப்போது பக்தர்கள் அந்த காளையை தொட்டு, வணங்கி வழிபாடு செய்வதுடன் பழங்கள் கொடுத்து மகிழ்வதும் உண்டு. காலை 8 மணிக்கு மூலவருக்கு நடைபெறும் காலசந்தி பூஜையில் மட்டும் இந்த தீர்த்தம் பயன்படுத்தப்படுகிறது. அந்த பூஜை முடிந்த அரைமணி நேரத்தில் தீர்த்தம் சுமந்து வந்த காளை மீண்டும் படிக்கட்டு வழியாக புறப்பட்டு அடிவாரத்தில் உள்ள கோசாலைக்கு சென்று விடும். இந்த ஆலயத்தில் உள்ள காளைகள் அனைத்தும் பக்தர்களின் மூலமாக கோவிலுக்கு காணிக்கையாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அமைவிடம் : ஈரோட்டிலிருந்து ரங்கபாளையம் வழியாகச் சென்றால் 27 கி.மீ தூரத்தில் சென்னி மலையை அடையலாம். ஈரோடு பஸ் நிலையத்திலிருந்து சென்னிமலைக்கு பகலில் 30 நிமிடங்களுக்கு ஒரு முறை அரசு டவுன் பஸ்கள் இயக்கப்படுகிறது.

நெ.ஆ. சிவகுருநாதன்,
சிதம்பரம். செல் : 9944419423

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் செயற்குழு கூட்டம் 29–7–2023 அன்று திருச்சி ARISTO L.K.S. மஹாலில் மாநில தலைவர் திரு. கே.கே.ஆர். சுரேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விவாதிக்கப்பட்ட பொருள்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக சங்கத்தின் கணக்கு வழக்குகள் தாக்கல் செய்யப்படாமல் இருந்தது. அவைகள் வருமான வரி துறையில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. இத்துடன் 5 செயற்குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. கடந்த பொது சபையில் கூறியபடி நமக்கென்று ஒரு அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டு அதனுடைய துணை விதிகள் இந்த கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மண்டல செயலாளர் துணைத்தலைவர்கள் ஆகியோரது பெயர்கள் மற்றும் முகவரி அடங்கிய புத்தகம் ஓரளவிற்கு தயாராக இருக்கிறது. விரைவில் அது வெளியிடப்படும். தொடர்ந்து 10% இட ஒதுக்கீடு சம்பந்தமாக மாநிலம் முழுவதும் பல்வேறு கூட்டங்களில் கலந்துக்கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு இணைப்பு சங்கங்களுக்கும் கடிதம் எழுதி உடனடியாக தமிழ்நாட்டில் இதனை அமல்படுத்த வேண்டி முதலமைச்சருக்கு கடிதம் எழுதுமாறு கேட்டுக் கொண்டோம். ஏறத்தாழ 60–க்கு மேற்பட்ட சங்கங்கள் நமது கோரிக்கையை ஏற்று முதலமைச்சருக்கு கடிதங்கள் எழுதி அதற்கான நகலை நமக்கு அனுப்பி இருக்கின்றன. வேளாளர் என்ற பெயரை வேறொரு சாதிக்கு கொடுத்ததை எதிர்த்து அனைத்து வேளாளர்களுடனும் இணைந்து நடத்தப்படும் அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கின்றோம். அதற்காக மாநில வாரியாக கூட்டப்படும் கூட்டங்களில் நமது உறுப்பினர்களை கலந்து கொள்ள சொல்லி கேட்டுக்கொண்டிருக்கிறோம். அனைத்து வேளாளர்களும் இணைந்து சாதிப்பெயரை மீட்டெடுக்கவும், 10% EWS ஒதுக்கீடு கேட்டுப்பெறவும் இதற்கென ஒரு மாநில மாநாடு நடத்தவும் திருச்சியில் கூட்டப்பட்ட மாநில அளவிலான ஒரு கூட்டத்தில் நமது தலைவர்கள் கலந்து கொண்டு அதில் தங்களை ஈடுபத்திக்கொண்டிருக்கின்றார்கள். பெண்ணாகடம் மகளிர்க்கு என்று ஒரு தனி சங்கம் உருவாக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் மழை காரணமாக கலந்து கொள்ள இயலாவிட்டாலும் காணொளி மூலம் அந்த கூட்டத்தில் பேசிநிகழ்ச்சிகளில் முழுமையாக கலந்து கொண்டோம். வழக்கம்போல பல நல உதவி திட்டங்களையும் உதவி கேட்டு வருவோர்களுக்கு உதவி, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் போன்றவைகளை கடந்த ஓராண்டில் முறையாக செய்து இருக்கின்றோம். திருநெல்வேலியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உட்பூசலுக்கு தீர்வு காண ஒரு சிறப்பு செயற்குழு கூட்டி அவர்களை அழைத்துப் பேச முயன்றோம். ஒரு பிரிவினர் மட்டும் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இருப்பினும் இன்னொரு தரப்பினரிடமும் விளக்கம் கேட்டு கடிதம் எழுதி இருக்கின்றோம். இந்த பொருள் பற்றி பின்னர் விவாதிக்க இருக்கிறோம்.

31–03–2023 வரையிலான சங்கத்தின் வரவு செலவு கணக்கு பொருளாளர் திரு. G. ராமநாதன் பிள்ளை அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மெய்கண்டார் வெல்ஃபேர் சர்வீசஸ் டிரஸ்ட் (அறக்கட்டளை) கடந்த பொது மகாசபையில் விவாதித்தபடி அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கான பணம் ஒவ்வொரு சங்க உறுப்பினரும் மாதம் தலா ஒரு ரூபாய் வீதம் இந்த அறக்கட்டளைக்கு அளிக்க வேண்டும். இதன் மூலம் நமது உறுப்பினர்கள் எவ்வளவு பேர் என்ற விவரமும் (Data base) அவர்கள் பங்களிப்பும் இந்த அறக்கட்டளையில் இருக்கும். இதற்கு அடுத்து

நமது இனத்தில் இருக்கும் வசதி படைத்தவர்களிடமும், கொடுக்கும் மனம் கொண்டவர்களிடமும் நன்கொடை வாங்கி அறக்கட்டளையை பெரிய அளவில் உருவாக்கி அதன் மூலம் ஏழை மாணவர்களின் அடிப்படை கல்வி, வாழ்வாதார தேவைகள், மருத்துவ வசதி, முதியோர் நலம் போன்றவற்றை எடுத்து செய்யலாம் என்று நிர்ணயித்து இருக்கிறோம். இந்த விவாதத்தில் அனைவரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரிவித்தார்கள். இந்த அமைப்பின் முழு விவரம் தலைவர், செயலாளர் அமைப்புச் செயலாளர், பொருளாளர் அடங்கிய குழுவில் விவாதித்து அடுத்த கூட்டத்தில் வைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

2023–24–ம் ஆண்டில் நமது இணைப்பு சங்கங்களில் மாநிலத்தில் உள்ள நம் இனத்தவர் அனைவரையும் ஒருங்கிணைத்து நமது சங்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்படும். அதேபோல வெளிநாட்டில் வசிக்கும் நம் இன மக்களை ஒருங்கிணைத்து ஆங்காங்கே சங்கங்கள் உருவாக்கி கீழ் நிலையில் உள்ள மக்களை மேம்படுத்த நமது அறக்கட்டளைக்கு அவர்கள் மூலம் உதவி பெறவும் தீர்மானித்திருக்கிறோம்.

திருநெல்வேலி சங்கத்தில் நடைபெற்று வரும் உட்பூசல் குறித்து சென்னையில் நடந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அதன் பிறகு இரண்டு பிரிவினரிடமும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பி இருந்தோம். ஒரு சிறப்பு செயற்குழு கூட்டத்தையும் மயிலாடுதுறையில் கூட்டி இருந்தோம். அதற்கு ஒரு பிரிவினர் மட்டும் நேரில் வந்திருந்து விளக்கத்தினை சமர்ப்பித்தார்கள். மற்றொரு பிரிவினர் வர இயலவில்லை என்று whatsapp மூலமாக சில கருத்துக்களை பதிவிட்டு இருந்தார்கள். ஒரு சாரார் விளக்கத்தினை மட்டும் ஏற்று நாம் செயல்பட இயலாது என்பதால் இந்த கூட்டத்தில் விளக்கமளிக்க அவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. ஆனால் அதற்கான விளக்கத்தை அவர்கள் தர இயலவில்லை. மேலும் செயற்குழு உறுப்பினர்கள் காலம் தாழ்த்தி பெறப்படும் விளக்கத்தை ஏற்கலாமா என்பது குறித்தும் சந்தேகங்களை எழுப்பினார்கள். இருந்தாலும் மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுப்பதற்காக இந்த கூட்டம் நடைபெற்று முடித்த 15 நாட்களுக்குள் தங்கள் சார்பு விளக்கங்களை சமர்ப்பிக்க இரண்டு பிரிவினருக்கும் கால அனுமதி அளிக்கப்பட்டது. கொடுக்கப்படும் விளக்கங்களை பரிசீலித்து முடிவு எடுக்கவும், இரு பிரிவினரும் விரும்பினால் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் அமைப்பு செயலாளர் அடங்கிய குழு திருநெல்வேலிக்கு நேரில் சென்று நாம் கொடுக்கும் தீர்வினை ஏற்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அப்படி அவர்களின் ஒரு பிரிவினரோ அல்லது இரண்டு பிரிவுகளும் இணைந்து நாம் சொல்வதை ஏற்காவிட்டால் திருநெல்வேலி சங்கத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

பிற விவாதங்கள் :

வருகின்ற செப்டம்பர் மாதம் நமது பொதுக்குழுவை பெண்ணாகடம் நகரில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இம்முடிவினை பெண்ணாகடம் சங்கம் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டது.

திருச்சி மண்டல செயலாளர் திரு. குணசேகர் அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் இரவு உணவு அருந்தி, இரவு தங்க அனைவருக்கும் A/C அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது என்பதால் தங்கி திருச்சி சங்க பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் வருகை தந்தோருக்கு நன்றி கூறியும் கூட்டத்தை முடித்து வைத்தார்.

பொது செயலாளர்.

நங்கநல்லூர் :

செயற்குழுக் கூட்டங்கள் 23–7–2023 மற்றும் 20–8–2023 ஆகிய தேதிகளில் தலைவரது இல்லத்தில் நடைபெற்றது, சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. S. வைத்தியநாதன் (பூர்வீகம் – திருச்சிற்றம்பலம்) வயது 78 அவர்கள் 15–7–2023 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்கள். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அகில இந்திய மருத்துவகழகத்தின் உயரிய விருதான ''வாழ் நாள் சாதனையாளர் விருது'' பெற்ற நமது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய டாக்டர் S. முத்துக்குமார், பார்வதி ஹாஸ்பிடல், குரோம்பேட்டை அவர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுகளும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை செயலரால் வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. பொருளாளர்

சமர்ப்பித்த வரவு செலவு கணக்கு விவரம் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கொங்கு மண்டல சுற்றுலா பற்றிய விவரங்கள் அதாவது தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகள் விவரமாக செயலரால் விவரிக்கப்பட்டது.

கடந்த 'மே' மாதம் அரசு ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற சங்க மகளிரணி தலைவி கலையரசி ராஜசேகரன் அவர்களுக்கு கூட்டத்தில் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. K. இளங்கோவன், தலைமை பொறியாளர் (ஓய்வு) TWAD BOARD நன்றி நவில கூட்டம் நிறைவடைந்தது.

ஆகஸ்ட் மாத கூட்டம் மகளிரணி செயலாளர் திருமதி. வனஜா சரவணன் அவர்கள் ''மலர்ச்சி'' இறைவணக்கம் பாட, சங்கத்தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

மடிப்பாக்கம் ஷீலா நகரில் வசிக்கும் A. சுரேஷ் அவர்களது தாயார் தனலட்சுமி அம்மாள் மறைவுக்கும், சங்க மேனாள் பொருளாளரும், செயற்குழு உறுப்பினருமான திரு. M. சௌந்தரராஜன் மறைவுக்கும் சென்னை நுங்கம்பாக்கம் M. மோகன் பிள்ளை அவர்களது தாயார் ராஜேஸ்வரி அம்மாள் அவர்களது மறைவுக்கும், குரோம்பேட்டை சங்க மேனாள் தலைவர் திரு. முருகேஷ் அவர்களது அன்பு மகள் ஷாலினியின் அகால மரணத்துக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட நிகழ்வுகள் செயலரால் வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. 23–7–2023 முதல் இது நாள் வரை நடைபெற்ற சங்கத்தின் பிற நிகழ்வுகள் சங்க செயலாளரால் விவரிக்கப்பட்டது.

சங்க பொருளாளர் சமர்ப்பித்த நிதிநிலை விவரத்தினை குழு ஏற்றுக்கொண்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. M. சௌந்தரராஜன் மறைவையொட்டி சங்க உறுப்பினர் திரு. B.M. சொர்ணமூர்த்தி அவர்களை செயற்குழு உறுப்பினராக பொதுக்குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கி நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர் வருகின்ற 7–1–2024 அன்று சங்கத்தின் 36–வது ஆண்டு விழாவினை நடத்த முடிவு செய்யப்பட்டது.

செப்டம்பர் மாத செயற்குழு கூட்டத்தினை ஆதம்பாக்கம் பகுதியில் நடத்திட தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி சங்கத்தின் பொன்விழா வெகு சிறப்பாக நடந்தேறியது. சங்கங்களின் வெள்ளிவிழா, பொன்விழா, நூற்றாண்டு விழாக்கள் நேர்த்தியாக சிறப்பாக ஒரு வெற்றி விழாவாக கொண்டாடுவதற்கு ஒரு முன்னுதாரணமாக இந்த விழா அமைந்திருந்தது. என்றால் மிகையில்லை. குறிப்பிட்ட நேரத்துக்கு துவங்கி அட்டவனைப்படி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி சிறப்பாக நடத்தியது அனைவரது ஏகோபித்த பாராட்டுகளைபெற்றபெருமைசங்கநிர்வாகிகளுக்கும், செயற்குழு உறுப்பினர்களுக்கும், நீண்ட நெடிய அனுபவம் திறமையும் ஒருங்கே பெற்ற சங்க தலைவருக்கும் சாரும் என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. பாராட்டுக்கள், வாழ்த்துக்கள், தருமபுரம் சன்னிதானத்தின் அருளாசியும் மரபின் மைந்தன் திரு. M. முத்தையா அவர்களின் நகைச்சுவை கலந்த சிறப்பு சிந்தனை உரையும் மகளிரணியினரின் செயல்பாடுகளும் விழாவுக்கு மகுடம் சூட்டியது. இந்த சிறப்பு நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் சார்பில் கலந்து கொண்ட 30–க்கும் மேற்பட்ட இருபால் அன்பர்களுக்கும் பாராட்டுக்கள். நன்றிகள்.

கார்காத்தார் ஒப்புரவு எழுச்சி விழா வெகு சிறப்பாக அமைந்திருந்தது. மண்டலவாரியாக இது போன்ற விழாக்கள் நடத்த கார்காத்தார் ஒப்புரவு நிர்வாகத்தை கேட்டுக்கொள்வதுடன் அதற்கான முழு ஒத்துழைப்பையும் நங்கநல்லூர் சங்கம் வழங்கும் என்பதனை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. சு. கார்த்திகேயன் செயற்குழு உறுப்பினர் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

– க. சரவணன், தலைவர்.

அண்ணாநகர் :

சங்க கூட்டம் 13–8–2023 அன்று நடைபெற்றது.

2–10–2023 காந்தி ஜெயந்தி அன்று அண்ணாநகர் டிகே கல்யாண மண்டபத்தில் மதியம் 2 மணி முதல் அண்ணாநகர் சங்கத்தின் ஆண்டு விழா நடைபெற இருக்கிறது.

ஆண்டு மலரில் சங்கத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்ட திரு. சூரியமூர்த்தி, முன்னாள் தலைவர்

அவர்களையும் திரு. ஐஒபிநமச்சிவாயம் அவர்களையும், டாக்டர் கோவிந்தன் அவர்களையும் கவுரவிக்கும் படியாக அட்டை படத்தில் மூவரின் போட்டோவை போடுவதென முடிவு செய்யப்பட்டது.

ஆண்டு விழா செலவிற்கு ரூ. 40000/– நன்கொடை அளிக்க இருப்பதாக தெரிவித்த ஆலோசகர் டாக்டர் விவேகானந்தன் அவர்களுக்கும் பொருளாளர் பாலசுப்பிரமணியன் அவர்கள் காலண்டர் போட ரூ. 5000/– நன்கொடையும், கொடுங்கையூரில் ஒரு பள்ளி மாணவிக்கு 5000/– கல்வி உதவிதொகையும் அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இந்த வருடம் சிறுவர்களுக்கான போட்டிகள் நடத்தி பரிசளிக்க முடிவு செய்யப்பட்டது. நிறைவாக திரு. எஸ். பாலகுமார் அவர்கள் நன்றி சொல்ல கூட்டம் நிறைவு பெற்றது.

கொடுங்கையூர் பகுதி கூட்டம் மூன்றாவது ஞாயிறு அன்று நடத்தப்பட்டது. அதில் தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தார். நன்றி!

என். ஆனந்தகணபதி, செயலர். 9094682811

குரோம்பேட்டை :

சங்க செயற்குழு கூட்டம் தலைவர் திரு. மனோகர் இல்லத்தில் 27–08–23 நடைபெற்றது.

சங்க பொருளாளர் திரு. வசந்த குமார் நிதி நிலை அறிக்கை வாசித்தார்.

ஆடி மாத கடைசி வெள்ளியான 11–08–23 அன்று 25 கார்குல மகளிர் கலந்து கொண்ட திருவிளக்கு பூஜை மருத்துவர் செல்வகணபதி அவர்களின் இல்லத்தில் சீரும் சிறப்புமாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றியையும், உற்சாகத்துடன் கலந்துகொண்ட மகளிருக்கு பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

குரோம்பேட்டை கார்காத்தார் சங்க முன்னாள் தலைவர் திரு. முருகேஷ் அவர்களின் மகள் செல்வி. ஷாலினி 15–08–23 அன்று சாலை விபத்தில் அகால மரணமடைந்ததற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

குரோம்பேட்டை கார்காத்தார் சங்க மகளிர் அணி திருமதி. வனஜா செல்வகணபதி அவர்களின் தலைமையில் உருவாக்கவும், இளைஞர் அணி உருவாக்க திரு. சந்தோஷ் விஜயன் அவர்களை ஒருங்கிணைப்பாளராக கொண்டு செயல்படவும், உறுப்பினர் சரிபார்ப்பு, ஆண்டு சந்தா, ஆயுள் சந்தா ஆகியவற்றை சீரமைக்கவும், 01–10–23 அன்று நடைபெற இருக்கும் மங்கல சந்திப்புக்கு இது வரை எடுக்கப்பட்டுள்ள முன்னெடுப்புகள் ஆய்வு செய்து மேலும் சிறப்பாக செயல்பட தேவையானவற்றை செய்யவும், லயன்ஸ் சங்கத்துடன் இணைந்து கண் சிகிச்சை முகாம் நடத்த தீர்மானிக்கப்பட்டு துணை தலைவர் திரு. தீபன் ஆலோசனை பெயரில் 10–09–23 அன்று நடத்த ஏற்பாடுகள் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

பா. தியாகராஜன்,

செயலாளர்.

போரூர்

10.08.2023 அன்று போரூர் கார்காத்தார் சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் A. ராமலிங்கம் அவர்கள் இல்லத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. 24.09.2023 அன்று சங்கத்தின் 8ஆம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற உள்ளது.

2 மணியளவில் சிறுவர்கள் விளையாட்டு போட்டிகள் மற்றும் தனித்திறன் போட்டிகள் நடைபெறும்.

4 மணியளவில் குத்துவிளக்கு ஏற்றி இறைவணக்கத்துடன் நிகழ்ச்சி ஆரம்பம். அடுத்து பரதநாட்டியம், கீபோர்டு வாசித்தல்.

சிறப்பு விருந்தினர்கள் நிகழ்வு, சிறப்பு மருத்துவர்கள் உரை, நமது பகுதி மருத்துவர்களை கௌரவபடுத்துதல்

கூப்பன் மூலம் குலுக்கல் பரிசு 20 நபர்களுக்கு வழங்குதல், விழாவிற்கு வரும் சொந்தங்களுக்கு சிறப்பு பரிசு வழங்கல், இந்த ஆண்டு 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு முடித்த மற்றும் கல்லூரி படிப்பு முடித்த மாணவர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும். (பேர் பதிவு செய்யவும்)

60, 70, 80 வயது பூர்த்தி அடைந்தவர்களை கௌரவபடுத்துதல்.

செயற்குழு உறுப்பினர்களின் ஆலோசனைப்படி ஆண்டுவிழா சிறப்பாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

பொருளாளர் K. பரமசிவம் நன்றிகூற செயற்குழுகூட்டம் இனிதே நிறைவுற்றது. நமது கார்குல சொந்தங்கள் இதனை அழைப்பாக ஏற்று போரூர் கார்காத்தார் சங்கத்தின் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு

சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். நமது பகுதியில் உறுப்பினர் ஆகாத கார்குல சொந்தங்கள் சங்கத்தில் உறுப்பினராக இணைந்து செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

A. இராமலிங்கம்,
தலைவர்.

பெருங்களத்தூர்

சங்க செயற்குழு கூட்டமும், வண்டலூர் பகுதி கூட்டமும் 22–07–2023 அன்று வண்டலூர், ஒட்டேரியில் சங்க செயற்குழு உறுப்பினர் கன்னியாகுடி திரு. G. முத்துகுமாரசாமி அவர்கள் இல்லத்தில் சங்க தலைவர் திரு. R. கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. இணைச்செயலாளர் கதிராமங்கலம் திரு. ஏ. பாலசுப்பிரமணியன் அவர்களின் வரவேற்புடன் துவங்கியது.

கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை குறித்தும், ஆண்டு சந்தா நிலுவை வசூல் குறித்தும் விவாதிக்கப்பட்டு, ஆண்டு சந்தா நிலுவையைப் பகுதிவாழ் உறுப்பினர்கள் வசூலிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் அன்று இரண்டு புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.

பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கான 10% இட ஒதுக்கீட்டை பெற மாநில சங்கத்தின் மூலம் மீண்டும் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த செயற்குழு கூட்டமும், பகுதி சங்க கூட்டமும் மணிமங்கலம் பகுதி உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து மணிமங்கலத்தில் நடத்த முடிவெடுக்கப்பட்டது. சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. துரைராஜ் பிள்ளை அவர்களின் சதாபிஷேகம் சிவாலி ஹாலில் நடைபெற்றதில் நிர்வாகிகள் கலந்துகொண்டு பொன்னாடை அணிவித்து ஆசிபெற்றனர்.

CBSE பத்தாம் வகுப்பில் சங்க இணைச் செயலாளர் திரு. V. பாலசுப்பிரமணியன் அவர்களின் பேத்தியும், திரு. A. சுந்தரவடிவேல் அவர்களின் புதல்வியுமான செல்வி. S. ஜெகப்பிரியா, 500 க்கு 451 மதிப்பெண்கள் பெற்றமைக்கு வண்டலூர், ஒட்டேரியில் வசிக்கும் திரு. நடராஜன் அவர்களின் புதல்வி செல்வி. N. மதுமிதா மாவட்ட அளவிலான ஹாக்கி போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றமைக்கும், இளைய மகள் செல்வி. N. சுஷ்மிதா சிலம்பாட்டம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றமைக்கும் பாராட்டு தெரிவித்து பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள்.

சங்க உறுப்பினர் கிழக்கு தாம்பரம் திரு. K. ரத்தினகுமாரின் தகப்பனார் திரு. G. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை, முன்னாள் ராணுவ வீரர், இறைவனடி சேர்ந்தமைக்கும், பெருங்களத்தூர் (லேட்) R. ரவிச்சந்திரன் அவர்களின் புதல்வரும், சங்க உறுப்பினருமான திரு. R. விக்னேஷ் மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் இணைச்செயலாளர் சிதம்பரம் திரு. ஏ. சேகர் அவர்கள் நன்றி நவில தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

- R. சாந்தி,
பொருளாளர்.

புதுச்சேரி கார்குலச் சொந்தங்களின் சந்திப்பு மற்றும் ''கார்காத்தார் ஒப்புரவு'' எழுச்சி விழா

புதுச்சேரி, E.C.R.இல் அமைந்துள்ள ஸ்ரீராஜராஜேஸ்வரி திருமண மண்டபம், 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை காலை விழாக்கோலம் பூண்டிருந்தது. அங்குதான் புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் சார்பில், ''சொந்தங்களின் சந்திப்பு'' என்ற பெயரில் ஆண்டு விழாவும், சென்னை கார்காத்தார் சங்கமும் இணைந்து நடத்திய ''கார்காத்தார் ஒப்புரவு'' எழுச்சி விழாவும் ஒருசேர நடைபெற்றது.

ஒரே நேரத்தில் பல நிலவுகள் ஒன்று சேர்வது போல் புதுச்சேரி, சென்னை, காரைக்கால், செம்பொன்னார்கோயில், விருத்தாசலம், சிதம்பரம், மணிகிராமம், மயிலாடுதுறை, பென்னாடம் எனப் பல ஊர்களைச் சார்ந்த நம் கார்குலச் செம்மல்கள் ஒன்று திரண்டு மேடையை அலங்கரித்தனர்.

புதுச்சேரி மகளிர் அணியினர் விழா நாயகர்களுக்கு மண்டபத்தின் வாயிலில் பாவை விளக்குடன் வரவேற்பு நல்கினர். மங்கலகரமாகக் குத்துவிளக்கேற்றி செல்வி வசுந்தரா இறைவணக்கம் பாடினார். இறைவனை வழிபட்டு விழா நிகழ்வுகளைத் தொடங்கினர்.

முதலில் புதுச்சேரி "கார்குலச் சொந்தங்களின் சந்திப்பு" தொடங்கியது. புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் தலைவர் திரு. J. ராஜன்பாபு வரவேற்புரை நல்கினார். மேனாள் தலைவர் திரு. M.A.J. ராஜேந்திரன் தலைமையுரை ஆற்றினார். புதுச்சேரி கார்குல வள்ளல் Dr. C. வைத்தியலிங்கம் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். துணைத் தலைவர்கள் திரு. சிவ. மாதவன் திரு. G. பத்மநாபன் மற்றும் பொருளாளர் திரு. K. ராஜேந்திரன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். மண்டலச் செயலாளர் திரு. எ. முத்துக்குமார சுவாமி காரைக்காலில் கார்காத்தார் சங்கம் சிறப்பாக செயல்பட்டு வரும் முறையை எடுத்துரைத்தார். காரைக்கால் சங்கத்தை சார்ந்த திரு. S. கோபு (எ) நெடுஞ்செழியன் அவர்கள் பேசும்போது விழாவுக்கு வருகை தரும்போது காரைக்கால் வரிச்சிக்குடி திரு. K. செல்வம் விபத்தில் இறந்ததற்கு கூட்டம் மௌன அஞ்சலி செலுத்தியது. செயலாளர் திரு. S. வெங்கடேசன் நன்றியுரை ஆற்றினார்.

விழாவில் கலந்துகொண்ட அனைவரையும் மகிழ்விக்கும் வகையில் பரதநாட்டியம் மற்றும் பட்டிமன்றம் நடைபெற்றது. செல்வியர்கள் M. கோமதி, B. நிருபமாஸ்ரீ, L. காவியா ஆகியோர் சேர்ந்து "என்னப்பன் அல்லவா" என்ற பாடலுக்கு ஆடிய சிவதாண்டவமும் இடுப்பில் வளையம் சுழல விட்டுகொண்டே ஆடிய நாட்டியமும் அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்தியது.

சமூகம் பண்பாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய பங்களிப்பது ஆண்களா ? அல்லது பெண்களா என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் 'பெண்களே' என்ற தலைப்பில் திருமதி கண்ணகி செல்வகுமார், திருமதி. Dr. கயல்விழி பாலமுருகன் பேசினர். 'ஆண்களே' என்ற தலைப்பில் திருமதி. S. சத்யவதி, திருமதி. கோமதி இரத்தினகுமார் பேசினர். நடுவராக இருந்த திரு. சிவ. மாதவன் பண்பாட்டை வளர்ப்பதில் பெண்களுக்கு இணையாக ஆண்களும் முக்கிய பங்கு ஆற்றுவதாகத் தீர்ப்பு வழங்கினார்.

சில முக்கிய நிகழ்வுகள்

புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் சார்பில், சென்னை கார்காத்தார் சங்க மற்றும் "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகிகளுக்கும், தமிழ்நாடு கார்காத்தார் சங்கக் கூட்டமைப்பின் நிர்வாகிகள் அனைவருக்கும் பொன்னாடை மற்றும் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

எண்பது அகவை நிரம்பிய நம் குலத்தின் மூத்த செம்மல்கள் திரு. M.A.J. ராஜேந்திரன் – திருமதி. பிரேமா தம்பதியினர் திரு. A. ராஜசேகரன் – திருமதி. வான்மதி தம்பதியினர் திருமதி. ஞானாம்பிகை ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

புதுச்சேரி அரசின் கலைமாமணி விருது பெற்ற திரு. டாக்டர் காரை. மு. வேணு திருமதி வ. விஜயலட்சுமி ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்ற புதுச்சேரி வாழ் கார்குல இளவல்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் கௌரவத் தலைவர் திரு. M. பிரதாபன் அவர்களின் வழிகாட்டுதலில் தலைவர் J. ராஜன்பாபு அவர்களின் முன்னெடுப்புடன் திரு. S. சிவசண்முகம், திரு. G. பத்மநாபன், திரு. G. ஞானசேகரன், திரு. J. ரவிந்திரன், திரு. V. ஆனந்தன், திரு. S. ராமலிங்கம், திரு. M. கார்த்திகேயன், திரு. T.S. தமிழ்செல்வன், திரு. P. ரத்தினசபாபதி, திரு. இளஞ்செழியன், திரு. பாலகிருஷ்ணன் மற்றும் மகளிர் அணியை சார்ந்த திருமதி. வானதி ரவி, திருமதி. உமா பிரதாபன், திருமதி. G. விஜயகுமாரி பாரிவள்ளல், திருமதி. கண்ணகி செல்வகுமார், திருமதி. சௌமியாகுமார், திருமதி. உமா சிவசண்முகம், திருமதி. R. கீதா ரத்தின சபாபதி, திருமதி. A. சுந்தரவள்ளி ஆனந்தன், திருமதி. மலர்விழி தமிழ்செல்வன், இளைஞர் அணியை சார்ந்த திரு. R. பாலமுருகன் போன்று பலர் பல நாட்கள் திட்டமிட்டு விழா சிறப்பாக நடக்க கடுமையாக உழைத்தனர்.

கார்குல சொந்தங்கள் தாராளமாக நிதி உதவி மற்றும் விளம்பர உதவி வழங்கினர். பெரும் திரளாக நம் சொந்தங்கள் கலந்துகொண்டு விழா நிகழ்வுகள் சிறக்கச் செய்தனர். இச்சந்திப்பின் மூலம் புதுச்சேரி கார்குலம் தன் ஒற்றுமையின் பலத்தை மீண்டும் வெளிப்படுத்தியது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா

விழாவின் இரண்டாவது நிகழ்வாகக் "கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா தொடங்கியது. மாநில கார்காத்தார் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் திரு. Dr. K.K.R.K. சுரேஷ், பொருளாளர் திரு. G. இராமநாதன், சென்னை கார்காத்தார் சங்கத்தின்

தலைவர் திரு. சபா. சிவகுமார், துணைத்தலைவர் திரு. கனக. சுப்ரமணியன், பொருளாளர் திரு. S. ஞானசேகரன் "ஒப்புரவு" இதழின் ஆசிரியர் மேலையூர் திரு. ச. அன்பழகன், பதிப்பாசிரியரும் சென்னை கார்காத்தார் சங்க செயலாளரும், தமிழ்நாடு கார்காத்தார் சங்கக் கூட்டமைப்பின் அமைப்பு செயலாளருமான திரு. கைலை. சண்முகம், இணையாசிரியர் திரு. G. தியாகராஜன், நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி. வனஜா இளங்கோவன் ஆகியோர் ஒப்புரவு இதழ் எழுச்சி பெற வாழ்த்துரை வழங்கினர்.

சென்னை கார்காத்தார் சங்கம் சார்பில் "கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழாவை ஏற்று நடத்திய புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் நிர்வாகிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர். அதேபோல் காரைக்கால் கார்காத்தார் சங்கத்தின் சார்பிலும் புதுச்சேரி நிர்வாகிகளுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவப்படுத்தினர். "கார்காத்தார் ஒப்புரவு" ஆகஸ்ட் மாத இதழ் புதுச்சேரி சிறப்பிதழ் முதல் இதழைப் புதுச்சேரி கார்காத்தார் சங்கத்தின் கௌரவத் தலைவர் கேப்டன் M. பிரதாபன் பெற்றுக்கொண்டார்.

விழாச் சிறப்புரை ஆற்றிய கேப்டன் திரு. M. பிரதாபன் ஒப்புரவு இதழ் எழுச்சி பெற செய்ய வேண்டிய புதுமைகள் பற்றிப் பேசினார். ஒப்புரவு இதழை கார்காத்தார் இல்லங்கள் தோறும் கொண்டு சேர்த்தால் மட்டும் போதும். இன்றைய இளைய தலைமுறையினரும் படித்துப் பயன்பெறும் வகையில் செய்திகளைத் தரவேண்டும் என்று வலியுறுத்தினார். ஒப்புரவு இதழை நடத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டும் வகையில் சந்தா தொகையைச் சற்று உயர்த்தலாம் என்ற ஆலோசனையும் வழங்கினார்.

சிதம்பரம் மற்றும் புதுச்சேரி சாரதா குழுமத்தின் நிர்வாக இயக்குநர் திரு. M. சுவேதகுமார் அவர்கள் நிகழ்த்திய விழா பேருரை அனைவரையும் ஈர்த்தது. அவர் தம் உரையில்

"கார்காத்தார் சங்கக் கூட்டமைப்பு" என்பது சேவை மையமாகச் செயல்படுகிறது. தமிழ் வாசகர்களின் நெஞ்சில் இடம் பெற்ற ஆனந்த விகடனைப் போல் கார்குலச் சொந்தங்களின் வீட்டை ஒப்புரவு இதழ் அலங்கரிக்க வேண்டும். சொந்தங்களைக் கொண்டாடும்போது தான் உள்ளத்தில் எழுச்சி ஏற்படும். சிந்தனைப் பரிமாற்றமே வளர்ச்சிக்கு அடிப்படை. நம் இலட்சியம் உயரும் போது நம் வாழ்வும் மேன்மை அடைகிறது. அத்தகைய உணர்வுடன் நம் முன்னோர்கள் வேளாண்மைப் பணியைச் சிறப்பாகச் செய்தனர். அத்துடன் சமூகப் பணியையும் ஆன்மீகப் பணியையும் நெகிழ்ந்து ஈடுபாட்டுடன் நிகழ்த்தினர் என்று நம் சமூகம் உயரத் தேவையான அருங்குணங்களை எடுத்துரைத்தார்.

விழாவின் நிறைவாக ஒப்புரவு இதழின் இணையாசிரியர் திரு. G. தியாகராஜன் நன்றியுரை ஆற்றினார்.

திருமதி. அபிராமி செந்தில் அன்றைய விழா நிகழ்வுகள் அனைத்தையும் தொகுத்து வழங்கினார்.

விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் மதியம் அறுசுவை விருந்து அளிக்கப்பட்டது.

மகிழ்ச்சியுடன் ஒன்று கூடிய கார்குலச் சொந்தங்கள் அனைவரும் மீண்டும் என்று சந்திப்போமோ ? என்று எண்ணும் வகையில் விழா நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றது.

தொகுப்பு:

திரு. A. சீனிவாசன், ஓய்வு பெற்ற ஆசிரியர்.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு, புதுச்சேரி கிளை

கார்குல சொந்தங்கள் சந்திப்பு மற்றும் "கார்காத்தார் ஒப்புரவு" எழுச்சி விழா வெற்றி பெற நன்கொடை அளித்த நல் இதயங்களுக்கு நன்றி.

ஆகஸ்ட் மாத தொடர்ச்சி...

திரு. R. நாகராஜன், திரு. S. செந்தில், திரு. P. ரத்தினசபாபதி – V. மணவெளி, திரு. V. ராஜாராமன், திரு. G. செந்தில் ஆண்டவர், திரு. V. சண்முகசுந்தரம் – சிவகாமி நகர், திரு. S. செந்தில்நாதன் – ரெயின்போ நகர், திரு. S. சுந்தர், திரு. அறிவழகன், திருமதி. சாந்தி – சிவகுமார், திரு. V. ரத்தினசபாபதி – முதலியார்பேட்டை, திரு. வெங்கடாஜலபதி, திரு. V. சரவணன் – மோகன் நகர், திரு. S. ராமதாஸ் – தாகூர் நகர், திரு. M. சிவகுமார், திருமதி. உமா ராஜவேல் – சென்னை, திரு. N. வேல்முருகன், திரு. நடராஜன், திரு. கல்யாணசுந்தரம், திரு. சண்முக சுந்தரம், திரு. முத்துகுமரன் – வேல்ராம்பட், திரு. V. ரவிகுமார், திரு. V. கண்ணன் – நங்கநல்லூர், சென்னை, திரு. A. ரவிச்சந்திரன் – நங்கநல்லூர், சென்னை, திரு. G. தியாகராஜன் – நங்கநல்லூர், சென்னை, திரு. G. முத்துகுமாரசாமி – வரிச்சிகுடி, காரைக்கால்,

திரு. S. நெடுஞ்செழியன் – காரைக்கால், திரு. S. விஜயகுமார், திரு. கதிர்வேலு, திரு. V. குமரகுரு, திரு. V.T. சரவணன், திரு. K. பரமசிவம் – நெடுவாசல், திரு. சிவகுமார், திரு. முத்துகுமரசாமி.

J. ராஜன்பாபு

தலைவர் – புதுச்சேரி கார்காத்தார் சங்கம்.

மயிலாடுதுறை மகளிரணி.

திருவிளக்கு பூஜை 1–8–23 அன்று மாலை 3 மணி அளவில் துவங்கியது. அனுபவத்திலும், ஆன்மீகத்திலும் ஈடுபாட்டிலும் மிக்க மூத்த மகளிரால் நடத்தப்பட்டது.120 பேர் இதில் கலந்து கொண்டனர். மங்கள பொருட்களை சங்க உறுப்பினர் மற்றும் மகளிர் அணியினர் மனமுவந்து வழங்கினார்கள். சங்கத்தின் சார்பாக சர்க்கரை பொங்கல் மற்றும் சுண்டல் வழங்கப்பட்டது. திருமதிகள். வசந்தா தம்மையா, இந்துமதி, சசிகலா, சித்ரா, சுந்தரி, சகஸ்ரநாம அர்ச்சனை வாசித்தார்கள். மற்றும் திருவிளக்கினை கோமதி காயத்ரி, ராஜேஸ்வரி, உஷா, கீதா, தமிழ்ச்செல்வி, விஜயலஷ்மி, வளர்மதி, ஆகியோரால் ஏற்றப்பட்டது. தலைவி பில்டெக் அருள்மொழி குல தெய்வ போற்றியை கூறினார். ஐந்து கன்னி பெண்கள் கலந்து கொண்டு பூஜை செய்தனர். மற்றும் அகிலா, சுகன்யா, உஷா சேவை செய்து சிறப்பித்தார்கள் மற்றும் திரு. ராஜேந்திரன் சநபாநாயகம், சுவாமிநாதன், ரவிக்குமார், செல்வக்குமார் மற்றும் நகர சங்க மேனாள், இந்நாள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு பூஜை சிறப்பாக நடைபெற்றது.

15–8–23 அன்று நகர சங்க மற்றும் பெருமக்கள் இணைந்து தேசியக்கொடியினை துணைத்தலைவி ராஜேஸ்வரிசிவக்குமார்ஏற்றிடபணிநிறைவுபெற்றதிரு. சந்திரசேகரன், மற்றும் திரு. ராஜேந்திரன் வாழ்த்துரை வழங்கினர். துணைத்தலைவர் முருகானந்தம் செய்தி தொடர்பாளர் சுவாமிநாதன் மற்றும் முன்னாள் இந்நாள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர் மற்றும் திருமதிகள். கோமதி ரத்னக்குமார், அகிலா, தமிழ்செல்வி சிறப்புரையாற்றினர். கொடி வணக்க பாடலை திருமதிகள். சசிகலா, இந்துமதி, உஷா, வளர்மதி, விஜயலஷ்மி, கீதா ஆகியோர் இசைத்தனர். தலைவி பில்டெக் அருள்மொழி அவர்களால் சுதந்திர கவிதை வாசிக்கப்பட்டது. திரு. ஆனந்தன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். செயலர் காயத்ரி மோகன் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது. மற்றும் முன்னாள், இந்நாள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

S. காயத்ரி மோகன்,

செயலாளர்.

சீர்காழி

15–8–2023 அன்று சங்க செயற்குழு கூட்டம் நமது சங்க கட்டிடத்தில் தலைவர் க. திரு. கல். சுகுந்தவனநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக காலை 8.30 மணி அளவில் சங்க தலைவர் நமது தேசிய கொடியினை ஏற்றி வைத்து சிறப்புறையாற்றினார்கள். செயலர் குண. அமுதன் பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மாலையில் நமது சங்க உறுப்பினர்களின் 19 ஏழை மாணவர்களுக்கு, பெரியவர் தெய்வத்திரு. கிழாய் Er. R. முத்துகிருஷ்ணன் பிள்ளை அவர்களின் கல்வி உதவித்தொகையில் இருந்து ரூ. 66,000/– வழங்கப்பட்டது. கல்வி உதவித்தொகை பெற்றவர்களின் விபரம்

வ.எ	மாணவர் பெயர்	பெற்றோர்	ஊர்	வகுப்பு	பெற்ற தொகை
1	N. மனிஷா	நாகராஜன்	சீர்காழி	UKG	1,500
2	V. ரக்ஷிதா	வினோத்	கன்னியாகுடி	I Std	2000
3	P. மோளவன்	பரமநாதன்	சேந்தன்குடி	III	2000
4	B. சஞ்சனா	பாலாஜி	வைதீஸ்வரன் கோவில்	VI	3000
5	G. ஆனந்தஸ்ரீ கோகுல கிருஷ்ணன்	ஆனந்தன்	வைதீஸ்வரன்கோவில்	VII	3000
6	R. வர்ஷா	M.G. ராஜா	தென்பாதி	VII	3000
7	N. ஸ்ரீஹேமதர்ஷனி	நடராஜன்	திருப்பங்கூர்	VIII	3500

8	S. பிரித்திகா	சக்திவேல்	வரவுகுடி	VIII	3500
9	M. விமலேஷ்	முருகன்	வைதீஸ்வரன் கோவில்	VIII	3500
10	G. சர்வேஸ்வரன்	C. கணேஷ்	சீர்காழி	VIII	3500
11	S. ஸ்ரீவதி	J. சுந்தர்	வரவுகுடி	VIII	3500
12	A. கிருத்திகா	அசோகன்	திருப்பங்கூர்	IX	4000
13	M. ஸ்ரீமுகுந்தன்	மணிகண்டன்	வரவுகுடி	IX	4000
14	M. ரித்தீஷ்	மணிராஜா	திருப்பங்கூர்	X	4000
15	R. நடராஜன்	ராஜரெத்தினம்	வைதீஸ்வரன்கோவில்	X	4000
16	A. அபிராமி	ஆடல் அழகன்	சீர்காழி	X	4000
17	S. ஷர்மித்	சரவணன்	தில்லைவிடங்கன்	X	4000
18	S. பாலமுருகன்	சரவணன்	திருப்பங்கூர்	XI	5000
19	K. கலாராணி	குமார்	வைதீஸ்வரன்கோவில்	XII	5000
	ரூபாய்.				66,000

மேற்கண்ட மாணச்செல்வங்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் திரு. கிழாய் முத்து கிருஷ்ணன் பிள்ளை அவர்களின் குடும்பத்தார்க்கு நன்றியினை தெரிவித்து கொண்டனர்.

இறுதியில் அனைத்து மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சங்கத்தின் சார்பாக இனிப்பு, தேனீர் வழங்கப்பட்டது. இறுதியில் பொருளாளர் C. அகோரம் பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

G. அமுதன் பிள்ளை,

செயலாளர்.

செம்பொன்னார்கோவில்

சங்க கூட்டம் 06–08–2023 அன்று விவேகானந்தர் வீதியில் வசித்து வரும் சங்க உறுப்பினர் திரு. R. கனகசபை திருமதி. ஜெயந்தி கனகசபை தம்பதியினரின் புதிய இல்லத்தில் அவர்களது ஒரே மகள் கத்தாரில் வசிக்கும் திருமதி. பணிபாவை – மருமகன். திரு. சஞ்ஜிவ் பாலாஜி நல்லியனரின் ஏற்பாட்டின்படி கூட்டம் நடைபெற்றது. செல்வி. சஞ்சனாபாலா, செல்வி. அனன்யா அருள் பிரகாசம், செல்வன். ஆதித்யா சௌந்தரராஜன் ஆகியோர் இணைந்து இறைவணக்கம் பாடிடவும், திரு. சஞ்ஜிவ் பாலாஜி வரவேற்புரை ஆற்றிடவும், சென்ற மாத கூட்ட அறிக்கை மு. மண்டலசெயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், வரவு – செலவு அறிக்கையை பொருளாளர் திரு.M.C.செல்வராஜ்வாசிக்கவும்கூட்டம் அதனை ஏற்றது. மு.ம.செ. திரு. கோ. வடிவேலு பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்ட தலைவர் தமது உரையில் தருமையாதீனம் கலைக்கல்லூரி முன்னாள் முதல்வர் திரு. திருநாவுக்கரசு – திருமதி. நளினி தம்பதியினரின் மகள் Dr. ஜெயஸ்ரீ (குழந்தைகள், மகளிர் மற்றும் பொதுநலம்) அவர்கள் M.B.B.S. மருத்துவ படிப்பு முடித்து செம்பனார் கோவிலில் சிவா வணிக வளாகத்தில் புதியதாக விஜி கிளினிக் துவங்கி மருத்துவசேவையைதுவங்கியுள்ளதற்கு அவர்களுக்கு ஆதரவு அளித்திட வேண்டியும், கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய Dr. ஜெயஸ்ரீ அவர்களுக்கும் AVC பொறியியல் கல்லூரி உதவி பேராசிரியர் திருமதி. தாமரைசெல்வி ஜவஹர் அவர்கள் ஆற்றிய விரிவான விளக்க உரைகளுக்கும் வாழ்த்தும் நன்றியும் தெரிவித்து கொண்டார்கள். மேலும் மாநில முன்னாள் து. தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்களும் சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன், பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் சங்க மூத்த உறுப்பினர் திரு. ச. சீத்தாராமன் பிள்ளை அவர்களும் கூட்டம் நடத்திய இல்லத்தார் பற்றி தெளிவாகவும் பெருமையுடன் பேசினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு பொன்னாடை அணிவிக்கப்பட்டது. சங்க மூத்த உறுப்பினர் திரு. சீத்தாராமன் பிள்ளை துணைவியர் திருமதி. பிரணாம்பிகை அவர்கள் உடல் நலம் பெற கூட்டு பிரார்த்தனை செய்யப்பட்டது. திரு. ச. சீத்தாராமன் பிள்ளை அக்கா மகன் மாற்றுதிறனாளி வாய் பேச முடியாத R. பழனிவேல் அவர்கள் 14–7–23 அன்று இயற்கை எய்தமைக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட ஆண்களுக்கான பரிசு திரு. ச. வரதராஜன் பிள்ளை – பெண்களுக்கான பரிசு திருமதி. லலிதா வடிவேலுக்கும் வழங்கப்பட்டது. கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக மாலை வெஜிடபிள் சூப்பும், இரவு சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. திரு. க. ராஜா அவர்கள் நன்றி கூறிட இரவு 9.00 மணியளவில் கூட்டம் நிறைவு பெற்றது.

S. நெஞ்செழியன், செயலாளர்.

பரசலூர் :

06–8–2023 அன்று கூட்டம் ராமு நகர், சாமிநாதன் – ரேணுகா தேவி இல்லத்தில் தலைவர் க. கோவிந்தராசன் பிள்ளை தலைமையில், திருமதி. ரேணுகா தேவி சுவாமிநாதன் இறைவணக்கம் பாட, திருஆ. சுவாமிநாதன் வரவேற்புரை நிகழ்த்த கூட்டம் துவங்கியது.

சென்ற மாத கூட்ட அறிக்கையையும், நிதிய அறிக்கையையும் செயலர் வீ. கண்ணனும், மு.அ. நிதிய அறிக்கையை தலைவர் திரு. க. கோவிந்தராசனும் வாசிக்க, நிதிய சம்மந்தமான பதிவேடுகள் அனைத்தும் உறுப்பினர்களின் சுற்றுக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. சங்க வளர்ச்சிக்கான கருத்துகளை உறுப்பினர்கள் கூறினார்கள்.

ஆசிரியர் திருமதி. ஜெயசுதா அமிர்தகணேசன் அவர்கள் தமது சிறப்புரையில் தலைமுடிக்கு ஹேர்டை அடிப்பதால் சிறுநீரக கோளாறுகள், புற்றுநோய்கள் வரும் என்று கூறினார்கள்.

நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் சதாபிஷேகம் கண்ட திரு. இராமகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் இயற்கை எய்திய நாளன்று (14–8–2023) பெரும்பான்மையான ஆண்கள், பெண்கள் மற்றும் சங்க பொறுப்பாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டு இறுதி சடங்குகளை செய்தனர்.

விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது. குலுக்கலுக்கான ஆண்களுக்கான பரிசை திரு. சண்முகம், பெண்களுக்கான பரிசை தேன்மொழி சண்முகமும் பெற்றனர்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் திரு. M. சுவாமிநாதனுக்கும், திருமதி. ரேணுகாதேவி சுவாமிநாதனுக்கும் முறையே G. சேகர் பிள்ளை, அகிலோண்டேஸ்வரி சரவணன் சால்வை அணிவித்தனர். தொழிலாசிரியர் S. செந்தில்குமார் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

V. கண்ணன், செயலர்

Cell : 9894960438

ஆக்கூர் :

சங்க கூட்டம் 6–8–2023 அன்று ஆக்கூர் சிவன் கோவிலில் திரு. Dr. K. பாலக்கிருஷ்ணன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் திரு. R. சுவேதாரண்யம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. S. சுரேஷ்மணி பிள்ளை அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள்.

நல்லாசிரியர் திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்கள் வரவேற்புரை ஆற்றி கூட்ட நிகழ்வுகளை தொடங்கிவைத்தார்கள். செயலர் திரு. R. கோவிந்தராசு பிள்ளை அவர்கள் சென்றக்கூட்ட அறிக்கையை வாசித்தார்கள். பொருளர். திரு. M. சுந்தரேசன் பிள்ளை அவர்கள் நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பிக்க சங்கம் அதனை ஏகமனதாக ஏற்றது. சங்கத்தலைவர் திரு. G. செல்வக்குமார் பிள்ளை அவர்கள், விசலூரில் நடைபெற்ற ஒன்றியக் கூட்டத்தில் கலந்து கொண்டமை மற்றும் கூட்ட நிகழ்வுகளை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். கூட்டத்தில் மகளிர் அணியின் பங்களிப்பு சிறப்பாக இருந்தது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

கௌரவத்தலைவர் திரு. Dr. K. பாலக்கிருஷ்ணன் பிள்ளை அவர்கள் பேசும் போது, சுவாமிமலையிலிருந்து திருவிடைக்கழி முருகன் கோவிலுக்கு ஆடிக்கிருத்திகை விழாவில் பங்கேற்க பாதயாத்திரையாக வரும் யாத்திரிகர்களுக்கு ஆக்கூரில் தமது ஏற்பாட்டில் செய்யப்பட்டுள்ள விருந்தோம்பல் நிகழ்வில் கார்குல சங்க உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு

யாத்திரிகர்களுக்கு சேவை செய்யும் பாக்கியம் பெறும்படி கேட்டுக்கொண்டார்கள்.

மூத்த உறுப்பினர், திரு. சு. சுவேதாரண்யம் பிள்ளை அவர்கள், சுமார் 40 ஆண்டுகளுக்கு முன், செம்பனார் கோவில் ஒன்றிய சங்கம் தோற்றம் பற்றியும், அக்காலக்கட்டத்தில் திரு. R. கல்யாணசுந்தரம் பிள்ளை மற்றும் N. ராசுப்பிள்ளையுடன் இணைந்து கிராமம் தோறும் சென்று கார்குல மக்களுடன் பேசி கிராமச் சங்கங்களை தோற்றுவித்தமை குறித்து நினைவு கூர்ந்தார்கள்.

தொடர்ந்து, திரு. G. பிரகதீஸ்வரன் பிள்ளை அவர்களின் நன்றியுரைக்குப்பின் அடுத்தக் கூட்ட அறிவிப்புடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

G. செல்வக்குமார்,
தலைவர்.
9942480320

இராதா நல்லூர்

சங்க கூட்டம் 13–8–2023 அன்று செயலாளர் RMA. செல்வம் (எ) இராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முன்னிலை : சங்க கௌரவ ஆலோசகர் திரு. K. இராமசுப்ரமணியன் அவர்கள்

சிறப்பு விருந்தினர் : சேலையூர் சங்க இணை செயலர் Er. S. அகோரம் அவர்கள்

இறைவணக்கம் : மகளிர் அணி பொருளாளர் திருமதி. கலா இராஜாமுத்தையா அவர்கள்

30–7–2023 ஞாயிறு அன்று திருச்சியில் நடைபெற்ற திருச்சி கார்காத்தார் சங்க பொன்விழா அழைப்பை ஏற்று சங்க தலைவர் மற்றும் சங்க செயலாளர் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கும், 12–8–2023 சனிக்கிழமை அன்று காலை 10.31க்கு மணிக்கிராமம் கார்காத்தார் சங்க 20–வது ஆண்டு நிறைவு விழா அழைப்பிதழை ஏற்று சங்க தலைவர் மற்றும் செயலாளர் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. மேற்படி விழாக்களில் பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து விழாவினை சிறப்பாக நடத்தினார்கள் என்ற விபரம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டு நமது சங்கமும் சிறப்பாக செயல்பட சங்க உறுப்பினர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. தை மாதம் மூல நட்சத்திரம் 6–2–2024 செவ்வாய்கிழமை அன்று இராதாநல்லூர் ஸ்ரீமாரியம்மன் கோயில் ஜென்ம நட்சத்திர விழாவினை சிறப்பாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. சங்க செயற்குழு உறுப்பினர் RMA. பாபு (எ) சண்முகநாதன் அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

T. முத்துக்குமரசாமி.
செல் : 9443645646

மேலையூர் (பூம்புகார்)

சங்கக் கூட்டம் 06–08–23 அன்று செயலரின் இல்லத்தில் துணைத்தலைவர் M.S. இராஜேந்திரன் தலைமையில், பொருளர் முன்னிலையில் மூத்த உறுப்பினர் ஞானப்பிரகாசம் இறைவணக்கம் பாடிடவும், மாஸ்டர். நரேன் தமிழ்த்தாய் வாழ்த்து பாடவும் துவங்கியது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

சங்கத்தின் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்றும்

CREW அறக்கட்டளைக்கும், தஞ்சை காமதேனு அறக்கட்டளைக்கும், கல்வி உதவித்தொகை பெற, விண்ணப்பங்களை உறுப்பினர்கள் விரைந்து கொடுக்குமாறும்

தஞ்சை காமதேனு அறக்கட்டளைக்கு உறுப்பினர் பாரி மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பொருளரிடம் அளித்து தஞ்சைக்கு அனுப்பிடவும்

இன்றைய கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களுக்கு கீழத்தெரு N. பாண்டியன் அவர்கள் தேனீர் விருந்து அளித்தார். அவருக்கு உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் B. சிவநேசன் நன்றியுரைக்குப் பின் கூட்டம் நிறைவு பெற்றது.

M. பரணீதரன்,
செயலர்.

நெடுங்காடு :

சங்க கூட்டம் 6–08–2023 அன்று வரிச்சிக்குடி மெயின்ரோடு தலைவர். திரு. C. பன்னீர்செல்வம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்தில்

36 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். திரு. P. பாலசுப்ரமணியன் இறைவணக்கம் பாடினார்.

CREW அறக்கட்டளைக்கு மொத்தம் 23 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றை ஓரிரு நாட்களில் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

திருச்சி கார்காத்தார் சங்க பொன்விழா மிகச் சிறப்பாக நடத்திய திருச்சி கார்காத்தார் சங்கத்திற்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

நமது சங்க உறுப்பினர் சேத்தூர் திருமதி. பரமேஸ்வரி திருமுருகன் அவர்கள் வீட்டளவில் சிறிய உணவகம் அமைக்க சங்கத்திடம் உதவி கேட்டிருந்தார். சங்கத்தின் சார்பில் தேவையான உதவிகள் செய்யப்பட்டன. குடும்பத்தலைவரை எதிர்பாராத வகையில் இழந்த நிலையில் சங்கத்தின் உதவியால் தங்களது வாழ்வாதாரம் உயர்ந்ததாக கூறி நன்றி தெரிவித்தார்.

13–08–2023 அன்று நடைபெற உள்ள புதுச்சேரி கார்காத்தார் சங்க ஒப்புரவு எழுச்சி விழாவில் காரைக்கால் சங்கத்தின் சார்பில் 20 பேர் வேன் அமைத்து கலந்து கொள்ள முடிவு செய்யப்பட்டது.

பரிசுக் குலுக்கலில் மு. அக்ஷயா, C. நமச்சிவாயம் பிரபாகர் ஆகியோர் பரிசு பெற்றனர்.

G. செல்வகுமார், செயலர்.

9842633663

திருவாரூர் :

சங்கத்தின் 2023 ஆண்டிற்கான பொதுக்குழு கூட்டம் 11–8–2023 அன்று திருவாரூர் தெற்கு வீதியில் உள்ள தருமையாதீன ராஜன் கட்டளை அரங்கில் நடைபெற்றது.

முதலாவதாக இறைவணக்கம் திரு. C. ரவி அவர்கள் பாடினார்கள். கூட்டத்தை தலைவர் திரு. மருதவாணன் பிள்ளை தலைமை ஏற்றும் திரு. ரத்தினசாமி பிள்ளை பொருளாளர் அவர்கள் முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். தலைவர் உரையில் நமது சங்கம் ஆரம்பித்து 15 ஆண்டு காலம் மிகவும் சிறப்புடனும் திறமையுடனும் நடைபெற்று வர உறுதுணையாக இருந்த தெய்வதிருவாளர்கள் வைத்தியநாதன் பிள்ளை, குழந்தைவேலு பிள்ளை, தில்லைநாயகம் பிள்ளை ஆகியோரின் சேவையை மிகவும் பாராட்டினார்கள். பொதுக்குழுவில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொண்டார்கள். அடுத்து 2022 ஆண்டு அறிக்கை, நிதி நிலை அறிக்கை ஆகியவற்றை செயலர், பொருளாளர் ஆகியோர் வாசித்து கூட்டத்தில் ஒப்புதல் பெற்றார்கள். ஆண்டு அறிக்கையில் சங்க சாதனைகளாக 7 ஆண்டு விழாக்கள் மாநில பொறுப்பாளர்களை அழைத்து நடத்தியதும், 2020, 2021, 2023 ஆண்டுகளில் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடியது, 9 ஆன்மீக சுற்றுலாக்கள் சிவன் இராத்திரிகளில் சென்று வந்தது, 15 திருமணங்களுக்கு திருமண வாழ்த்து கொடுத்து கலந்து கொண்டது போன்றவற்றை குறிப்பிட்டு கூறியிருந்தார்கள்.

திரு. கண்ணபிரான் பிள்ளை சென்ற கூட்ட அறிக்கை வாசித்தார்கள். மற்றும் வரும் மாதாந்திர கூட்டங்களில் திரளாக குடும்பத்துடன் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள். திரு. சோமசுந்தரம் செயலர் ஆன்மீக உரையாக வாயிலார் நாயன்மார் சரித்திரத்தை மிகவும் உருக்கமாக விரிவுரை ஆற்றினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேநீர், சிற்றுண்டி திரு. கண்ணபிரான் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது. பாங்கல் ஜெயராமன் பிள்ளை அனைவருக்கும் நன்றி கூறி கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

- A. சோமசுந்தரம்,

செயலாளர்.

திருவாரூர் மகளிரணி

திருவாரூர் கார்குல மகளிரணி சார்பாக 4–ஆவது திருவிளக்கு பூஜை ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் தருமை ஆதீனம் அவர்களின் அருளாசியோடு 11–8–2023 ஆடி கடைசி வெள்ளியன்று மாலை 6.30 மணிக்கு திருவாரூர் ராஜாங்க கட்டளையில் உள்ள குரு கயிலை ஞான சம்மந்தப் பெருமான் கோவிலில் மிகவும் சிறப்புடன் நடைபெற்றது. மகளிரணியினர் சுமார் 20 உறுப்பினர்கள் திருவிளக்கு பூஜை தமிழில் சிறப்பாக வழிபாடு செய்து வழிபட்டார்கள். அனைவரும் அவர்கள் விளக்குகளுக்கு பூ அலங்காரம் செய்து நைவேத்தியம் படைத்து தீப தூப வழிபாடுகள் செய்து மிகவும் நேர்த்தியாக வழிபட்டார்கள்.

அதன் பிறகு கோவிலின் அர்ச்சகர் கோவிலில் உள்ள விநாயகப் பெருமான், முருகப் பெருமான், குரு ஞானப்பிரகாசர் ஆகியோர்க்கு நைவேத்தியம் படைக்கப்பட்டு தீப, தூப ஆராதனைகள் சிறப்புடன் செய்தார்கள்.

திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்ட அனைவருக்கும் தனியாக பிரசாதங்கள் பை, சில்வர் டப்பாவுடன் தலைவர் மருதவாணம் பிள்ளை குடும்பத்தினரால் வழங்கப்பட்டது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு விருந்து அளித்து சிறப்பிக்கப்பட்டது.

திருவிளக்கு பூஜைக்கு இரவு உணவு அளித்த திருமதி. கலையரசி கண்ணபிரான் குடும்பத்தினர், திருமதி. மணிமேகலை குடும்பத்தினர், திருமதி. லலிதா குடும்பத்தினர் மற்றும் நிதி உதவி அளித்த பாங்கல் ஜெயராமன் குடும்பத்தினர், பனங்காடி பொருளாளர் திரு. ரெத்தினசாமி பிள்ளை குடும்பத்தினர் விளக்கு பூஜைக்கு ஏற்பாடுகள் செய்த சங்க நிர்வாகிகள் ஆகியோர்களுக்கும் மற்றும் கலந்துகொண்ட அனைவருக்கும் திருமதி. பாலாம்பிகை அவர்கள் நன்றியை மனதார தெரிவித்துக்கொண்டு நிகழ்ச்சியை நிறைவு செய்தார்கள்.

- M. மீரா, தலைவி,
திருவாரூர்.

குத்தாலம் :

06–08–2023 அன்று குத்தாலம் M.R.S. இல்லம். அருணகிரிநாதர் தெருவில் உள்ள M. இராமச்சந்திரன் நினைவரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தை தலைவர் R. சுவாமிநாதன் ஒருங்கிணைப்பிலும், திரு. R. முத்துக்குமரசாமி பிள்ளை தலைமையிலும், G. கணபதி பிள்ளை முன்னிலையிலும் நடைபெற்றது. துணைத்தலைவர் J. வேதநாயகம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து பேராசிரியர்கள் G. மணிகண்டன், G. கார்த்திக்குமார், அஞ்சல் துறை ஓய்வு, S. கிருஷ்ணமூர்த்தி, தீயணைப்பு துறை ஓய்வு R. துரை, சங்கத்தின் பொருளாளர் M.R. பலராமன் உள்ளிட்டோர் தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்தனர். இக்கூட்டத்தில் மயிலாடுதுறை கார்காத்த சங்க தலைவர் திரு. அன்பழகன் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார். மேலும் 10 மற்றும் 12–ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு J. வேதநாயகம் – ஜோதிமணி அவர்கள் நினைவு பரிசையும், மு. மணிகண்டன் அவர்கள் புத்தகமும் கொடுத்து மாணவ, மாணவிகளை பாராட்டினார்கள். இறுதியாக நல்லாசிரியர் – நகைச்சுவை செம்மல் மயிலாடுதுறை பணி நிறைவு உதவி தலைமை ஆசிரியர் திரு. இரா. செல்வகுமார் அவர்கள் மாணவ மாணவிகளை கௌரவித்து ஒரு மணி நேரத்திற்கு மேல் உரை நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மகளிரணி பொறுப்பாளர்கள் மற்றும் குத்தாலம் கார்குல சொந்தங்கள் அனைவரும் குடும்பத்தோடு கலந்து கொண்டனர். இறுதியாக மகளிரணி தலைவி T. பர்வதம் நன்றி தெரிவித்து, கூட்டம் சிற்றுண்டியுடன் இனிதே நிறைவுற்றது.

இளந்தோப்பு :

01–08–2023 அன்று சங்க கூட்டம் சிவன்கோவில் வளாகத்தில் தலைவர் S.S. ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் 30–07–2023 அன்று திருச்சி கார்காத்தார் பொன்விழாவிற்கு சுமார் 22 நபர்கள் வேன் மூலம் சென்று வந்தமைக்கு எல்லோருக்கும் நன்றி தெரிவித்து தலைவர் உரையாற்றினார்கள்.

திரு. S. சபாநாயகம் அவர்கள் தமது உரையில் பொன்விழாவின் சிறப்புகள் பற்றி தெரிவித்து விழா பொறுப்பாளர்களுக்கு நன்றி பாராட்டினார்கள்.

திரு. G. செல்வநாயகம் அவர்கள் சங்க கூட்டத்திற்கு உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொண்டு ஊரின் சார்பாக ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டுகோள் விடுத்தார்கள்.

பொருளாளர் R. ஞானசேகரன் சங்க வரவு செலவு அறிக்கை மற்றும் மாதாந்திர சந்தாவசூல் விரிவாக சமர்ப்பித்து, அய்யனார் கோவில் திருப்பணி வசூல் மற்றும் வேலைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

மண்டல தலைவர் R. சீனுவாசன் அவர்கள் பொன் விழாவிற்கு வேன் ஏற்பாடு செய்த V. ராமமூர்த்தி, உறுப்பினர்கள் சென்றுவந்த திருச்சி கார்காத்தார் சங்கத்தை வெகுவாக பாராட்டினார்கள்.

திரு. V. குருநாதன், துணைத்தலைவர் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

V. ராஜசேகரன், செயலாளர்.
9444610907

கும்பகோணம் :

06–08–2023 அன்று 33, நெல்லுக்கடைத் தெரு, திரு. N. ராஜா அவர்கள் இல்லத்தில் தலைவர் தி.மா. வைத்யநாதன் அவர்கள் தலைமையில் TSK. வெங்கடராமன் அவர்கள் முன்னிலையில் கூட்டம் நடைப்பெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் திரு. MRK. பாண்டியன் அவர்கள் வரவேற்றார்கள். கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மருத்துவர் திரு. V. ரகுநாதன் (சுற்று சூழல் பாதுகாப்பு நிபுணர் பாரம்பரிய நெல் ஆய்வு) அவர்கள் பாரம்பரிய அரிசியின் மருத்துவ குணங்கள் பற்றி சிறப்புரை ஆற்றினார்கள். கூட்டத்தை ஏற்ப்பாடு செய்த விழா குழுவினர் மற்றும் விழாவில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் செயலாளர் S. விஜயகுமார் அவர்கள் நன்றி கூறினார். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

30–07–2023 பொன்விழா கண்ட திருச்சி கார்குல சங்கத்தையும் திருச்சி தலைவர் உள்ளடக்கிய விழா குழுவினர் மற்றும் மகளிர் அணி அனைவரையும் நமது சங்கத்தின் சார்பில் பாராட்டு தெரிவித்துக் கொள்வது எனவும்

திருச்சி பொன்விழா கூட்டத்திற்கு நமது சங்க வேண்டுகோளுக்கு இணங்க ஆண் பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததற்கு நன்றி தெரிவித்தும்

இது வரை பொருளாளராக பணியாற்றிய திரு. வி. சிவகுமார் அவர்கள் சொந்த காரணங்களுக்காக சங்க பொருளாளர் பதவியை கடிதம் மூலமாக ராஜினாமா செய்ததை ஏற்றுக்கொள்வது எனவும்

தற்போது நம்முடைய சங்கத்தின் பொருளாளராக திரு. ஏ.எஸ். பழனி அவர்களை ஒருமனதாக பொருளாளராக நியமனம் செய்ததையும் இனி சங்கத்தினுடைய வரவு செலவு கணக்குகளை அவர்கள் கையாள வேண்டும். வங்கி கணக்குகள் மற்றும் காசோலை போன்றவற்றை செயலாளர் எஸ். விஜயகுமார் உடன் இணைந்து கையெழுத்திட்டு வரவு செலவு செய்ய வேண்டும் என்றும்

சங்க மூத்த உறுப்பினர் திரு. ஜி. ராஜாராமன் அவர்களை துணைத்தலைவராக ஏக மனதுடன் நியமனம் செய்வது எனவும் நாணயக்கார தெரு திரு. எஸ். ராஜேந்திரன் அவர்களை துணைச்செயலாளராக நியமனம் செய்வது எனவும்

பாரம்பரிய அரிசியின் மருத்துவ குணங்கள் பற்றிய விழிப்புணர்வு மாநில கூட்டத்தை ஏற்பாடு செய்த TSK வெங்கட்ராமன் அவர்களை பாராட்டி நன்றி தெரிவிப்பது எனவும்

பாரம்பரிய பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள சம்பிரதாய சடங்குகள் பற்றிய தொகுப்பை ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் தருமை ஆதீனம் வெளியிட்டார்கள். அந்த தொகுப்பினை திருச்சி பொன்விழா கூட்டத்தில் கார்குலத்தின் பாரம்பரிய பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள சம்பிரதாய சடங்குகள் பற்றிய சிறப்பான முறையில் பென்டிரைவ் வாயிலாக வெளிப்படுத்திய திருமதி. வனஜா இளங்கோவன், திருமதி. மைதிலி வைத்தியநாதன், திருமதி. குந்தவை, திருமதி. லலிதா, திருமதி. கல்யாணி, திருமதி. சுப்புலட்சுமி ஆகியோரை பாராட்டுவது எனவும்

கார்குல பாரி வள்ளல் திரு. எஸ். வெங்கடேசன் பிள்ளை அவர்களின் பெரு நிதி உதவியுடன் 21–8–2023 அன்று நடைபெறும் பூவிழுந்த நல்லூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு விசாலாட்சி அம்பிகை உடனாகிய அருள்மிகு விஸ்வநாதர் ஆலயம் கும்பாபிஷேகத்தில் அனைவரும் கலந்து கொள்வது எனவும்

பாரம்பரிய அரிசியிலேயே அறுசுவை உணவை அளித்த திரு. எம்.ஆர்.கே. பாண்டியன் குடும்பத்தினரையும் கூட்டத்திற்கு இடம் அளித்த திரு. என். ராஜா அவர்களுக்கும் நன்றி தெரிவித்து வாழ்த்தி பாராட்டுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

S. விஜயகுமார் பிள்ளை,

செயலாளர்.

குடவாசல்

சங்க பொதுக்குழு கூட்டம் 23–07–2023 அன்று ஓகை சண்முகம் பிள்ளை திருமண மண்டபத்தில் சங்க தலைவர் திரு. S. முத்து பிள்ளை தலைமையில், முன்னாள் தலைவர் திரு. S. வெங்கடாஜலம் பிள்ளை முன்னிலையிலும் நடைப்பெற்றது. துணைத்தலைவர் திரு. S. தியாகராஜன் பிள்ளை அவர்கள் அனைவரையும் வரவேற்று சிறப்புரை ஆற்றினார்கள். செயலாளர் திரு. G. ராம்குமார் அவர்கள் செயல் அறிக்கையை வாசித்தார்கள். இந்த கல்வி ஆண்டிற்கு கல்வி உதவிதொகை வேண்டியவர்கள் அதற்குரிய விவரத்தினை கூறி விண்ணப்பத்தினை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. 30–07–2023 அன்று திருச்சியில் நடைப்பெறும் சங்க பொன் விழாவில்

சங்கத்தின் சார்பில் கலந்துகொள்வது குறித்து முடிவு செய்து குடவாசல் சங்கத்தின் சார்பில் 6 நபர்கள் திருச்சி சென்று கலந்துக்கொண்டோம். 2023–ம் ஆண்டு தினசரி காலண்டர் அனைவருக்கும் வழங்கிட வருகை தந்த சங்க உறுப்பினர் துறையூர் S. மோகன், குடவாசல் G. சுரேஷ் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சங்க தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக செயல்பட முன்னாள் தலைவர் திரு. S. வெங்கடாஜலம் பிள்ளை அவர்களை கௌரவ தலைவராக செயல்பட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி அவர்கள் ஏற்றுக்கொண்டதால் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. நமது பகுதியில் பள்ளி கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிட நமது உறுப்பினர்கள் விரும்பினால் அதனை பெற்று வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. சங்க உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்திற்கு வருகை தந்து தங்கள் கருத்தினை கூறி சங்கம் சிறப்பாக செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது. இறுதியாக திரு. R. கார்த்திகேயன் நன்றி கூற மறைந்த சங்க உறுப்பினர் குடவாசல் G.P. மகாலிங்கம் பிள்ளை மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

- G. ராம்குமார்,
செயலாளர்.

விக்கிரமங்கலம் மகளிரணி.

14–8–23 அன்று இறைவணக்கத்துடன் திருமதி. இளஞ்சியம் ஆச்சி தலைமையில் பரிமளா பாலசுப்ரமணியன் இல்லத்தில் நடைபெற்றது.

பரிசு குலக்கல் மூலம் பரிசு பெற்றோர் : முதல் பரிசு சா. ஜெயந்தி, இரண்டாம் பரிசு ரெ. சுதா, மூன்றாம் பரிசு கோ. சந்திரா மூன்று பேருக்கும் புத்தகம் வழங்கப்பட்டது.

வரவேற்புரை : ரா. பானுமதி – ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. 25 உறுப்பினர்கள் வருகை தந்தனர்.

பெரம்பலூர் பிரம்மகுமாரிகள் சபை சகோதரி அனுசூயா அரியலூர் பிரம்மகுமாரிகள் சபை இருவரும் வருகை தந்து உறவுகள் குடும்பம் அமைதியுடன் இருக்க விட்டு கொடுத்து வாழ்வது எப்படி என விவரித்து அதன் அடிப்படையில் தியான பயிற்சி அளித்தனர். துண்டு பிரசுரம் வழங்கினார்கள். திருமதி. வி. கலா அவர்களின் மருமகள் ச. ரம்யா மறைவிற்கும் திரு. தங்கராசு அவர்கள் மறைவுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

10 சதவீத இடஒதுக்கீடு பற்றி இந்திய சலுகைகள் பெற மாநில அளவில் பெறப்படும் சலுகைகள் பற்றி விரிவான கட்டுரை தேவை ஒப்புரவில்.

நன்றியுரை : திருமதி. மு. கல்யாணி வாண் முகில் வாழாது பெய்க வாழ்த்து பாடலுடன் 6 மணிக்கு கூட்டம் இனிதே முடிந்தது.

செயலாளர்

திருச்சி சங்க பொன்விழா செய்தி.

திருச்சி கார்காத்தார் சங்கத்தின் பொன்விழா நிகழ்வுகள் கடந்த ஜூலை மாதம் 30–ஆம் தேதி திருச்சியில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இது ஒரு சங்கத்தின் பொன் விழாவா அல்லது மாநில மாநாடா என்று திகைக்கும் அளவிற்கு ஏறத்தாழ 1800 பேர் கலந்து கொண்ட மகத்தான விழாவாக இந்த விழா நடத்தப்பட்டது.

மாநில தலைவர் திரு. கே.கே.ஆர். சுரேஷ் அவர்கள் சங்க கொடி ஏற்றி வைக்க தமிழ்நாடு முழுவதிலிருந்து திரண்டு வந்திருந்த மகளிர் ஒரு சிறப்பான அணிவகுப்பை நடத்தி அரங்குக்குள் நுழைந்தனர் அரங்குக்குள் வருகை தரும் அத்தனை பேருக்கும் துண்டு அணிவித்து திருச்சி சங்கத்தின் உறுப்பினர்கள் வரவேற்றனர்.

மகளிர் அணியினர் குத்து விளக்கு ஏற்றி வைக்க இறைவணக்கத்துடன் தொடங்கியது. விழா நிகழ்ச்சியில் செயலாளர் திரு. சொ. சுப்ரமணியன் வரவேற்புரை ஆற்றினார். தனது தலைமை உரையில் திருச்சி சங்கத் தலைவரும் மாநில சங்க பொதுச் செயலாளர் திரு. மு. பாலசுப்ரமணியன் திருச்சி சங்கத்தின் வளர்ச்சிக்கு காரணமாக இருந்த அத்தனை பேரையும் குறிப்பிட்டு அதே நேரம் சங்கத்தின் வளர்ச்சி பற்றியும் மாநில அளவில் நாம் எதிர்கொண்டு வரும் 10% இட ஒதுக்கீடு போன்ற பிரச்சனைகளையும் பற்றி உரை நிகழ்த்தினார்.

பின்னர் மாநாட்டு மலரை சென்னை ராதா இன்ஜினியரிங்க மேலாண்மை இயக்குனர் திரு. செந்தில்குமார் அவர்கள் வெளியிட மனித நேயம் திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். திரு. செந்தில் அவர்கள் தனது உரையில் திருச்சி சங்கத்தை வாழ்த்தி இது சிறப்பான மாநாடு என்று பாராட்டி மகிழ்வித்தார். மாநாட்டுக்கு பொருள் உதவி அளித்த கார்குல கர்ணன் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. பின்னர் மனித

நேயம் திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் திருச்சி சங்கத்தின் பல்வேறு சாதனைகளையும் பாராட்டி இந்த ஒற்றுமை உணர்வுடன் சங்கத்தை எடுத்து செல்ல வாழ்த்தினார். ஐந்து (பெற்றோரில் ஒருவரை இழந்த) சிறார்களுக்கு தலா Rs. 5000/– வழங்கினார்.

அடுத்து மங்கல சந்திப்புக்கான புத்தகம் அமைப்பாளர் திரு. நவிலு பாலசுப்ரமணியம் அவர்களால் வெளியிடப்பட்டது. அதனை திருமதி. கௌரி ஜெகதீசன் பெற்று கொண்டார். திருச்சி சங்கத்தை வாழ்த்தி மேனாள் பொருளாளர் திரு. தி.மா. வைத்தியநாதன், மாநில பொருளாளர் திரு. ராமநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மாநில சங்கத்தின் பணியினையும், திருச்சி சங்கத்தின் கூட்டு முயற்சியையும், உழைப்பையும் பாராட்டி மிக சிறந்த விழாவாக இந்த விழா நிகழ்வதாக

வழக்கறிஞர் திரு. A.S. வேல்முருகன் அவர்களும், என்றைக்கும் திருச்சி சங்கம் சிறப்பு நிகழ்ச்சி என்றாலே உடன் வருவேன் என்றும் அத்துணை பேரும் என் அருமை சகோதரர்கள் என்றும் பாராட்டி முன்னாள் அரிமா கூட்டு மாவட்ட தலைவர் P M J F Lion. V. ரத்தினசபாபதி அவர்களும் உரை ஆற்றினார்கள்.

சென்னை சங்க செயலாளரும், மாநில அமைப்பு செயலாளருமான கைலை. சண்முகம் திருச்சி சங்கத்தின் நேர்த்தியும், நேரம் தவறாமையும் மிக்க பாராட்டுக்குரியது என்றும், இது சென்னையில் நூற்றாண்டு விழா கொண்டாடிய எங்களையே பொறாமை கொள்ள வைத்துவிட்டது என்று பாராட்டினார்.

மாநில தலைவர் திரு. சுரேஷ் பேசும் போது திருச்சி சங்கம் முன்பு திரு. ஜெகதீசன் பிள்ளையை தந்தது, இன்று எங்களுக்கு ஒரு பொது செயலாளரை தந்து உள்ளது என்றும், மாநில சங்கம் வரும் கால கட்டத்தில் பெரிய சேவைகளை செய்ய காத்து இருக்கிறது என்றும் நம் ஒற்றுமை நம் பலம் என்றும் உரை நிகழ்த்தினார்.

நமது, குரு. தருமை ஆதீனம் குரு மகா சன்னிதானம் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நம்மை ஆசீர்வதிக்க வருகை புரிந்தார்கள். பூரண கும்ப மரியாதையுடன் அவர்களை வரவேற்று சபைக்கு அழைத்து வந்தோம். தனது அருளுரையில் கார் குல மேன்மை பற்றியும், வேளாளர் என்றாலே அது கார்குலம் மட்டுமே என்றும், காட்டில் ஒரு சிங்கம் மட்டுமே இருக்கும் அதுபோல கார் குலம் நாட்டுக்கே தலைமை வகிக்கும் என்று ஆசியுரை வழங்கினார்கள். திருச்சி சங்கம் ஒரு இடம் கேட்டு உள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். மகளிர் நிகழ்ச்சிகளுக்கு பிறகு இன்றைய உலகில் டிஜிட்டல் என்பது எந்த இடம் வகிக்கிறது என்றும் அதில் கொட்டிக்கிடக்கும் வாய்ப்புகள் குறித்தும் இளைஞர்கள் புரியும் வண்ணம் திரைப்பட ஒளிப்பதிவாளர் கலைமாமணி திரு. M.M. ரங்கசாமி அவர்கள் ஒரு அற்புத உரை நிகழ்த்தினார்கள்.

அடுத்து பேசிய கார்க்குல இளைஞர்களின் வழிகாட்டி திரு. ஆனந்த்ம் செல்வகுமார் அவர்கள் இளைஞர்களுக்கு கொட்டி கிடக்கும் வேலை வாய்ப்புகளை பற்றியும் தொழில் தொடங்கி செய்வதன் மூலம் எப்படி எல்லாம் பொருள் ஈட்ட முடியும் என்பது பற்றியும் மிக விளக்கமாக எடுத்துரைத்தார்கள். பின்பு பேசிய நமது நம்பிக்கை மாத இதழின் நாயகன் கலைமாமணி மரபின் மைந்தன் முத்தையா அவர்கள் தனது உரையில் தனி மனிதனின் நம்பிக்கை என்பது எவ்வளவு முக்கியம் என்பது குறித்தும் கார்குல மேன்மைகள் குறித்தும் மிக அழகாக எடுத்துரைத்தார்கள்.விழாவின்இடையில்திருச்சிசங்க வளர்ச்சிக்கு பாடுபட்ட Lr. B. வெங்கடாசலம் பிள்ளை, L.N. பரமசிவம் பிள்ளை, Er. N. திருஞானசம்பந்தம் பிள்ளை, கலைவாணர் G. அப்புலிங்கம் பிள்ளை, Er. V. மகாலிங்கம் பிள்ளை, E.K. சண்முகம் பிள்ளை, Er. S.R. சீனிவாசன் பிள்ளை, C. திருஞானசம்பந்தம் பிள்ளை ஆகிய முன்னோர்களின் குடும்பத்திற்கு மரியாதை செய்யப்பட்டது. அதே போல 50 ஆண்டுகளுக்கு முன் சங்கத்தை தொடங்கி மிக சிறப்பாக வழி நடத்தி இன்றும் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் K. ராஜசேகரன் பிள்ளை, மூத்த வழக்கறிஞர் S.B. ஆனந்தன், கேப்டன் R.S. ஜெகதீசன், V. வேலாயுதம் பிள்ளை, விஜய் ஹோட்டல் A. சுந்தரம் பிள்ளை, நவிலு. N.B. பாலசுப்பிரமணியன், S. அகோரம் பிள்ளை திருமதி. கலாவதி சண்முகம் இவர்களை பாராட்டி கௌரவிக்கப்பட்டது. இடை இடையே பரிசு குலுக்கல் நடத்தி, கிரைண்டர், குக்கர், மிக்ஸி, ஃபேன் போன்ற விலை உயர்ந்த பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன.

முதல் நாள் இரவே வருகை தந்த ஏறத்தாழ 100க்கும் மேற்பட்ட கார்குல சொந்தங்களுக்கு இரவு தங்குவதற்கு குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மிக சிறப்பான

முறையில் திட்டமிட்டு மிகப்பெரிய பொருட் செலவில் இந்த விழா நடத்தப்பட்டது.

இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் விளம்பரங்களை அள்ளித் தந்த விளம்பரதாரர்களுக்கும் வழிகாட்டிய மாநிலத் தலைமைக்கும் பிற சங்கங்களில் இருந்து வருகை தந்து எங்களை வாழ்த்திய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எங்களது இதய பூர்வமான நன்றியினை அதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம் நன்றி வணக்கம்.

திருச்சி மகளிரணி

அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு எனும் நாடாச்சிறப்பு.

மேற்கண்ட குறளை தாரக மந்திரமாகக் கொண்ட திருச்சி சங்கத்தின் பொன்விழா சரியான திட்டமிடலோடு மிகச் சிறப்பாக நடந்தேறிய பொன்விழா நிகழ்ச்சியில் திருச்சி மகளிரணி பங்கேற்றது எங்களுக்கு பெருமை. கார்குலத்தை ஒருங்கிணைப்பதே எங்களின் நோக்கம். அடுத்தடுத்து வரும் தலைமுறைக்கு நமது வாழ்வியல் பண்பை ஒரு ஆவணமாக பதிய வேண்டும் என்ற உறுதிமொழியை ஏற்று செயல்பட்டோம். நோக்கம் வலியதாகவும் கட்டாயமானதாகவும் இருந்ததால் அனைத்து மகளிரணியையும் ஒருங்கிணைக்க முடிந்தது. ஒற்றை நோக்கம், ஒரு போன்கால் மூலம் ஒன்றுபட்டு மிகச்சிறப்பானதாக பயனுள்ளதாக அமைந்தது இந்த பொன்விழா கொண்டாட்டம்! அனைத்து மகளிரணியையும் தொடர்பு கொண்டு அவர்களின் வசதிகளை கேட்டறிந்து ஒருங்கிணைப்பதில் பெரும் பங்காற்றிய திருமதி. சிவரஞ்சனி முத்துநாதன் அவர்களுக்கு நன்றி. சரியாக 9.00 மணிக்கு மாநிலத்தலைவர் திரு. K.K.R. சுரேஷ் அவர்கள் கொடியேற்ற பதாகை ஏந்தி வீறு நடைபோட்ட அனைத்து சங்கத்தின் பட்டியல் இதோ!

திருமதி. தேன்மொழி முருகானந்தம் தலைமையேற்ற ஈரோடு மகளிரணி சங்கம் ''முதுமை ஒரு போதிமரம்!'' – திருமதி. ஞான சுதா மஹேஸ்வரி தலைமையேற்ற கொத்தட்டை மகளிரணி சங்கம் இணைவோம் ''இமயம் தொட!'' – திருமதி. பில்டெக் அருள்மொழி தலைமையேற்ற மயிலாடுதுறை மகளிரணி சங்கம் ''குலதெய்வம் போற்றுவோம்; குலத்தை காப்போம்!''–திருமதி.வசந்தாஇளங்கோவன் தலைமையேற்ற பெண்ணாடம் மகளிரணி சங்கம் ''பார்போற்ற காப்போம், நம் கார்குல பாரம்பரியம்!'' – திருமதி. வனஜா இளங்கோவன் தலைமையேற்ற சென்னை (சூளைமேடு) மகளிரணி சங்கம் ''ஒற்றுமை... உழைப்பு... உயர்வு...!'' – திருமதி. கலையரசி ராஜசேகர் தலைமையேற்ற சென்னை (நுங்கநல்லூர்) மகளிரணி சங்கம் ''உறவுகளை மேம்படுத்துதல்!'' – திருமதி. ஹேமலதா பாலு தலைமையேற்ற இளந்தோப்பு மகளிரணி சங்கம் ''ஒன்றுபடுவோம் ஒற்றுமையுடன் செயல்படுவோம்!'' – திருமதி. மீனா மகாலிங்கம் (முன்னாள்) தலைமையேற்ற குடவாசல் மகளிரணி சங்கம் ''தமிழும் சைவமும் எம் கண்கள் நாம் கார்குல பெண்கள்!!'' – திருமதி. மஹாலெட்சுமி ஐயப்பன் தலைமையேற்ற ஜெயங்கொண்டம் மண்டல மகளிரணி சங்கம் ''மகளிர் முன்னேற்றமே சமுதாய முன்னேற்றம்!'' – திருமதி. மைதிலி வைத்தியநாதன் தலைமையேற்ற கும்பகோணம் மகளிரணி சங்கம் ''சாலையோர சேவை; சோலையான வாழ்க்கை!'' – திருமதி. விஜயகுமாரி பாரிவள்ளல் தலைமையேற்ற பாண்டிச்சேரி மகளிரணி சங்கம் ''பாரம்பரியத்தைக் காப்பாற்றுதல்!''.

கார்குல நாள் கொண்டாடுவோம் (ஆடிப்பௌர்ணமி தினம்)

கார்குலத்தை ஒருங்கிணைப்போம்!

என்ற பதாகை ஏந்தி திருச்சி மகளிரணி முன்னெடுக்க வீறு நடை போட்ட அனைத்து மகளிரணி அணிவகுப்பு கண்கொள்ளா காட்சி. இனியொருமுறை நடந்தேறுமோ இந்த சிலிர்ப்பான அனுபவம் நன்றி நன்றி! பொன்னாடை போர்த்தி அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தோம். குலம் தழைக்க பார் செழிக்க பிரார்த்தனையுடன் குத்துவிளக்கேற்றி இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது மேடை நிகழ்ச்சி. தொடர்ந்து வரவேற்பு நடன நிகழ்ச்சி திருமதி. மீனா மோகன் தலைமையில் திருமதி. சித்ரா சண்முகம் வடிவமைத்து 10 சிறுமிகள் நம் கார்குல பண்பாட்டை, தெரிவிக்கும் பாடல் வரிகளுக்கு கும்மி அடித்து அனைவரையும் வரவேற்றது மகா சிறப்பு திருச்சி மகளிரணியும் ஒன்று சேர்ந்து வணங்கி வரவேற்றது சிறப்பு! நமது பண்பாட்டை ஆவணப்படுத்த வேண்டும் என்று திருமதி. வனஜா இளங்கோவன் அவர்களிடம் கேட்டிருந்தோம் அவர்களும் வெகு முயற்சி எடுத்து பலரின் துணை கொண்டு கார்குல வரலாறு, பிறப்பு முதல் இறப்பு வரை, கார்குல சடங்குகள், நாம் கொண்டாடும் 12 மாத பண்டிகைகள், கார்குலத்தின் தனித்தன்மையான சடங்குகள் என அனைத்தையும் தொகுத்து ஆடியோவாகவும், புத்தக வடிவிலும் பதிவு செய்து கொடுத்தார்கள். இந்த ஆவணம் (பென்டிரைவ்) ல் காப்பி எடுக்கப்பட்டு நமது தருமை ஆதீன குருமகா

சன்னிதானம் அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டது. பெருமை கொள்ளும் நிகழ்ச்சி திருமதி. வனஜா இளங்கோவன் அவர்களுக்கும் வடிவமைக்க உதவிய அத்தனை பேருக்கும் நன்றி.

மாலையில் மகளிரணி மேடை நிகழ்ச்சியில்

1. உருத்திராட்சமும், அறிவியலும் பற்றி உரையாற்றிய செல்வி. கீர்த்தி ஸ்ரீ G.M. அவர்களுக்கு நன்றி.

2.திருமதி. கலாவதி சண்முகம் வடிவமைத்த விழிப்புணர்வு நாடகம் சிறப்பாக இருந்தது நன்றி.

3.தருமை ஆதினப்புலவர் முனைவர். சிவ மாதவன் அவர்கள் தலைமையில் "இன்றைய சூழலில் இளம் தலைமுறை எதிர்கொள்ளும் சிக்கலுக்கு காரணம் – பெற்றோர்களே வழக்காடு மன்றம் மிக சிறப்பாக இருந்தது.

ஐயா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

விருந்தோம்பல் மொத்தத்தையும் மிகப்பொறுப்புடனும் சுவை மிகுந்தும் மிகச்சிறப்பாக செய்து தந்த இளையபெருமாள்நல்லூர் திரு. ராஜேந்திரன் அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் சிறப்பான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றியில் திளைக்கும்,

திருச்சி மகளிரணி.

மதுரை

30–07–2023 அன்று மதுரை ஆதீன சொக்கநாதர் திருமண மண்டபத்தில் எங்கள் சங்கத்தின் முதலாவது "மங்கல சந்திப்பு" வெகு சிறப்பாக நடைபெற்றது. 180 சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் படிப்பு, வேலை போன்ற சிறப்புகளை பற்றி எடுத்துரைத்தனர். அன்று வந்திருந்த வரன்கள் பதிவு செய்தவர்களுக்கு கையேடு வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

13–08–23 அன்று சங்கத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. சங்க துணைச்செயலாளர் திரு. N. இராமலிங்கம் கடவுள் வாழ்த்து பாடினார். தலைவர் முனைவர். K. சிவசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்று பேசினார்.

05–08–2023 அன்று மறைந்த சங்கத்தின் மதிப்புறு தலைவரும், மாநிலத்துணைத்தலைவருமான தெய்வத்திரு. இரா. மாரியப்ப பிள்ளை அவர்களுக்கும், 02–08–23 அன்று மறைந்த மதுரை அழகப்பன் நகர் தெய்வத்திரு. R. சுப்பிரமணியன் அவர்களுக்கும் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வந்திருந்த அனைவரும் திரு. இரா. மாரியப்ப பிள்ளையின் அருமை, பெருமைகளையும் அவரது அயராத உழைப்பு பற்றியும் விபரமாக பேசினர்.

நமது சங்க உறுப்பினர்களின் மாணவ, மாணவிகள் சுமார் 10 பேர் CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பித்தனர்.

பொருளாளர் திரு. S. முருகன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது

- C.M. சொக்கலிங்கம், செயலாளர், மதுரை.

கார்காத்தார் ஒப்புரவு இதழ் கடந்து வந்த பாதை

"கைம்மாறு வேண்டாம் கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றும் கொல்லோ உலகு"

என்றார் திருவள்ளுவர்.

மேகம் எந்த பதில் உதவியும் எதிர்பாராமல் மழை பொழிந்து உயிர்களைக் காக்கிறது. அதற்கு ஈடாக அந்த உயிர்களால் மேகத்திற்கு எதுவும் செய்ய முடியாது. அதுபோலவே 'ஒப்புரவு' இதழை நடத்தி வரும் பொறுப்பாளர்கள் எந்த பயனும் எதிர்பாராமல் பெரும் சேவை ஆற்றி வருகின்றனர். மேலையூர் திரு. ராஜசேகரம் பிள்ளையின் சொந்த முயற்சியால் 1980ல் தொடங்கப்பட்ட ஒப்புரவு மாத இதழ் 1990ஆம் ஆண்டு முதல் சென்னை கார்காத்தார் சங்கம் 'கார்காத்தார் ஒப்புரவை' ஏற்று நடத்தி வருகிறது. 2023ஆம் ஆண்டு வரையிலான 34 ஆண்டு கால பயணத்தில் மூன்றே மாதங்கள் மட்டுமே இதழ் வெளிவருவது தடைபட்டது. (கரோனா பெருந்தொற்றுக் காலம்)

எந்த பயனும் எதிர்பார்க்காமல் தொடர்ந்து பணியாற்றி வரும் கார்காத்தார் ஒப்புரவு இதழின் நிர்வாகிகளுக்கும், சென்னை கார்காத்தார் சங்க நிர்வாகிகளுக்கும் கார்குல மக்கள் அனைவரும் நன்றிக் கடன் பட்டுள்ளனர்.

ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. A. சீனிவாசன், புதுச்சேரி.

மன அழுத்தமின்றி வாழுதல்
(STRESS RELIEF)

A. RAJARETHINAM, PORUR,
CHENNAI. PH: 9444224366

இந்த காலத்தில் இளம் சிறுவர்களிலிருந்து, வயதானவர்கள் வரை எல்லோருக்கும் மன அழுத்தம் இருக்கிறது. வாழும் முறைகளில் நிறைய மாற்றங்கள் காணப்படுகின்றன. எந்த வேலையில் ஈடுபட்டாலும் பல காரணங்களால் மனஅழுத்தம் ஏற்படுகிறது. அதற்கு காரணங்கள் என்ன ? இந்த பிரச்சனையை எப்படி சமாளிப்பது ?

வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழும் போது நமது மனமும், உடலும் அதற்கேற்ப ஈடுகொடுக்க வேண்டும். தனியாக நாம் எந்த வேலையையும் செய்ய முடியாது. நமக்கு பலருடைய உதவி, பணம், நேரம், இடம் எல்லாம் தேவை. அது கிடைக்காத போது நமக்கு மன அழுத்தம் உண்டாகிறது. மன அழுத்தம் இரண்டு வகைப்படம்.

1. நேர்மறையான மன அழுத்தம் :– வியாபாரத்தில் நிறைய ஆர்டர்கள் வரும் போதும், அலுவலகத்தில் பெரிய அளவில் பதவி உயர்வு வரும் போதும், ஒரு வீடு கட்டும் போதும், கல்யாணம் போன்ற விழாக்களை நடத்தும் போதும், பல வருடங்கள் கழித்து உறவினர்களையும், நண்பர்களையும் சந்திக்கும் போதும், பரீட்சை முடிவு அறிவிக்கப்படும் போதும் வங்கியில் கடன் உதவி கிடைக்கும் போதும் நேர்மறையான மன அழுத்தம் உண்டாகிறது.

2.எதிர் மறையான மன அழுத்தம் :– E.M.I. கட்ட வேண்டிய போதும், மற்றவர்களிடம் கடுமையான வாக்குவாதம் நடக்கும் போதும், ஒரு மருத்துவரிடம் செல்லும் போதும், போக்குவரத்து நெரிசலிலும், நாம் எதிர்பாராத சம்பவங்கள் நடக்கும் போதும் நமக்கு எதிர்மறையான மன அழுத்தம் ஏற்படுகிறது.

மன அழுத்தம் குறைய நாம் பின் பற்ற வேண்டியவை.

1. தேவையற்ற வேலைகளை ஏற்றுக்கொள்ளமல் இருத்தல்.
2. நடைமுறைகளை மாற்றுதல்.
3. நேர்மையான முறைகளை பின்பற்றுதல்.
4. நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுதல்.
5. வல்லுனர்களை கலந்து ஆலோசித்தல்.
6. பல வேலைகளை ஒரே நேரத்தில் (MULTI TASKING) செய்யாதிருத்தல்.
7. குழந்தைகளுடன் விளையாடுதல்.
8. பிடித்த பொழுதுபோக்கில் ஈடுபடுதல்.
9. நண்பர்களிடம் பேசுதல்.
10. உடற்பயிற்சி செய்தல்.
11. 7 அல்லது 8 மணி நேரம் தினம் தூங்குதல்.
12. விளையாட்டில் ஈடுபடுதல்.
13. நல்ல புத்தகங்களைப் படித்தல்.
14. இயற்கையைப் பாராட்டுதல், தோட்ட வேலை செய்தல்.
15. இறைவணக்கம் செய்தல்.
16. சங்கீதம் கேட்பது, நகைச்சுவை உள்ள சினிமா, அல்லது ட்ராமா பார்ப்பது.

இத்தகைய பழக்க வழக்கங்களைக் கையாண்டு மனதை அமைதியாக வைத்துக்கொண்டால், மன அழுத்தம் இல்லாத வாழ்க்கையை வாழலாம். இந்த எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலை ஓசை, Spoken English for your success போன்ற புத்தகங்களைப் படித்தால் மென்திறன் வளரும்.

வாழ்த்துகிறோம்.

சென்னை நுங்கம்பாக்கம் வருமானவரித்துறை அலுவலகத்தில் பணியாற்றும் திரு. க. சத்யநாராயணன் – திருமதி. ச. தீபா இவர்களின் அன்பு மகள் S.D. மஹதி IX Std DAV (மேல்நிலைப்பள்ளி, கோபாலபுரம், சென்னை) படித்து IIT-ஆன்லைன் தேர்வில் தேர்ச்சி பெற்று 1–9–2023, 2–9–2023, 3–9–2023 மூன்று நாட்கள் அஸ்ஸாம் கௌகாத்தி IIT வளாகத்தில் நடைபெறும் IIT முன்னாள் மாணவர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களுடன் நடைபெறும் கலந்துரையாடலில் பங்கேற்கும் S.D. மஹதி மேன்மேலும் கல்வியில் வெற்றியும் சாதனையும் பெற வாழ்த்துக்கள்.

விவசாயம்

உலகில் உள்ளிருக்கும் ஜீவன்கள் எல்லாம் செல்லரித்துப் போகாமல் இருக்க, வல்லமையாய், வளமையாய் இருக்க வேண்டியது விவசாயம். ஆனால் இன்று விவசாயம் சொல்லப்படும் அளவிற்கு இல்லாமல், அல்லல்பட்டு விவசாயிகளின் வாழ்வு எள்ளல் மொழிக்கு ஆளாகும் நிலைதான் காண முடிகிறது.

பற்றற்று முற்றும் உணர்ந்த ஞானிகள், முனிவர்கள் கூட தாங்கள் உற்று வாழ நீரும், நிலமும் அவசியம் ஆகிறது. அனைவராலும் தொழுது ஆராதிக்கப்பட வேண்டிய விவசாயி, இன்று அழுத கண்ணீரோடு, மனம் குழம்பி, திக்குத் தெரியாமல் விக்கி அழுகிறான், விளைபொருட்களுக்கு தக்க விலை இல்லையென்று.

அஞ்ஞானம் நீங்கவும், மெய்ஞானம் பரப்பவும் முயற்சி எடுக்கும் அளவிற்கு அனைவரும் உயிர் வாழ உறுதுணையாய் இருக்கும் விவசாயத்தை காப்பாற்ற சிரத்தையுடன் நாம் செயல்படுகிறோமா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இந்தியாவின் மக்கள்தொகை 2050–ஆம் ஆண்டில் 160 கோடியைத் தாண்டும் என கணிக்கிறார்கள். அன்றைய நிலையில் அனைத்து மக்களுக்கும் உணவளிக்க நாட்டின் வருடாந்திர உணவு தானிய உற்பத்தி 4–5 கோடி மெட்ரிக் டன்னாக அதிகரிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

மக்களின் அன்றாடத் தேவையான உணவு உற்பத்தியில், மிகப்பெரும் இவ்விலக்கை எட்ட வேண்டுமென்றால், நம் நாட்டின் உணவுப்பொருள் உற்பத்தி நிபுணர்கள் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

விவசாயத்தின் அடிப்படையான மண்வளம், நீர்வளம், பாதுகாகக்கப்பட்டு மழை வளம் பெருக்க, மரம் வளர்த்து, வனங்கள் காக்கப்பட வேண்டும். பயிரிடுதலில் பல்வகைத் தொழில் நுட்பங்களைத் தொலைநோக்குப் பார்வையோடு புகுத்தல் வேண்டும். சுழற்சி முறைவேளாண்மை, கலப்புமுறைவேளாண்மை, ஊடு பயிர் வேளாண்மை திட்டங்கள் பெருக ஆய்வு செய்து வழி காண வேண்டும். மேலும் முக்கியமாக மழைநீர் வீணாகாமல் சேமிக்கப்பட்டு நதிகள் இணைப்பும்சாத்தியமாக்கப்பட்டால், விவசாயத்தையும், வருங்கால சந்ததிகளையும் காக்கலாம்.

விவசாயிகள் பட்ட கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்யும் நிலைமாறி, அவர்கள் திடமாய் வாழ நாம் வடம்பிடித்து புதிய தடம் பதிப்போம். விவசாயிகள் வாழ்வளிக்கும் ஆலயம் போன்றவர்கள். ஆகவே விவசாயிகளைத் துதிப்போம். மதிப்போம். உயிர்பெறட்டும் மக்கள்! ஒளி பெறட்டும் விவசாயிகள்!!

(தமிழகத்தின் முதுகெலும்பான விவசாயம் உடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது நம் கடமை!)

கீரந்தங்குடி நீலா ராஜசேகரன்,
கும்பகோணம்–2.. 9751065491

ஆணவம் அகந்தை

நாராயணன் ஒரு நாள் வைகுண்டத்தில் சயனத்திற்கு சென்ற பொழுது சங்கு, சக்கரம், திருமுடி ஆகியவற்றை ஆதிசேஷன் மீது வைத்தார். வழக்கமாக தன் பாதுகைகளைத் துவாரபாலகர்கள் அருகே விடும் பரந்தாமன் ஆதிசேஷன் மீது வைத்து விட்டார்.

சங்கு சக்கரம் பாதுகையைப் பார்த்து கௌரவத்தால் உயர்வு நாங்கள் இருக்கும் இடத்தில் நீ எப்படி வந்தாய் என்றது.

பகவான் தான் என்னை இங்கே விட்டுச் சென்றார் என்று சொன்னது.

பாதங்களை அலங்கரிக்கும் கேவலமான பாதுகை நீ வழக்கமான இடத்திற்கு போய்விடு என்றன சங்கும் சக்கரமும் பாதுகைக்கு கோபம் வந்தது. மகரிஷிகளும் தேவர்களும் பகவானின் பாதங்களில் திருமுகம் பட வணங்குகிறார்களே தவிர உங்களைத் தழுவி தரிசிப்பதில்லை நான் புனிதமானவன் என்றது.

இருப்பினும் சங்கு சக்கரம் பலம் அதிகமாக இருந்தது. திருவடி கண் கலங்கியது. பகவானிடம் முறையிட்டது.

ராமாவதாரம் நிகழும் போது சங்கு சக்கரம் என் சகோதரர்களாக (பரதன் சத்ருக்கனர்) அவதரிப்பர். இந்தத் திருமுடியின் மீது பாதுகைகளான உங்களை வைத்து 14 வருஷம் பூஜிப்பார்கள். அவரவர்கள் வினைக்கேற்ப அவரவர்கள் தேடிக்கொள்ளும் பயன் இது வைணவ ஆலயங்களில் சடாரி சாத்துவது என்ற சம்பிரதாயம் உள்ளது. சடாரியின் அமைப்பை கூர்ந்து கவனித்தால் அதன் அமைப்பு கிரீடம் போன்ற பீடத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள இரண்டு பாதுகைகள். இறைவன் திருவடிகளைத் தலையில் தாங்கி நம் ஆணவம் அகந்தை எல்லாம் அழியவே இந்த சம்பிரதாயம்.

M. திலகம், மயிலாடுதுறை

3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03.05.1964

மறைவு
24.09.2020

தெய்வத்திரு. **M. மனோகரன்** M.Com.,
(ரைஸ்மில் உரிமையாளர்),
வ.உ.சி தெரு, கழுக்காணி முட்டம்.

அன்பின் இலக்கணமே!
ஆருயிராய் இருந்தவரே
இமைமூடும் நேரத்தில்
ஈசன் உனை அழைத்தாரோ
உறங்க மனமின்றி உலகைவிட்டு சென்றீரோ
ஊக்கமுடன் எனை வழி நடத்தியவரே
என்றும் என்னுடன் இருப்பவரே
ஏன் என்னைவிட்டு பிரிந்தீரோ
ஐவரில் ஒருவராய் வாழ்ந்தவரே
ஒற்றுமையின் ஒளிவிளக்கே
ஓய்வின்றி உழைத்தவரே
ஔடதமாய் வாழ்ந்து ஐம்பூதத்தாரில்
பிரிந்தாலும் இதயம் இயங்கும் வரையில்
நினைவில் வாழும் உங்கள் அன்பு மனைவி

உங்கள் அன்பு மனைவி
S.புஷ்பலதா மனோகரன்
"மனோதமிழ் மாளிகை"
தங்கவேல் வாண்டையார் நகர், கழுக்காணிமுட்டம்.

கண்ணீர் அஞ்சலி

மலர்ந்தது
21–07–1938

உதிர்ந்தது
23–07–2023

திருமதி. அ. தனலட்சுமி அம்மாள்

சென்னை மடிப்பாக்கம் ஷீலா நகரில் வசித்து வரும் அ. சுரேஷ்குமாரின் தாயாரும், சு. கண்ணகியின் மாமியாருமான – திருமதி. **அ. தனலட்சுமி அம்மாள்** அவர்கள் 23.07.2023 அன்று இயற்கை எய்தினார்கள். அவர்களது விருப்பப்படி கண்கள் தானம் செய்யப்பட்டது. காசியில் கங்கையிலும், மயிலாடுதுறையில் காவேரி நதியிலும் அஸ்தி கரைக்கப்பட்டது. திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் கோவில் ராஜகோபுரத்தில் மோட்ஷ தீபம் ஏற்றியும், செம்பாக்கம் மகா பெரியவா கோசாலாவில் கோதானம் செய்தும், அம்மா அவர்களின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர்

மற்றும்

உறவினர்கள்.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
20–8–1928

மறைவு
26–6–2023

மயிலாடுதுறை மாவட்டம், மேமாத்தூர் தெய்வத்திரு. இர. அருணாச்சலம் பிள்ளை அவர்களின் மனைவியும் எங்களது தாயாருமான

திருமதி. அ. விசாலாட்சி அம்மாள் அவர்கள்

நிகழும் சோபகிருது வருடம் ஆனி 11–ஆம் நாள் (26–6–2023) அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அவர்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

நினைவில் வாழும்

A. ராஜரெத்தினம் மற்றும் **R. உமா**
மங்கையர்க்கரசி பன்னீர்செல்வம்

A. ஜெயசீலன் மற்றும் **J. ரேணுகாதேவி**
B. கலைச்செல்வி மற்றும் **S. பாலச்சந்திரன்**

பேரக்குழந்தைகள்

P. தர்மராஜன் – S. ஷோபா
R. சிவப்பிரகாஷ் – S. பிரியா
R. ரவீந்திரன் – R. அனு
J. சுபா – S. அரவிந்தன்
J. அருண் – S. பிரதீபா சுந்தர்

P. கணேஷ்ராஜன் – S. ஷாலினி
P. தீபா – S. சுனில்
B. கார்த்திகேயன் – S. நிவேதிதா
B. ஸ்ரீகாந்த் – R. ரம்யா

மற்றும்

கொள்ளுப் பேரக்குழந்தைகள்

வருந்துகிறோம்

திருமதி. **தி. குணவதி அம்மாள்**

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், பின்னலூர் கிராமத்தை சேர்ந்த திரு. ந. திருநாவுக்கரசு பிள்ளை அவர்களின் மனைவியும், எங்களுடைய தாயாருமாகிய திருமதி. **தி. குணவதி அம்மாள்** அவர்கள் 03–08–2023 அன்று சிவலோக பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

ந. திருநாவுக்கரசு பிள்ளை (கணவர்)

மகன் – மருமகள்

தி. மார்க்கண்டேயன் - சுந்தரி

பேரன் – பேத்திகள்

மா. அபிராமி - ராம்குமார்

மா. சிவசங்கரி

கொள்ளுபேரன் – கொள்ளுபேத்தி

சாய்சுதன், சாய்மித்ரா

மகள் – மருமகன்

ர. புவனேஸ்வரி - ரவிச்சந்திரன்

பேரன் – பேத்திகள்

ர. சோபனா - விஜய்

ர. கிருத்திகா

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

மண்ணுலகிற்கு
15-06-1946

விண்ணுலகிற்கு
18-08-2023

நாகை மாவட்டம் மயிலாடுதுறை தாலுக்கா உளுத்துகுப்பை
தெய்வத்திரு **முத்தையா பிள்ளை - செல்லம்** அவர்களின் மருமகளும்
கிராம கார்காத்தார் சங்க முன்னாள் தலைவர் காலம் சென்ற
திரு **பாலன் பிள்ளை** அவர்களின் மனைவியும் எங்களது தாயுமான

திருமதி B. ராஜேஸ்வரி அம்மாள்

கடந்த 18-08-2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மகள்
M. தேவி (எ) தேவாமிர்தம்
M. மோகன், (RIDE INN CAR RENTAL)

மகன்
B. சுந்தர் (எ) சோமசுந்தரம்
(RAMS COMPUTECH)
அபிராமி, (ABHIRAMI INFOTECH)

பேரன் – பேத்திகள்

E.M. சோம்ராஜ் – அனிதா சோம்ராஜ்
E.M. மணிமாறன் – சிந்து (எ) சிவகாமி மணிமாறன்

S. ராம்ராஜ் M.A., HR - TCS
S. ஐஸ்வரியா B.Com.,
Audit Associate - E & Y Global

கொள்ளுபேத்தி : **ஆத்யா சோம்ராஜ்**

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
22–01–1947

மறைவு
15–07–2023

சபா. வைத்தியநாதன்

மயிலாடுதுறை திருச்சிற்றம்பலம் தெய்வத்திரு. வை. சபாபதி பிள்ளை – தெய்வத்திருமதி. சட்டத்தம்மாள் இவர்களின் மகனாகப் பிறந்து சென்னை நங்கநல்லூரில் கார்காத்தார் சமூக நல சங்க மூத்த உறுப்பினருமாகிய **சபா. வைத்தியநாதன்** அவர்கள் 15–07–2023 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரது மறைவு அறிந்து எங்களது துயரத்தை பகிர்ந்து கொண்ட அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்களது மனமார்ந்த உணர்வுகளை உரித்தாக்குகின்றோம்.

மனைவி : (Late) **V. லலிதா**

நினைவில் வாழும்

மகள் :

ரேவதி சங்கர்

சுபா கல்யாண்குமார்

மருமகன்கள் :

ச. சங்கர்

T. கல்யாண்குமார்

பெயர்த்தி, பெயரன் : **S. சாதனா, K. கவின்**

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
7–7–1952

மறைவு
17–08–2023

க.வை. ஜோதி பிள்ளை

(ஒட்டுநர் – போதகர், தமிழ்நாடு போக்குவரத்து கழகம்)

மயிலாடுதுறை மாவட்டம், நாங்கூர், சீர்காழி வாழ், தெய்வத்திரு. பட்டு (எ) வைத்தியநாத பிள்ளை – மங்கையர்க்கரசி இவர்களின் மூத்த மகனும், திருமதி. மோகனாம்பிகை அவர்களின் கணவரும், எமது தந்தையார் **க.வை. ஜோதி பிள்ளை** அவர்கள் 17–08–2023 வியாழனன்று சிவலோக பதவி அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாசற்ற ஜோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே ! தேனார் அமுதனே! சிவபுர
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே !
அன்பருக்கு அன்பனே ! அமுதீசர் திருமகனே!

என்றும் அன்புடன்

மனைவி. வி. மோகனாம்பிகை ஆசிரியை (ஓய்வு)
மகள். ஜோ. கார்த்திகாயணி
மருமகன் ரா. ராஜ்
பெயரன் ரா. ஸ்ரீ சரண்
பெயர்த்தி ரா. ஸ்ரீநிதி
சகோதரி (தங்கை) V. ஜெயகுமாரி ஜெய்சங்கர்
சகோதரர் V. கருணாநிதி - கீதா
மற்றும் **உறவினர்கள், நண்பர்கள்.**

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th September 2023

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**